அமுதசுரபி

புத்தகத் தொழில் மலர்



மார்ச்
1995

விலை
ரூ. 6

புத்தகத் தொழில் மலர்

புத்தகத் தொழிலைப் பற்றிய கட்டுரைகள் நிறைந்த, சிறப்புப் பக்கங்களை இந்த இதழில் தமிழன்பர்களுக்கு அளிப்பதில் பெருமையடைகிறோம்.

தமிழ் நாட்டில் புத்தகத் தொழில் பல இன்னல்களுக் கிடையே முன்னேறி வருகிறது. புத்தகங்களை வெளியிட்டுத் தமிழ்த் தொண்டாற்றி வரும் பதிப்பாளர்கள் தங்கள் கருத்து களை வெளிப்படுத்தியுள்ளார்கள்.

புத்தகத் தொழில் வளப்ப மாய்த் திகழ்ந்தால் எழுத்தும், எழுத்தாளர்களும் சிறப்படை வார்கள்.

நூல் வெளியீட்டாளர்கள் பிரச்னை மட்டுமே இந்த இதழில் தெரிவிக்கப்பட்டுள்ளது. நூல் தயாரிக்கும் பணியில் ஈடுபட் டுள்ள அச்சகம், பைண்டிங், லேசர் தொழில், மேலட்டை ஓவியம் ஆகிய துறைகளில் ஈடுபட்டுள்ளோரின் கருத்துகள் அடுத்த இதழில் வெளிவரும்.

1957 ஆம் ஆண்டு 'அமுதசுரபி' வெளியிட்ட புத்தகத் தொழில் சிறப்பிதழில் டாக்டர் மு.வ. கட்டுரையொன்று எழுதியிருந் தார். அவருடைய கருத்து 38 ஆண்டுகள் கழிந்த பிறகும் இன்றும் மாறாமல் இருக் கிறது. (அந்தக் கட்டுரையை யும் அடுத்த இதழில் வெளியிடு கிறோம்.)

150 ஆண்டுகளாக சென்னை யில் சிறப்பாகத் திகழும் 'ஹிக்கின் பாதம்ஸ்' புத்தக விற்பனையாளர் களின் விற்பனைக் கூடம் மேலட்டையில் திகழ்கிறது.

சென்னை மாநகரில் எல்லாத் தமிழ் நூல்களும் ஒரே இடத்தில் கிடைக்கும் விற்பனைக் கூடங்கள் ஓரிரண்டே உள்ளன. அண்ணா சாலையில் உள்ள ஹிக்கின் பாதம்ஸ் 150 ஆண்டுகளாக நூல்கள் விற்பனையில் முதன்மை இடம் வகிக்கிறது. தமிழ் நூல் களும் இப்போது அங்கே கிடைக்கின்றன. தமிழ்நூல்கள் விற்பனை அதிகரித்து வருவ தாக, ஹிக்கின்பாதம்ஸ் அதிகாரி திரு.சந்திரசேகர் குறிப்பிட்டார். இந்த விற்பனைக் கூடத்தைப் போட்டோ எடுக்கச் சென்ற போது பிரபல எழுத்தாளர்கள் சிலர் நூல்கள் வாங்கிக் கொண் டிருந்தனர். கவியரசு வைரமுத்து அவர்களும் எழுத்தாளர் ராண் டார் கை அவர்களும் போட்டோ வில் இருப்பதைக் காணலாம். ஹிக்கின்பாதம்ஸ் நிறுவனரின் போட்டோக்களையும், வரிசை யாக நூல்கள் அடுக்கப்பட்டிருப் பதையும் படத்தில் காணலாம்.

வண்ணப் போட்டோ : யோகா

மேலட்டை அமைப்பு : ஜி.கே.மூர்த்தி

எங்கள் தமிழ்மொழி எங்கள் தமிழ்மொழி என்றென்றும் வாழியவே- பாரதியார்

ஆன்மிகம்

இலக்கியம்

கவிதை

சிறுகதை

சோதிடம்

தொடர் கதை

நாணயம்

வரலாறு

அமுதசுரபி

மார்ச் – 95

பவ – பங்குனி


மலர் : 47

இதழ் : 11

பதிப்பாளர்: ஏ.வி.எஸ்.ராஜா, கௌரவ இலக்கிய ஆலோசகர்: என்.வி.சுப்பிரமணியம்,
ஆசிரியர்: கலைமாமணி விக்கிரமன், இதழ் ஆப்செட் அமைப்பு: சிவகுமார்,
அட்டைப்பட ஓவியம்: ஜி.கே.மூர்த்தி, அட்டைப்பட போட்டோக்கள்: யோகா.
ஆண்டு சந்தா : ரூ. 72/-, தனி இதழ் விலை : ரூ. 6/-, ஆயுள் சந்தா : ரூ. 1000/-.

அமுதசுரபி வினாவிடை அரங்கம்

பெண்கள் துறவியாவது ஏற்புடையதா?



அமுதசுரபி வாசக அன்பர்களின் கேள்விகளுக்கு டாக்டர் தவத்திரு குன்றக்குடி அடிகளார் பதிலளிக்கிறார்.

குன்றக்குடித் திருக்கோயிலில் நவக்கிரகங்களை ஒரே திசையைப் பார்த்து எழுந்தருளச் செய்துள்ளதாக அறிகிறேன். அதன் நோக்கம் என்ன?

டி. என். ஸ்ரீனிவாசன், சென்னை - 43.

நமது மக்களில் அதிகமானவர்கள் நவக்கிரகங்களை வணங்குகிறார்கள். மக்கள் உபாசிக்கும் தெய்வங்களின் குணம் அவர்களை அதிட்டிக்கும். அதன் காரணமாகத் தான், தம்முள் சண்டையிட்டுக் கொள்வார்களோ என்று கருதி ஒருமைப்பாடு - ஒற்றுமை உணர்வு வளரட்டுமே என்ற எண்ணத்தில் ஒருமுகமாக வைக்கப்பெற்றன.

ஆனால் இப்போது அறிவியல் அடிப்படையில், அவ்வாறு செய்தது தவறு என்று புலனாகிறது. கோள்கள் தத்தமக்கு எதிர்த் திசையில் இயங்கினாலும், ஈர்ப்பாற்றலால் ஒன்றோடொன்று மோதாமல் உடையாமல் உள்ளன. அதனால்தான் பருவங்கள் உண்டாகின்றன. எனவே மக்களிடையே கருத்து மோதல்கள் இருந்தாலும் அன்பின் ஈர்ப்புக்குக் கட்டுப்பட்டு இயங்கி வருதல் வேண்டும். ஆதலால் எதிர் வரும் குடமுழுக்கின்போது மாற்றி அமைக்கப் பெறும்.

நமது நாட்டின் கல்வித்தரத்தை உயர்த்துவதற்குரிய சுவாமிஜியின் கருத்தை அரிய விரும்புகிறேன். பயிற்றுவிக்கும் கல்வியே பாரத நாட்டை உயர்த்துமென அடியேன் நம்புகிறேன். தாங்கள் என்ன கருதுகிறீர்கள்?

எஸ். நாரம்புநாதன், காஞ்சிபுரம்.

நமது நாட்டின் கல்வித்தரத்தை உயர்த்த, தன்னாட்சிக் குழுவிடம் கல்வித்துறை ஒப்படைக்கப் பெறுதல் வேண்டும். 'தேர்வு' பற்றிய நோக்கம் மாறி, அறிவு பற்றிய நோக்கத்துடன் கல்வி கற்க வழிகாணப்பட வேண்டும்.

'மனைவி அமைவது இறைவன் கொடுத்த வரம்!' எனச் சொல்கிறார்களே? மனைவி மட்டுமா?

எஸ். காளிராஜ், கோவை.



நமது வாழ்க்கையில் தொடர்பு கொள்பவர்கள் அனைவருமே இறைவன் கொடுத்த வரம்தான். மனைவியை மட்டும் கூறக் காரணம், மனைவியை எளிதில் பிரிய இயலாது என்பதால்தான்.

நாவல் இலக்கியம் படித்ததுண்டா?

ம. திருமூலன், பொள்ளாச்சி.

வங்கமொழி நாவல்கள், பிரெஞ்சு நாவலில் 'ஏழை படும் பாடு', லியோடால்ஸ்டாய் எழுதிய 'புத்துயிர்ப்பு', காண்டேகர் நாவல்கள் முதலியன படித்ததுண்டு. தமிழில் 'கல்கி'யின் 'சிவகாமியின் சபதம்'.



சுவாமிஜி! வெகு நாள்களாக வீட்டை விலை பேசி வருகின்றோம். எப்போது வீடு விலைக்கு விற்கலாம்? மனச் சங்கடமில்லாமல் நான் வாழ்வது எப்போது?

கல்யாணி கிருஷ்ணன், பம்பாய் - 64.

ஜோஸ்யம் - குறி சொல்லிப் பழக்கமில்லை. அலட்டிக் கொள்ளாதீர்கள். மகிழ்ச்சியுடன் வாழுலாம்.

கூட்டுறவு பற்றிய தங்கள் கருத்தை 'தினமணி' யில் படித்தேன். கருத்துகள் சரிதான். அவை பேணக்கூடிய சூழ்நிலையில் இன்றைய அரசியல் நெறிகள் துணை செய்கின்றனவா?

நா. செந்தில்வேலன், கமுதி.

இன்று கூட்டுறவு வளர அரசியல் நெறிகள் துணை செய்யவில்லை.

தங்கள் தந்தையார் பற்றியோ, தாயார் பற்றியோ நினைப்பதுண்டா? எந்தச் சந்தர்ப்பத்தில் நினைப்பீர்கள்?

கவிஞர் சுவாதி, புதுக்கோட்டை.

வாழ்க்கையில் நல்ல குணங்கள் மேவும் பொழுது தாயாரை நினைத்துக் கொள்வதுண்டு.

சங்கப் பாடல்களில் தங்களைக் கவர்ந்த பாடல் எது?


புலவர் தாமரை, திருப்பரங்குன்றம்.

"யாதும் ஊரே! யாவரும் கேளிர்!" என்ற பாடல்.

ஆண்களே துறவியாவது தமிழ் நெறிக்கு முற்றிலும் உகந்ததல்ல; ஒரு பெண் துறவியாவதும், ஆதீனத்திற்குத் தலைமை ஏற்பதும் சரிதானா? புதுக்கோட்டையில் அத்தகைய ஆதீனம் ஒன்று இருப்பதைப் பத்திரிகை வாயிலாகப் படித்தேன்.

மு. தமிழ்ச்செல்வன், பம்பாய் - 7.

ஏற்புடையதல்ல.



திருவருள் பேரவை என ஓர் இயக்கம் வைத்திருப்பதாகவும், அதில் எல்லா மதக்காரர்களும் இருக்கிறார்களென்பதும், அதன் தலைவராக நீங்கள் இருப்பதாகவும் அறிகிறேன். அந்தப்



பொறுப்பு, தாங்கள் சார்ந்துள்ள மதத்திற்குத் தாழ்வு நிலையை ஏற்படுத்தாதா?

சாலை இளமுருகன், சென்னை – 1.

எந்த வகையில் தாழ்வு வரும் என்று தாங்கள் கருதுகிறீர்கள்?

இருபது நூற்றாண்டு இலக்கியச் சிறப்புக் கொண்ட தமிழ்மொழிக்கு இதுவரை ஒரே ஒரு முறைதான் ஞானபீடப் பரிசு கிடைத்துள்ளது. மலையாளம், கன்னடம் போன்ற மொழிகளுக்குக் கூட பலமுறை ஞானபீடப் பரிசு கிடைத்து விட்டது. இந்த நிலை எதனால்?

நா. தமிழ்க்குமரன், சேலம்.

ஆழமான ஆய்வுக்குரிய ஒன்று.

பேனா மன்னர் 'கல்கி', முத்தமிழ்க் காவலர் கி. ஆ. பெ. விசுவநாதம், சொல்லின் செல்வர் ரா. பி. சேதுப்பிள்ளை ஆகிய மூவரில் தங்களைப் பெரிதும் கவர்ந்தவர் யார்? எதனால்?

கவிஞர் தில்லை கோவிந்தன், சிதம்பரம்.

கற்கண்டு, சர்க்கரை, வெல்லம் இவற்றில் எது இனிப்புடையது? சொல்லுங்கள், பார்க்கலாம்.

தமிழ்நாட்டில் தற்போது வெளி வருகின்ற தமிழ் இதழ்களில், தமிழ்ச் சமுதாயத்திற்கு ஆரோக்கியமாக வழிகாட்டும் ஒன்றிரண்டு இதழ்களாவது உண்டு எனக் கருதுகிறீர்களா? அப்படி வழிகாட்டும் இதழ்கள் ஒன்றிரண்டைப் பற்றிக் கூற இயலுமா?

புலவர் நா. கதிர்வேலன், செங்கற்பட்டு.

பல இதழ்கள் உள்ளன. பலவும் படிப்பதுண்டு. அமுதசுரபி, கலைமகள், கலைக்கதிர், கல்கண்டு, வளர்தொழில், வேளாண்மை, கால்நடைக் கதிர், நலவாழ்வு முதலியன குறிப்பிடத்தக்கவை.

காவிரிப்படுகை பெருமிதமடைய மற்றுமொரு காரணம் எம்.ஆர்.எல்



சென்னைக்கு அருகே மணலியில் 25 ஆண்டுகளுக்குமுன் செயல்படத் தொடங்கிய மதராஸ் ரிஃபைனரிஸ் லிமிடெட், தொடர்ந்து சுத்திகரிப்புத் திறனைப் பெருக்கி - உற்பத்தி செய்யும் பெட்ரோலியப் பொருள்களின் எண்ணிக்கையை அதிகமாக்கி வருகிறது.

இதன்மூலம் தற்போது ஆண்டுக்கு 70 இலட்சம் டன் கச்சா எண்ணெய் சுத்திகரிப்பு செய்து நாட்டின் மொத்த பெட்ரோலியப் பொருள்களின் தேவையில் சுமார் 12 சதவிகிதம் நிறைவு செய்து வருகிறது.

ஆண்டிற்கு 1700 கோடி ரூபாய்க்கு மேல் விற்பனை மதிப்புடைய எம்.ஆர்.எல்., எரிசக்தி சேமிப்பு, தொழில்நுட்பம், பாதுகாப்பு, சுற்றுப்புறச்சூழல், சுகாதாரம் மற்றும் தொழில் நல்லுறவு போன்ற பல்வேறு துறைகளிலும் தொடர்ந்து சிறப்புடன் செயலாற்றி சாதனை படைத்துவருகிறது.

தற்போது காவிரிக்கரை சமீபத்தில் மற்றுமொரு வற்றாத வளம் சேர்க்கும் கருவூலமாக மலர்ந்துள்ளது. அது - நாகப்பட்டினம் அருகில் பனங்குடியில் அமையப்பெற்று ஆண்டுக்கு ஐந்து லட்சம் டன் உற்பத்தித் திறன் மற்றும் சமையல் எரிவாயு பிரித்தெடுக்கும் வசதிகள் உடைய, எம்.ஆர். எல்.லின் காவிரிப்படுகை சுத்திகரிப்பு ஆலை ஆகும்.

காவிரிப்படுகை சுத்திகரிப்பு ஆலை 8.2.95 அன்று மத்திய பெட்ரோலியம் - இயற்கை நில வாயுத்துறை இணை அமைச்சர் மாண்புமிகு கேப்டன் சதீஷ் சர்மா அவர்களால் நாட்டிற்கு அர்ப்பணிக்கப்பட்டது.

ஆலையின் வளாகத்திற்குள் நடைபெற்ற இவ்விழாவிற்கு 'எம்.ஆர்.எல்'லின் நிர்வாக இயக்குநர் - தலைவர் எஸ். ராமலிங்கம் தலைமை வகித்தார்.

கே. ரவிகுமாரின் வரவேற்புரைக்குப்பின் தொழிலாளர் சங்கத்தலைவர் செல்வராஜ், அலுவலர் சங்கத்தலைவர் பன்னீர்செல்வம், மாவட்ட ஆணையர் ஆர்.கே. பாஸ்கரன், ஆர்.கே. நாரங், நிர்மல்சிங், நாடாளுமன்ற உறுப்பினர் டாக்டர் திருமதி பத்மா ஆகியோர் வாழ்த்துரை வழங்கினர்.

தமிழக அரசின் தொழில்துறை அமைச்சர் மாண்புமிகு எம். சின்னசாமி சிறப்புரையாற்றினார். எம்.பி.லால் நன்றி கூறினார்.

ஆக, கச்சா எண்ணெய், இயற்கை நிலவாயு காவிரிப் படுகையில் அதிகமாகக் கிடைக்கையில் எம்.ஆர்.எல்லின் காவிரிப் படுகை சுத்திகரிப்புத்திறன் அதிகமாகி ஒரு தாய் ஆலையாக உருவாகும். மேலும் அண்டைப் பகுதிகளில் பல பெட்ரோகெமிக்கல் தொழிற்சாலைகள் செயல்பட வாய்ப்பு உண்டாகும். வேளாண்மை சார்ந்த இப்பகுதிகள் தொழில் வளம் மூலம் முன்னேற்றம் அடையும் நாள் வெகு தொலைவில் இல்லை. ●

21ஆவது கோலாகலம்

1974ஆம் ஆண்டு முதல் தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம், தமிழர் திருநாளாம் பொங்கல் விழாவையொட்டி பொருட்காட்சியை நடத்தி வருகிறது.

சென்னை, தீவுத்திடலில் இவ்வாண்டு 21ஆவது அகில இந்திய சுற்றுலா, தொழில் பொருட்காட்சி முந்தைய ஆண்டுகளைக் காட்டிலும் முற்றிலும் மாறுபட்ட வகையிலும் வெகு சிறப்பான முறையிலும் அமைந்திருந்தது.


நூல் வழிக் கல்வி பெற வாய்ப்பு இல்லாத ஏழை எளிய பாமர மக்களும், அறிவியல் தொழில் போன்ற துறைகளில் நம் நாடு அடைந்துள்ள முன்னேற்றங்கள் பற்றி மிகவும் எளிதாகப் புரிந்து கொள்ளும் வகையில் பொருட் காட்சியின் அரங்கங்கள் அமைக்கப் பட்டிருந்தன.

நம் மாநில அரசின் 22 துறைகள், 11 மாநில அரசு நிறுவனங்கள், 4 பிற மாநில அரசு சுற்றுலா-நிறுவனங்கள், 4 மத்திய அரசுத்துறைகள் - நிறுவனங்கள் கலந்து கொண்டு மிகச் சிறப்பான முறையில் அரங்குகள் அமைத்திருந்தன.

23 மாவட்ட அரங்குகள் தனித்தனியே அமைக்கப்பட்டு அங்கே ஏற்பட்டுள்ள முன்னேற்றங்கள், திட்டங்கள் பற்றி விவரித்திருந்தன.

இதைத் தவிர பல்வேறு கைத்தறி சங்கங்களும் தனியார் துறை நிறுவனங்களும் அதிக அளவில் பங்கேற்றுள்ளன.

பல்வேறு மாநிலத்தைச் சார்ந்த 208 அங்காடிகள் எல்லா தரப்பு மக்களும் வாங்கி பயனடையும் வகையில் பல தரப்பட்ட பொருள்களைப் பொருட்காட்சியில் விற்பனைக்கு வைத்துள்ளன.



குழந்தைகளுக்காக அமைக்கப்பட்டிருந்த 'எம்.ஜி.ஆர். சிறுவர் உல்லாச உலகம்' - குழந்தைகளுடன் பெரியவர்களும் பொழுதை மகிழ்வுடன் கழித்திட சிறந்த இடமாகத் திகழ்ந்தது எனலாம்.

நிரந்தரமாக அமைக்கப்பட்டிருந்த மேடையில் தினமும் கிராமியக் கலை நிகழ்ச்சிகள், தந்திரக் காட்சிகள், நடனம், பல குரல் நிகழ்ச்சிகள் நடைபெறுகின்றன.

சென்னை எண்ணெய் சுத்திகரிப்பு ஆலை நிறுவனத்தினர் அமைத்திருந்த அறிவியல் காட்சிக் கூடம் குழந்தைகளுக்கு எளிய முறையில் அறிவியல் அறிவை வளர்த்தது.

ஒலிக்கும் இசைக்கு ஏற்ப ஒய்யார நடனமாடும் வண்ண நீரூற்றும், யானை, டைனோசரஸ் விலங்குகளின் பிரமாண்ட மான முழு உருவ மாடல்களும் சிறுவர் இரயில் நுழைந்து செல்லும் வகையில் அமைக்கப்பட்டிருந்த 'மாதிரிக் குகையும்' சிறுவர்களின் உள்ளத்தைக் கொள்ளை கொள்ளும்.

பாம்புப் பண்ணை, மீன் காட்சியகம், பல தரப்பட்ட ராட்டினங்கள், சிறுவர் இரயில், குதிரை சவாரி, பேட்டரி மோட்டர் கார் சவாரி, திறந்த வெளி திரையரங்கில் தினந்தோறும் நடைபெறும் சினிமா என்று சொல்லிக் கொண்டே போகலாம்.

ஏப்ரல் மாதம் வரை 21ஆவது அகில இந்திய சுற்றுலா மற்றும் தொழில் பொருட்காட்சியின் கோலாகலம் தொடரும்.

சுற்றுலாத்துறை அமைச்சர் மாண்புமிகு நாகூர் மீரானின் தீவிர செயல்பாட்டில், பொருட்காட்சியின் சிறப்பு அதிகாரி திரு. சோம. துரைராஜ் அவர்கள் ஆற்றும் பணி, நம் மாநிலத்தவர் மட்டுமின்றி மற்றைய மாநிலத்தவரும், உள்நாட்டு-வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளும் அறிந்து கொள்ள இப்பொருட்காட்சி வகை செய்கிறது.

செய்திகள்

மனம் விட்டுப் பேசுவோம்

* அமுதசுரபியின் அட்டைப் படத்தில் வாய் பிளந்த பூனையின் அழகைக் கண்டு வாயடைத்துப் போனேன்.

- தாமரைச் செல்வி சுந்தர், திருபுவனம் 612 103.

* அமுதசுரபி இதழின் மூலம் கர்மயோகி எழுதி வரும் அன்னையின் கட்டுரைகள் தவறாமல் படித்து மனமுருகி அவரைத் தியானிக்கும் பழக்கத்தை ஏற்படுத்திக் கொண்டேன்.

- ராஜம் வெங்கட்ராமன், பம்பாய் 400 059.

* மாதந்தோறும் அறுசுவை விருந்தை உள்ளத்திற்கு அளித்து வரும் இதழ். இப்போது முக்கனியுடன் அறுசுவை அளிக்கிறது. ஆம்! கலைமாமணி விக்கிரமன் அளிக்கும் 'கங்காபுரிக் காவலன்', தவத்திரு குன்றக்குடி அடிகளார் அளிக்கும் 'வினா விடை அரங்கம்',' சிலம்புச் செல்வர் எழுதும் 'என் இலக்கிய வாழ்க்கை' அத்தனையும் கற்கண்டு! அதுதான் அமுதசுரபி!

- கல்வே எஸ்.சதாசிவம், புதுச்சேரி 605 001.

* தவத்திரு குன்றக்குடி அடிகளார் கூறிய பதில் ஒவ்வொன்றும் சிந்தனையைத் தூண்டி மகிழ்ச்சியடையச் செய்தன. டாக்டர் தி.முத்து கண்ணப்பர் எழுதும் 'அவ்வை தமிழின்' உவமையான அறிவுரைகள் தெளிவாக படிப்பதற்கு இனிமையாக உள்ளன.

- சி.பா. சந்தான கோபாலகிருஷ்ணன், வேலாயுதம்பாளையம் 639 117,

* அபிராமி அந்தாதியைப் பற்றிக் கேட்டிருக்கிறேனே தவிர, படிக்கும் வாய்ப்பு கிட்டியதில்லை இதுவரை. திருமதி தேவகி முத்தையாவின் உபயத்தால் அர்த்தத்துடன் பாடல்களைப் புரிந்து கொண்டு கற்றுக் கொள்ள அரிய வாய்ப்பு தந்த 'அமுத சுரபி'க்கு நன்றி.

- இந்திரா ஆராவமுதன், ஸ்ரீரங்கம் 620 006



* அட்டைப்படம் அசத்த- கவிதைகள் களிப்பூட்ட- பரிசுக் கதைகள் பரவசம் தந்தன. தகுதிக்குச் சிறந்த சன்மானம். மதுமிதாவின் 'மழைவதம்' சமுதாய விழிப்புணர்வைத் தூண்டியது என்றால், வெ.இறையன்பு அவர்களின் 'பகலில் நட்சத்திரங்களில்' பக்தி நெறியைக் காட்டும் விஸ்வநாத குருக்களும், அவர் மகனும் மனத்தில் நிற்கிறார்கள். சிறந்த படைப்புகளைத் தருவதில் அமுதசுரபி என்றுமே தனித்து நிற்கிறது.

- வி. சுபத்ரா (அஸ்வினி), திருச்சி 620 014

* 'ரிலாக்ஸ்' செய்து கொள்ளும் அழகுப் பூனையின் கவிதையான விநாடி, வண்ணப் போட்டோவாய் சிறைப்பட்டிருந்தது ரசிக்க வைத்தது. 'சில்பி'யின் கை வண்ணத்தில் 'திருக்கடவூர்தரிசனம்' கட்டுரை- இலக்கிய மனசுக்கு நல்ல ரசனை. பரிசு பெற்ற கதைகள் அருமை. குறிப்பாய் மழைவதம். ஆக்கபூர்வ சிந்தனைக்கு முடிவில் வெற்றியே கிட்டும் என்று உறுதிப்படுத்தி இடையில் ஏற்படும் சங்கடங்களில் மனந்தளர வேண்டாம் என்ற உள்ளீடை வலியுறுத்தும் விதம் கதையின் வெற்றி. எழுத்தாளர்களுக்குப் பாராட்டுதல்கள்.

- ரிஷபன் (ஆர். ஸ்ரீநிவாசன்) திருச்சி 620 006

* பிப்ரவரி 95 இதழில் வித்தியாசமான தொழில் நிறுவனம் 'வீகேயென்' படித்த போது மிகவும் மகிழ்ச்சியாக இருந்தது. ஏனெனில் 1972இல் அந்நிறுவனத்தின் தொடக்கம் முதல் அதன் வளர்ச்சியைப் பார்த்து வருகிறேன். இதுபோன்ற கட்டுரைகளில் சம்பந்தப்பட்ட நபரை சிறு அளவிலாவது பேட்டி கண்டு எழுதினால் புதிதாக உருவாகும். தொழிலகங்களுக்கு ஒரு முன்னோடியாகத் திகழுமே!

- சந்திரா ஜானகிராமன் சென்னை 600 004.



நீதியரசர்கள் நடத்திய கோமாதா பூஜை சென்னை அம்பத்தூர் கங்கை நகர் ஸ்ரீபரத்வாஜ ஆசிரமத்தில் சிறப்புற நடைபெற்றது. உலக நலன் கருதி, பொங்கலை முன்னிட்டு, பரம ஹம்ஸ ஸ்ரீமத் புவனேஸ்வரி ஸ்வாமிகள், ஸ்ரீபரத்வாஜ ஸ்வாமிகள் முன்னிலையில், நீதியரசர்கள் பக்தவத்சலம், ராஜு, லட்சுமணன், ஜெயராம் சௌதா, கோவர்தன் ஆகியோர் கோமாதா பூஜையை நடத்தினார்கள். விழா வேந்தன் என்.கே.டி. முத்து உடனிருக்கிறார்.

அமுதசுரபி



வினா விடை அரங்கம்

பிரபல தொழிலதிபர் 'ராம்கோ' சேர்மன்

திரு. பி. ஆர். ராமசுப்பிரமணிய ராஜா

வாசகர்களின் வினாக்களுக்கு விடையளிக்கிறார்.

தொழில், பொருளாதாரம், ஆன்மிகம், பொது நன்மைகள் பற்றிய வினாக்கள் 15.3.95 க்குள் வரவேற்கப்படுகின்றன.

நாணயம்:

நேர்முக வரிகள் – சில உண்மைகள்

எஸ்.இராஜரத்தினம்

ஒரு சமுதாயத்தை வழி நடத்திச் செல்ல வருமானம் தேவை. அந்தத் தேவையை வரிகள் மூலம் நிறைவேற்ற முடிகிறது. முன் காலத்தில் இவை மறைமுக வரிகளாக வசூலிக்கப்பட்டு வந்தன. அறுவடையின் ஒரு பகுதியையோ, இறக்குமதியில் ஒரு பாகத்தையோ அல்லது போர்க் காலத்தில் ஒரு குறிப்பிட்ட தொகையையோ வரியாக வசூலிக்கப்பட்டு வந்திருக்கிறது. பஞ்ச காலத்திலும் வரி வசூலித்தால் அந்த அரசு கொடுங்கோல் அரசாகக் கருதப் பட்டது. வரிகளின் மீதும் வரி அதிகாரிகளின் மீதும் அப்போதிருந்தே ஒருவித வெறுப்பு மக்களுக்கு இருந்து வந்திருக்கிறது என்பது விவிலியத்தில் அரசு வரி அதிகாரிகளின் மீது மக்கள் கற்களை எறிந்ததாகக் கூறப்படும் நிகழ்ச்சியிலிருந்து அறிந்து கொள்ளலாம்.

நம் நாட்டில் சாணக்கியரின் ‘அர்த்த சாஸ்திர’த்திலும், திருக்குறளிலும் அரசின் கடமைகளையும், அது வாங்கவேண்டிய வரிகளைப் பற்றியும் சொல்லப் பட்டிருக்கின்றன. “வேலொடுநின் றான் இடு என்றது போலும், கோலொடு நின்றான் இரவு” என்ற குறளின் மூலம் அநியாய வரி வாங்குவது வழிப்பறிக்குச் சமம் என்றார் திருவள்ளுவர்.

சென்ற நூற்றாண்டில்தான், மறைமுக வரியால் இருப்பவர்களும், இல்லாதவர்களும் ஒரேமாதிரியாக வரிப் பளுவைத் தாங்க வேண்டி இருப்பதால் நேர்முக வரியே சிறந்தது என்ற கருத்து தோன்றியது. அதிக வருமானம் உள்ளவர்கள் மற்றவர்களை விட அதிக வரிப்பளுவைச் சுமக்க வேண்டும் என்பதே இந்தச் சித்தாந்தம். இங்கிலாந்தில் இந்த வரி தோன்றியபோது மிகப் பெரிய எதிர்ப்பும் தோன்றியது. அரசு எல்லா மக்களையும் ஒரே மாதிரியாகப் பாவிக்க வேண்டுமென்றால் வரியும் அவ்வாறே நிர்ணயிக்கப்பட வேண்டும் என்பது அதை எதிர்ப்பவர்களின் வாதம். ஆயினும், அதிக வருமானம் உள்ளவர்கள் கொஞ்சம் அதிகமாகவே வரி கட்டுவதுதான் நியாயம் என்பது இப்போது ஒப்புக் கொள்ளப்பட்ட ஒரு கொள்கை.

இருப்பினும், மறைமுகமாக எவ்வளவு வரி சுமத்தப்பட்டாலும் அதைக் கண்டுகொள்ளாமல் நேர்முக வரி குறைவாக இருப்பினும் கூட, அதை எதிர்ப்பவர்கள் இன்றும் என்றும் உண்டு. அதனாலேயே இன்று அரசுகள் மறைமுக வரிகளின் மூலமாகவே அதிகமான வரவைப் பெறுகின்றன. நம் நாட்டிலும் இதே நிலைதான். இது தவறு என்பது பலராலும் ஒப்புக்கொள்ளப்பட்ட ஒன்று. ஆயினும் ஒரு ஜனநாயகத்தில் மக்களின் ஓட்டைப் பெறுவதன் அவசியத்தால் இந்த மறைமுக வரிகளுக்கும் நேர்முக வரிகளுக்கும் உள்ள வித்தியாசம் விரிந்துகொண்டே போகிறது.

மறைமுக வரிகளாக நாம் செலுத்தும் வரிகள் முக்கியமாக விற்பனை வரியும், உற்பத்தி வரியும் ஆகும். இறக்குமதியின் மூலம் மூலப் பொருள்கள் மீது செலுத்தப்பட்ட வரிகள் நாம் கொடுக்கும் விலையின் ஒரு பகுதி ஆகிறது. இதனால் நாம் ஒரு பொருளை வாங்கும் போது இதில் ஒரு கணிசமான பகுதி வரிப் பணமாகப் போகிறது. சில ஆடம்பரப் பொருட்கள் மீது விதிக்கப் படும் வரி மிக அதிகம். அவ்விதமான பொருட்களை நாம் வாங்கும் போது ஒன்றுக்குப் பாதி அல்லது அதற்கு மேலும் வரி செலுத்துகிறோம். சிகரெட் போன்ற பொருட்களுக்குச் செலுத்தப்படும் வரி ஏறக்குறைய முக்கால் பகுதிக்கு மேலும் வரியாகத்தான் செலுத்தப்படுகிறது. புகைபிடிப் போரில் ஒரு சிலராவது அவர்கள் வாங்கும் வெள்ளை வண்ண சிகரெட்டில் வரிப்பகுதியில் கறுப்பு வண்ணம் தீட்டினால், அது வெள்ளை நிற சிகரெட்டாக இருக்காது என்பதை அறிந்தால் இந்த புகை பிடிக்கும் பழக்கத்தை விடுவார்களா?

நாம் செலுத்தும் மறைமுக வரிகளைக் கணிக்கும்போது நேர்முக வரிகளாக நாம் செலுத்துவது மிகமிகக் குறைவு. வரிக் குறைப்பு என்பது நாம் செய்ய வேண்டுமானால் நாம் வாங்கும் பொருட்களின் எந்த அளவு குறைக்கப்பட்ட வரி செலுத்தப் பட்டு இருக்கிறது என்பதை அறிந்து வாங்கினால் நாம் சிக்கனமாக இருக்க இயலும். சிறு தொழில்களுக்கும், கைத் தொழில்களுக்கும் மறைமுக வரிகளில் இருந்து விலக்கோ அல்லது வேறு சலுகைகளோ அளிக்கப்பட்டிருக்கும். அதனால் இப்பொருட்கள் பெரிய தொழில் உற்பத்தியாளர்களிடமிருந்து வாங்கும் பொருட்களைவிட மலிவான விலையிலேயே இருக்கும். ஆயினும் பெருந் தொழில் விற்பன்னர்கள் அவற்றை அதிக அளவிற்கு விளம்பரம் செய்தோ அல்லது அவற்றைக் கவர்ச்சிகரமான முறையில் ‘பாக்கிங்’ செய்தோ விற்கும்போது நாம் அதிக அளவில் வரி செலுத்துவதுடன் அந்தக் கவர்ச்சிக்கும் சேர்த்தே விலை கொடுக்கிறோம். மொத்த உற்பத்தியாளர்கள் உற்பத்திச் செலவை ஓரளவு குறைக்க முடிந்தாலும் கூட நாம் கொடுக்கும் விலை அதன் தரத்திற்கதிகமாகக் கொடுக்கிறோம். உதாரணமாக, கதர் கைத்தறி ஆடைகளின் விலைக்கும் மில் துணிகளின் விலைக்கும் உள்ள வித்தியாசத்தைக் கூறலாம்.


பொருளாதார விற்பன்னர்கள் நேர்முக வரிகளை அதிகப்படுத்தி மறைமுக வரிகளைக் குறைக்க வேண்டுமென்று கூறுவதற்கு அது நியாயமானது என்பதை மட்டும் காரணமாகக் காட்டுவதில்லை. குறைந்த வருமானம் உள்ளவர்களிடமிருந்து வரியாகப் பெறுவதைக் குறைத்தால் அந்தப் பணத்தை தங்களுக்கு வேண்டிய தேவைகளைப் பூர்த்தி செய்ய முடியும். இந்தத் தேவைகளினால் உற்பத்தியும், வேலை வாய்ப்பும் பெருகும். நாட்டின் முன்னேற்றத்திற்கும் இது நல்லது.

→

சமீப காலத்தில் நமது நேர்முக வரி விகிதங்கள் மிகவும் குறைக்கப்பட்டிருக்கிறது. இதன் மூலம் வரி ஏய்ப்பு குறையும் என்பது ஒரு காரணம்.

நமது நாட்டில் குறைந்தபட்சமாக வருமானம் ரூ: 35,000/-க்குக் கீழ் வரி விலக்கு உண்டு. இது கூட ஒரு குடிமகனின் சராசரி ஆண்டு வருமானத்தைப் பார்க்கும் போது 4 மடங்குக்கும் அதிகமாக உள்ளது. மேலை நாடுகளில் சராசரி வருமானத்தை விட இரண்டு பங்குக்கு மேற்படாது இருந்தாலேயே குறைந்தபட்ச வரி அளவு இருக்கிறது. இதனால் பொருளாதார விற்பன்னர்கள் இப்போதிருக்கும் குறைந்தபட்ச வரி அளவைக் கூட சற்று அதிகமாக இருப்பதாகவே கருதுகின்றனர். இந்தக் குறைந்தபட்ச அளவு 80-(1) பிரிவின் கீழ் கொடுக்கப்படும் ரூ: 10,000/- ஆயுள் காப்பு முதலிய முதலீடுகளில் கொடுக்கப்படும் வரிச்சலுகை ஆகியவற்றை எல்லாம் கணக்கில் கொண்டால் ரூ: 70,000/- வரை வருமானம் உள்ளவர்கள் வரி செலுத்த வேண்டிய தேவையில்லை. இருப்பினும் இந்தக் குறைந்தபட்ச அளவைக் கூட்ட வேண்டுமென்பதே பெரும்பாலானோர் விருப்பம். அரசியல் காரணங்களுக்காக இவை கூட்டப்பட்டாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை. இதை ஈடுகட்ட மறைமுக வரிகள் கூட்டப்பட்டாலும் கூட நம்மில் பலர் அதைக் கண்டுகொள்வதில்லை.

நமது பொருளாதாரம் மறைமுக வரிகளால் எவ்வளவு தூரம் பாதிக்கப்பட்டிருக்கிறது என்பதை நாம் உணர வேண்டும். காந்தியடிகள் உப்பிற்கு வரி வேண்டாம் என்று சொன்னதன் காரணம் இதனால்தான். மக்கள் இந்தப் பொருளாதார உண்மையை உணர்ந்தால் நமது அரசு சில நிர்ப்பந்தங்களிலிருந்து விடுவிக்கப் பெற்ற ஒரு நல்ல நியாயமான வரித் திட்டத்தை வகுக்க உதவும். ●



சின்னத் திரையில் ஜெ.ஜெ.டி.வி.

விண்கோள் தொலைக்காட்சி ஒளிபரப்பில் தமிழ்ப் புத்தாண்டு முதல் 'ஜெ.ஜெ.டி.வி'யின் இனிய அலைவரிசை தொடங்கப்படவுள்ளது.

மணிலாவில் இருந்து ஒளிபரப்பப்பாகும் இந்த அலைவரிசையை 142° (டிகிரி) கோணத்தில் 82 நாடுகளில் கண்டு களிக்கலாம்.

மாலை 6 மணி முதல் இரவு 11 மணி வரை ஒளிப்பரப்பாகும் ஜெ.ஜெ.டி.வி., வாரத்திற்கு மூன்று திரைப்படங்களையும், ஜெ.ஜெ.டி.வி.க்காக பிரத்யேகமாகத் தயாரிக்கப்பட்ட திரைப்பட முன்னணிக் கலைஞர்களின் புதுமை ததும்பும் தொடர்களையும் ஒளிபரப்ப உள்ளது.

இளைய தலைமுறையின் இனிய நண்பனாக- வளரும் தலைமுறைக்கு வழிகாட்டியாக- வாழ்கின்ற மனிதருக்குத் தத்துவ ஞானியாக- புதியதொரு பரிமாணத்தை அளிக்க, ஜெ.ஜெ.டி.வி.யின் நிர்வாக இயக்குநர் திரு.வி.பாஸ்கர் முனைப்புடன் செயல்பட்டுக் கொண்டிருக்கிறார்.

ஜெ.ஜெ.டி.வி.என்றும் ஜெயித்திட வாழ்த்துவோம்!



சச்சிதானந்த பிரம்மம் என்பது சத்து, சித்து, ஆனந்தம் எனப்படும். நாம் சத்தியம் என்பது 'சத்' என்பதையேயாகும். பிரம்மம் உலகை முதலில் 'சத்' ஆக சிருஷ்டித்தது. அதுவே ஆதி, முதல், Truth, Existence, Being என்ற சொற்களால் குறிக்கப்படுவது.

நாம் சிருஷ்டியின் ஆரம்பத்திலில்லை, முடிவில் இருக்கிறோம். நாம் உள்ள இடத்தில் இந்த சத்தியத்தை எப்படி காண்பது? எந்த உருவத்திலுள்ளது, தனித்துள்ளதா? அன்னை சாதகர்களிடம் வலியுறுத்திப் பேசிய கருத்துகள், opening, sincerity, conservation, transformation, freshness, being alive விழிப்பு, உண்மை, சமர்ப்பணம், திருவுரு மாற்றம், புத்துணர்வு, ஜீவனுள்ள செயல் ஆகியவையாகும். இவற்றுள் நாம் இங்கு கருதுவது உண்மை, sincerity எனப்படும். இது 'சத்' என்னும் சத்தியத்தை அறிய அவசியம்.

மனத்திலுள்ளதை ஒளிக்காமல் - உள்ளொன்று வைத்துப் புறம் ஒன்று பேசாமல் - நடப்பதை நாம் sincerity உண்மை என்போம். இறைவனின் அருள் நம் வாழ்வில் செயல்படும் மன நிலையை உண்மை என்கிறார். உண்மையான பிரார்த்தனைகள் அனைத்தும் பலிக்கும் என அன்னை சொல்லியிருப்பதை ஒரு சாதகர் அன்னையிடம் கூறி "எனக்கு வயிறு வலிக்கிறது. நான் பிரார்த்தனை செய்தேன். உண்மையாகப் பிரார்த்தனை செய்தேன். வலி ஏன் போகவில்லை?" என்று கேட்கிறார். "நீ உண்மையாக இருக்கின்றாய், ஆனால், உன் வயிறு உண்மையாக இல்லை' என்று அன்னை பதில் கூறுகிறார். சாதகருக்குப் புரியவில்லை. குழம்பி நிற்கிறார். 'அன்னை எதை உண்மை என்கிறார்? என் வயிற்றுவலி போக வேண்டும் என்று தானே நான் பிரார்த்தனை செய்தேன்? வயிறு உண்மையில்லை என்றால் என்ன பொருள்'? என்பவை அவர் குழப்பங்கள். ஒரு மாணவன் பரீட்சைக்கு நெடுநேரம் படிக்க உண்மையாக விரும்பினால், அவனது ஆழ்ந்த ஆர்வம் தூக்கத்தையும், சோம்பேறித்தனத்தையும் அகற்றி விடும். படிப்பு முடியும் வரை அவனுக்குத் தூக்கம் வராது. படுத்தாலும், பாடம் குறையானால் தூங்கமுடியாது. எழுந்து பாடத்தை முடித்து விட்டுத்தான் படுப்பான். இவன் உண்மையானவன். இவனது உண்மையான உணர்வு இவனை ஊடுருவி உடலையும் தொடுவதால், படிப்பு முடியாமல் உடல் தூங்க முடிவதில்லை.

மற்றொருவன் கொஞ்ச நாழிகை படித்தால் அப்படியே தூங்கி விடுகிறான். இவனும் உள்ளபடி படிக்க விரும்புகிறான். "நான் என்ன செய்வேன்? தூக்கம் என்னை மீறி வருகிறது" என்பான். இவன் மனம் உண்மையாகவும், உடல் உண்மையில்லாமலும் இருக்கிறது. எப்படியும்

படிக்க வேண்டும் என்று இவன் மனம் உணர்வதைப் போல் உடல் உணர்வதில்லை. அன்னை இதை insincerity உண்மையில்லை என்கிறார். வயிற்று வலி போக வேண்டும் என நாம் பிரார்த்தனை செய்தாலும், வயிறு வலியை விடச் சம்மதிக்கவில்லை என்பதை அன்னை உன் வயிற்றுக்கு உண்மையில்லை என்கிறார். வயிற்றுக்கு உண்மையிருந்தால் நாம் பிரார்த் தனை செய்யும்பொழுது குரலின் உற்பத்தி ஸ்தானம் மெதுவாக நகர்ந்து வலிக்கும் இடத் திற்குப் போகும். அங்கிருந்து ஒரு குரல் எழுந்தாலும் வலி போகும்.

"நோயின் அவஸ்தை தாங்க முடியாமல் எனக்கு அமைதியான முடிவை அளிக்க வேண்டும்" என்று பிரார்த்தனை செய்தவரின் கண் மூடியது, நா உள்ளே சென்றது. அத் தனையும் அடங்கியது. ஆக்ஸிஜன், குளுகோஸ் அகற்றப்பட்டன. வீட்டிற்குச் செய்தி போய் உறவினர்களும் முடிவைக் காண வந்தனர். நோயாளி கண் விழித்தார். தெளிவாக இருந் தார். எதுவும் புரியாத டாக்டர்கள் மீண்டும் ஆக் ஸிஜன் கொடுத்தனர். மறுநாள் நோயாளி எழுந் தார், நடந்தார், வீட்டிற்குப் போனார், அத்துடன் அவரைப் பல ஆண்டுகளாகப் பீடித்திருந்த நோயும் போய் விட்டது. நோயாளியின் மனம் முடிவைக் கேட்டது. ஆழ்ந்த பக்தியுள்ளவர் என்பதால், எதையும் உடல் பொருள் ஆவி அனைத்தும் கொடுத்துச் செய்யும் உண்மை யுள்ளவர் என்பதால், அவர் செய்த பிரார்த் தனைகள் உடலின் ஆழத்திலிருந்து எழுந்தவை என்பதால், அவர் உடலுக்கு உண்மையுண்டு, அன்னை மீது நம்பிக்கை உண்டு என்பதால், மனம் முடிவை நாடியபோதும், உடல் அன்னையை நாடியது. 24 மணி நேரத்தில் 24 வருட நோய் முற்றிலும் நீங்கிவிட்டது. இது sincerity, உண்மை, உடலின் உண்மையாகும்.

வாழ்வில் நடக்கும் ஒவ்வொரு செயலும் இறைவனின் உருவம். நம்மைச் சுருக்கி வெளிப் படுத்துபவையாகும். எந்த ஒரு சிறு செயலும் செய்பவரை முழுமையாக வெளிப்படுத்துகிறது என்பது தத்துவம். மனிதன் பிரபஞ்சத்தின் சிறு உருவம். பிரபஞ்சம் பரமாத்மாவின் வெளிப்பாடு என்பவை தத்துவம் என்பதால்,

ஒவ்வொரு செயலும் பரமாத்மாவின் சிறு உருவமாகும்.

செயல் என்பது வாழ்வில் பரமாத்மாவின் திருமுகம்.

பரமாத்மா உண்மையின் செறிந்த உற்பத்தி ஸ்தானம். சிருஷ்டியில் பரமாத்மா பொய்யாக மாறி, மீண்டும் மெய்யாகத் திருவுரு மாற்ற மடைகிறார். நாம் பொய் என்று விலக்குவது பரமாத்மா விரும்பி ஏற்றுக் கொண்ட தோற்றம். பொய் என்பது தோற்றம் என நாம் அறிந்து, அது மெய்யாகத் திருவுரு மாறுவதைப் பரிணா மம் என உணர்ந்தால், இம்மாற்றத்தால் நாம் திருவுரு மாற்றமடையலாம்.

சிறு குழந்தையாக இருக்கும்பொழுது மெய் அதிகமாகவும், பொய் குறைவாகவும் உள்ளது. வயது ஆனால் பொய் வளர்ந்து மெய் குறை கிறது. பொய்யின் அளவு மெய்யின் அளவை விட அதிகமாகும் நிலையில் உடல் மரண மடைகிறது.

மனிதன் பொய்யை மெய்யாகக் கருதுகிறான்.

பொய்யைப் பொய் என அறிவது யோகம்.

பொய்யை மெய்யாக அறிவது மனித வாழ்வு.

பொய்யை மெய்யின் திரையாக அறிவது யோக வாழ்வு.

உள்ளதை மறைப்பதைப் பொய் எனவும், மறைக்காமல் சொல்வதை மெய் எனவும் நாம் கருதுகிறோம். இது மெய்யின் ஒரு வடிவம். வாழ்வின் அனைத்துச் செயல்களும் பொய்யும், மெய்யும் கலந்தவை. செயலின் தன்மையைப் பொருத்து, மெய் வளர்வதுண்டு; அல்லது பொய் வளர்வதுண்டு. மெய் வளரும் செயல்கள் மெய் யின் உருவமாகும், பொய் வளரும் செயல்கள் பொய்யின் உருவமாகும். எந்தச் செயலையும் பொய் அல்லது மெய் என அறுதியிட்டுக் கூற முடியாது. எது வளருகிறதோ - மெய் அல்லது பொய் - அதன் வடிவமாக அமைகிறது அச் செயல். இதமாகப் பேசினால், பேச்சு, மெய் யின் வளர்ச்சிக்கு உதவும். கோபமாகப் பேசி னால், பேச்சு, பொய் வளர உதவும். கோபம், பொய்யின் உருவம். இனிமை, மெய்யின் திரு வுருவம்.

இந்திரா காந்தி அன்னையோடு நெருக்க மான தொடர்பு கொண்டிருந்த பொழுது "நான் உண்மையை மட்டும் பின்பற்றுகிறேன். மற்ற வற்றை விலக்குவேன்" என அன்னைக்கு எழுதி னார். அன்னை தான் எழுதியவற்றை இந்திரா புரிந்து கொள்ளவில்லை என வருத்தப்பட்டார். இந்திராவை அழைத்து வந்த நந்தினிக்கும் அன்னை எழுதியது புரியவில்லை. எனவே அன்னை, "சத்தியம் என்றும் சத்தியமாக இருக் கிறது. இந்திராவும், நந்தினியும் அறிவது சத்தியமில்லை. சத்தியம் என்றும் சத்திய மாகவே உள்ளது" என, சத்தியத்தை வலி யுறுத்தி எழுதினார்.

இந்திராவுக்கும், நந்தினிக்கும் புரியாத சத்தி யம் எது? அது நமக்குப் புரிவதெப்படி?

சுத்தம் சத்தியத்தின் சிருஷ்டியின் உருவம்.

அசுத்தம் பொய்.

தாழ்ந்த குரல் சத்தியத்தின் உருவம்.

சத்தம் பொய்யின் வெளிப்பாடு.

திறந்த மனம் ஆண்டவனின் அரங்கம்.

மறைத்துப் பேசுவது பொய் வளரும் பூங்கா.

விசுவாசம் இறைவன் வெளிப்படும் உறவு.

துரோகம் இறைவனை மறைக்கும் இடம்.

கட்டுப்பாடு சத்தியம்.

ஆசை பொய்.

பேராசை பொய் வளர்க்கும் பொக்கிஷம்.

உடல் நலம் மெய்.

நோய் பொய்.

sincerity உண்மையாக நடப்பது 'சத்'

insincerity பொய்யாக நடப்பது 'அசத்'.

அறிவு மெய்.

அறியாமை பொய்.

சுறுசுறுப்பு சத்தியம்.

சோம்பல் அசத்தியம்.

பெருந்தன்மையும், பொறாமையும் மெய்யின் வெளிப்பாடு; பொய்யின் வெளிப்பாடு.

அன்பு மெய்.

முரட்டுத்தனம் பொய்.

கடமை மெய்.

கடமையைத் தவறுதல் பொய்.

நன்றியறிதல் மெய்.

நன்றி கொல்லுதல் பொய்.

நம்பிக்கை மெய்.

அவநம்பிக்கை பொய்.

கீழ்ப்படிதல் மெய்.

கீழ்ப்படியாமை பொய்.

ஒழுங்கு மெய்.

ஒழுங்கில்லாதது பொய்.

தான் ஏற்றுக் கொண்ட கடமையை நிறைவேற்றுவது மெய். பிறரோடு நாம் சேர்ந்து செயல்படும்பொழுது, அவர்களுக்கு நம் கடமையை நிறைவேற்ற அவர் அனுமதிக்காக சந்தர்ப்பங்கள் உண்டு. வாங்கிய கடனைத் திருப்பிக் கொடுத்தால், மீண்டும் கடன் தரலாம். ஒருவர் அக்கடமையிலிருந்து தவறிய பின், நாம் தொடர்ந்து நம் கடமையைச் செய்ய முடியாது. அது மனிதனால் முடிந்த காரியமன்று. மனிதன் இறைவனுக்குத் தன் கடமையில் தவறுகிறான் என்றாலும், இறைவன் மீண்டும் தன் கடமையைச் செய்கிறார். அன்னை பூவுலகில் வாழ்ந்த வாழ்வு அதற்கு எடுத்துக்காட்டு. அதுவே சத்தியத்தின் திருவுருவம்.

3

பொது வாழ்க்கையிலே ஈடுபட்டதால் எனக்கு, பொது அறிவும் நாட்டுப் பற்றும் பெரியவர்களோடு பழகுகிற சகவாசமும் பெரியவர்கள் பேச்சைக் கேட்கிற பாக்கியமும் கிடைத்தன.

'என் இலக்கிய வாழ்க்கை'

சிலம்புச் செல்வர் ம.பொ.சி



திருவள்ளுவர், இளங்கோ, கம்பர் ஆகிய மகாகவிகள் தமிழினத்தில் தோன்றினர் என்ற செய்தியை முதன்முதலாக சுப்பிரமணிய பாரதியார் மூலம்தான் நான் அறிந்து கொள்ள முடிந்தது.

அந்த நாளில் தேச பக்தர்களுடைய ஒரே இலக்கியம் சுப்பிரமணிய பாரதியாருடைய தேசியப் பாடல்கள்தாம். தேச வெறி பிடித்த பிறகு நான் ஓர் இலக்கியம் படித்தேன் என்றால், அதில் முதல் இலக்கியம் சுப்பிரமணிய பாரதியாரின் பாடல்கள் தாம்.

எளிதில் நாங்கள் படிக்க வில்லை. அந்நிய ஆட்சியினர் அதைச் சட்ட விரோதமாக்கி விட்டார்கள். அதை வைத்துக் கொண்டிருந்தால்கூட சிறைத் தண்டனை கிடைக்கும்.

தொடக்கப் பள்ளிக்கூடங்களில் பாடங்கள் வைப்பதற்குக்கூட அரசாங்கம் மறுத்துவிட்டது. அந்த நிலையில் நாங்கள் எப்படியோ சட்டத்தை மீறி ஜெயிலுக்குப் போகத் தயாராக இருப்பவர்களாகத்தான் பாரதியார் பாடல் களைப் படித்துக் கொண்டு இருந்தோம். பொதுக் கூட்டங்களில் பாடிக் கொண்டும் இருந்தோம். நான் சங்கீதத்தில் ஞானமில்லாதவன். பெயர் சிவஞானமே தவிர, சங்கீத ஞானம் எனக்குச் சிறிதும் கிடையாது. ஆயினும் பாரதியார் பாடல்களை மேடையில் பாடுவதற்கு சங்கீத ஞானமே தேவையில்லை. தைரியம்தான் தேவைப் பட்டது.

மேடையில் நின்று வெறி பிடித்து விட்டால் பாராட்டு கிடைத்து விடும்.

பாரதியின் ஆவேசப் பாடல் களை – அவையும் தேசியப் பாடல் களை – கண்ணன் பற்றியோ, சரஸ்வதி பற்றியோ, மற்றவையோ நான் பாடி யாரும் ரசிக்க முடியாது. இருந்தாலும் பாடல்களில் பிரிட்டிஷ் ஆட்சிக்கு எதிரான ஆவேசப் பாடல்களை அந்நாளில் பொது மேடைகளில் நான் நன்றாகப் பாடுவேன். பலரால் பாராட்டவும் பெற்றிருக்கிறேன். அந்த வகையிலே 'வள்ளுவன் தன்னை உலகினுக்கே தந்து வான் புகழ் கொண்ட தமிழ்நாடு' என்ற வாசகம் என் மனதில் அச்சடித்தாற் போன்று பதிந்து விட்டது.

'நெஞ்சையள்ளும் சிலப்பதி காரமென்றோர் மணியாரம் படைத்த தமிழ்நாடு' என்று அவர் சொன்னதன் பொருளைப் புரிந்து கொண்ட பின்னர்தான் நான் சிலப்பதிகாரம் படித்துப் பொருள் உணர்ந்தேன்.

சிலம்பிலே, விடுதலை வீரரான – அரசியல்வாதியான பாரதியாரின் நெஞ்சை அள்ளியது எந்தக் காண்டமாக இருக்க முடியும்? முதலில் உள்ள புகார்க் காண்டமாகவோ, இறுதியில் உள்ள வஞ்சிக் காண்டமாகவோ இருக்க முடியாது.

மத்தியில் உள்ள மதுரைக் காண்டமாகத்தான் இருக்க முடியும் என்று நான் நன்றாக உணர்ந்தேன். ஏனென்றால், அரசனை எதிர்த்து, கண்ணகி போர் புரிவது மதுரைக் காண்டத்தில்தானே? மதுரையை எரித்துப் புரட்சி நடத்தியதும் மதுரைக் காண்டத்தில் தானே?

பாரதி, 'நெஞ்சையள்ளும் சிலப் பதிகாரம்' என்றார். நெஞ்சைக் கவர்வது வேறு; அள்ளுவது வேறு.

முதல் காண்டமான புகார்க் காண்டத்தில் மாதவியுடன் கோவலன் பாடியும் அவள் ஆடியும் கூத்தடிக்கிறார்களே அது:நான் வருகிறது. புகாரின் வாணிபம் வர்ணிக்கப்படுகிறது; இந்திர விழாவின் சிறப்பு வர்ணிக்கப் படுகிறது. மற்றபடி நெஞ்சை அள்ளக்கூடிய அளவுக்கு புகார்க் காண்டத்தில் செய்தி இல்லை. வஞ்சிக் காண்டத்திலே கண்ணகிக்குக் கோயில் எடுக்கப் படுகிறது; அந்தக் கற்புத் தெய்வம் வழிபடப்படுகிறாள். காண்டத்தின் இறுதியிலேயே கதை முடிந்து விடுகிறது.

ஆகவே, பிற்காலத்தில் சிலப் பதிகாரத்தை நான் படித்தபோது, பாரதி 'நெஞ்சையள்ளும் சிலப் பதிகாரம்' என்று சொன்னது மதுரைக் காண்டத்தை வைத்துத் தான் என்று நான் தெளிவாக உணர்ந்து கொள்ள முடிந்தது.

அதேபோல, 'வள்ளுவன் தன்னை உலகினுக்கே தந்து வான் புகழ் கொண்ட தமிழ்நாடு' என் கிறார். கிறிஸ்துவப்

பாதிரிமார்கள் பாரதி வாழ்ந்த காலத்திலே ஓரளவுக்குத் தான் வள்ளுவர் புகழ் பரப்பும் பணியில் ஈடுபட்டுஇருந்தார்கள்.

பாதிரிகள் திருக்குறளுக்குச் செய்திருக்கிற சேவை அளவிடற்கரியது. அதை சர்வதேச இலக்கியமாக மாற்றிய பெருமை கிறிஸ்துவப் பாதிரிமார்களுக்குத்தான் உண்டு.

நாம் சொல்லிப் பெருமை கொள்ளலாம், ஆனால் தமிழன் தானே கற்றுக் கொள்ளாதபோது - உலகமெல்லாம் எப்படி பரப்பப் போகிறோம்?

இன்றும் உலக மொழிகளிலுள்ள இலக்கியங்களோடு தமிழ் இலக்கியங்களைப் பரிமாற்றம் செய்து கொள்ளத் தமிழன் தயாராயில்லை.

வடமொழி இலக்கியங்களோடு கூட - அதாவது சம்ஸ்கிருதம்; வங்காளம்; மகாராஷ்டிரம் போன்ற மொழிகளோடு - புகழ் பெற்ற இலக்கியங்களை மொழி பெயர்த்துத் தமிழுக்குப் பெருமை தேடவும்; பிற மொழிப் புலவர்களைத் தமிழ் நாட்டிற்கு அறிமுகப்படுத்தவும் குறைந்த அளவில்தான் வேலை நடக்கிறது. இங்கே!

அந்தக் காலத்தில் பாரதியார், 'வள்ளுவன் தன்னை உலகினுக்கே தந்து வான் புகழ் கொண்ட தமிழ்நாடு' என்று சொன்னார் என்றால், அவரது தீர்க்க தரிசனத்தைத்தான் காட்டுவதாக நான் எண்ணுகிறேன். பிற்காலத்தில் அப்படியும் நடக்கும் என்று அவர் நம்பினார்.

அவ்வையைப் பற்றி பாரதியாரைப் போன்று வேறு யாரும் அவ்வளவு புகழ்ந்ததில்லை. பாட்டிலே புகழ்வது மட்டுமில்லை; உரைநடையிலும் கட்டுரைகளிலும் - வள்ளுவரை விட, இளங்கோவை விட, கம்பரை விட - அவ்வையாருக்குத்தான் அதிக மதிப்புக் கொடுத்திருக்கிறார்.

எல்லா நாடுகளிலும் இலக்கியத்தின் மூலம் வாழ்க்கை நெறிகளை வகுத்துக் கொடுத்தவர்கள் ஆண்களாகத்தான் இருப்பார்கள். தமிழில்தான் ஒரு பெண்மணியான அவ்வையார், எப்படி எப்படியெல்லாம் மக்கள் வாழ வேண்டும் என்று நீதிகளைப் போதித்தார் என்றே சொல்ல வேண்டும்.

ஓர் ஆங்கிலேயன் என்னைக் கேட்டான், 'உங்கள் நாட்டிலே - உங்கள் மொழியிலே ஷேக்ஸ்பியரைப் போல, ஷெல்லியைப் போல, மில்டனைப் போல மகாகவிகள் உண்டா?' என்று.

அவனோடு வாதத்தில், வள்ளுவனை, இளங்கோவை, கம்பனைப் பற்றிச் சொல்லி நான் பெருமைப்பட்டிருக்க முடியும்.

அவனை விஞ்சிவிட வேண்டும் என்ற ஆசையிலே, 'உங்கள் நாட்டிலே, உங்கள் மொழியிலே, பெண்கள் கவி பாடியிருக்கிறார்களா?' என்று கேட்டேன்.

அவன், 'அப்படியானால் உங்கள் மொழியிலே - தமிழிலே - பெண்களும் கவி பாடுவார்களா?' என்றான்.

'ஆமாடா, ஆமாம்!' என்று சொன்னேன்.

'அவ்வையைப் போல் நீதி போதித்தவர்கள் உலகில் யார் இருக்கிறார்கள்? அவர் அரசவைப் புலவராக இருந்திருக்கிறார்; அரசர்களுக்கெல்லாம் நீதி போதித்தார்; சண்டையிடும் அரசர்களோடு பேசி சமரசம் செய்து வைத்திருக்கிறார். பிள்ளைப் பருவம் தொட்டு பெரிய படிப்பு - பட்டப்படிப்பு வரை அவருடைய இலக்கியங்கள் பாடமாக இருக்கின்றன' என்றும் நான் பெருமையோடு சொன்னேன். அவன் வியந்து போனான்.

அவ்வையைப் பற்றி ஒரு நூல் 'அவ்வை-யார்?' என்ற பெயரிலே எழுதியிருக்கிறேன்.

பாரதியிடம் எனக்கு ஏற்பட்ட பயிற்சியால்தான் அந்த நூலை நான் எழுத முடிந்தது.

கம்பரைப் பற்றி பாரதி மிக அழகாக ஒரு வார்த்தை சொல்கிறார், 'எல்லையொன்றின்மை எனும் பொருள் அதனை, கம்பன்....' அங்கு இங்கு என்றில்லாதபடி எங்கும் பிரகாசமாக - ஆனந்த பூர்த்தியாகியுள்ள பரம்பொருள் - 'எல்லையொன்றின்மை எனும் பொருள் அதனை' கம்பன் குறிகளால் காட்டிட முயல்கிறானாம். அதைக் 'குறிகளால் காட்டி - தலைவர் அன்னவர்க்கே சரண் யாங்களே!' என்ற கம்பரின் காப்புச் செய்யுளே போதும். அதனால், தமிழ் ஜாதியை அமரத் தன்மை வாய்ந்தது என்கிறார் பாரதி.

கம்பனையும் நான் நேசித்தது பாரதியின் மூலம்தான். பாரதி ஒருவன் தோன்றி இல்லையானால், எனக்கு இவ்வளவு இலக்கியப் பயிற்சி ஏற்பட்டிருக்கும் என்று சொல்ல முடியாது. ஆனால், பெரும் புலவர்கள் அதை ஒப்புக்கொள்ள மாட்டார்கள்.


சுயம்புலிங்கம் என்றால், தானாக, புற்றெடுத்து வளர்ந்தது; செய்யப்பட்ட லிங்கமென்றால் தயாரிக்கப்பட்டது. தமிழில் எம்.ஏ., படித்தவர்கள், வகுப்பில் தயாரிக்கப்பட்டவர்கள். நான் காலத்தால் உருவாக்கப்பட்டவன்.

ஆகவே, பாரதி ஆங்காங்கே சுட்டிக் காட்டுகின்றானே அந்தச் சொற்கள் மூலம் வள்ளுவனிடம், கம்பனிடம், இளங்கோவிடம், அவ்வையாரிடம் மிகவும் ஈடுபாடு கொண்டேன்.

பாரதியைப் பற்றி 14 நூல்கள் எழுதியிருக்கிறேன். பாரதி நூல் பட்டியல் என்று ஒரு நூல் வெளியாகி இருக்கிறது. பாரதியாரைப் பற்றி யார், யார்; எந்தெந்த; என்னென்ன பெயரில்; எவ்வளவு நூல்கள் எழுதியிருக்கிறார்கள் என்று முழுமையாகத் திரட்டிக் கொடுத்து இருக்கிறார்கள். அதில் என்னுடைய நூல்கள்தான் அதிகம். அவ்வளவும் ஆராய்ச்சி நூல்கள். அவ்வளவும் புதுப்புதுக் கருத்துகளைக் கொண்டவை.

நான் நாட்டைப் படித்து விட்டு, ஏட்டைப் படித்தேன். மற்றவர்களெல்லாம் ஏட்டைப் படித்துப் பட்டம் பெற்றுவிட்டு, பிறகு நாட்டைப்படிக்கிறார்கள்.

பிரிட்டிஷ் ஆட்சிக் காலத்தில் நமக்கு வைத்த பாடத் திட்டத்தைப் பாருங்கள்; பழைய காலத்திலே 'ஹரி நமோத்து சிந்தம்' என்று பாடம் தொடங்குவார்கள். 'அறம் செய விரும்பு' எனத் தொடங்கும் ஆத்தி சூடிதான் முதல் பாடப் புத்தகம்.





இப்படி நீதியை, அறத்தை, ஒழுக்க நெறியைப் போதிக்கின்ற பாடங்கள் அப்போது இருந்தன. ஆனால் பிரிட்டிஷ்காரன் வந்து அதைத் தலைகீழாக மாற்றி, 'படபட', 'டப டப', 'கட கட' என்று வார்த்தைகளைப் போட்டு பாட நூல்கள் வைத்தான். வல்லோசை வருவதே தவறு.

பாட நூல்களின் தொடக்கத்தில் காப்புச் செய்யுளோ, கடவுள் வாழ்த்தோ இல்லை.

வல்லோசை உந்தியிலிருந்து ஒலியெழுவது; தமிழ், கண்டத்திலிருந்து (தொண்டையிலிருந்து) ஒலி எழுவதால் அது மெல்லோசையாகிறது.

ஆனால் அந்த 'ஙஞணநமன', 'யரலவழள', 'கசடதபற' ஆக மூன்றில் ஒரு பங்குதான் வல்லோசை; இரண்டு பங்கு மெல்லோசை. அதனால், அந்த மெல்லோசையிலிருந்து வருகிற 'அறம் செய விரும்பு' என்று வருகிற அந்தப் பாடல்கள் இன்று ஏது?

அதைப் படித்தவர்கள் இப்போது இல்லையே? திண்ணைப் பள்ளிக்கூடத்திலிருந்து தான் கம்பன் தோன்றியிருக்க முடியும்; வள்ளுவன் தோன்றியிருக்க முடியும்; இளங்கோ தோன்றியிருக்க முடியும். இல்லையேல், குருகுலத்தில் கற்றிருப்பார்கள். அந்தக் குருகுலம் இன்று ஏது?

அத்தகைய படிப்பின் மூலம் வந்த அறிவால் வந்த சமுதாயம் செம்மையாக இருந்தது; இன்று அந்தச் சமுதாயம் மறைந்து போய் விட்டது.

2 - அபிராமி அந்தாதி

தேவகி முத்தையா

12. கண்ணியது உன்புகழ், கற்பது உன்நாமம் கசிந்துபத்தி
பண்ணியது உன்னிரு பாதாம்புயத்தில் பகல்இரவா
நண்ணியது உன்னை நயந்தோர் அவையத்து
நான்முன் செய்த
புண்ணியம் ஏது? என் அம்மே! புவி ஏழையும் பூத்தவளே!

நான் என்றும் ஈடுபாட்டுடன் மனத்தில் கருதியது உனது திருப்புகழதனை! நான் என்றும் கற்பது - பாடுவது உனது திருநாமம் தனை! நான் உள்ளம் உருகித் தொண்டு செய்து வழிபடுவது உனது திருவடித்தாமரைகளை! இரவும் பகலும் நான் விரும்பிக் கலந்து பழகியது உன்னை விரும்பிய அடியவர் குழுவினருடன் மட்டுமே! மனம், வாக்கு, மெய் என்ற முக்கரணங்களில் நிறைந்த பக்தியையும் அடியார் கூட்டத் தொடர்பினையும் நான் பெற முற்பிறவியில் செய்த புண்ணியம் தான் என்னவோ? நான் அறியேன்! ஏழு உலகங்களையும் பெற்றெடுத்த அன்னையே!

13. பூத்தவளே! புவனம் பதினான்கையும் பூத்தவண்ணம்
காத்தவளே! பின் கரந்தவளே! கறைக்கண்டனுக்கு
மூத்தவளே! என்றும் மூவாமுகுந்தற்கு இளையவளே!
மாத்தவளே! உன்னையன்றி மற்றுஓர் தெய்வம் வந்திப்பதே?

பதினான்கு உலகங்களையும் பிறப்பித்து மலரச் செய்தவளே! அவ்வாறு மலரச் செய்த வண்ணம் என்றும் நீங்காது நின்று காப்பவளே! காத்து, அவற்றை மாயையினால் தன்னுள் மறைப்பவளே! ஆலகால நஞ்சை உண்ட நீலகண்டனுக்கு முன்தோன்றி மூத்தவளே! திருமாலிற்கு என்றும் முதுமை எய்தாத தங்கையாய் இருப்பவளே! உயர்ந்த கடும் தவத்தினை உடையவளே! இத்தனை சிறப்புகளையும் பெற்ற உன்னைத் தவிர மற்ற வேறு தெய்வத்தை நான் துதித்து வழிபடுவேனோ?

14. வந்திப்பவர் உன்னை வானவர் தானவர் ஆனவர்கள்
சிந்திப்பவர் நற்றிசை முகர் நாரணர்; சிந்தையுள்ளே
பந்திப்பவர் அழியாப் பரமானந்தர்; பாரில் உன்னைச்
சந்திப்பவர்க் கெளிதாம் எம்பிராட்டி நின் தண்ணளியே.

உன்னை வணங்குபவர் தேவர்களும் தானவர்கள் எனும் அசுரர்களுமாம்! உன்னைத் தியானம் செய்பவர்கள் நான்முகனான பிரமனும், திருமாலான விஷ்ணுவுமாம்! தமது உள்ளத்தில் யோகத்தால் கட்டிப் பிணைப்பவர் அழியாத பேரானந்த உருவான சிவபெருமான். இத்தனை உயர்ந்தோர் அனைவரும் போற்றும் தெய்வம் ஆயினும் இப்பூவுலகத்தில் உன்னைத் தரிசிக்க விரும்பும் அடியார்களுக்குக் குளிர்ச்சி பொருந்திய உனது திருவருள் விரைவில் எளிதாகக் கிட்டுகின்றது... என்னே நின் கருணை!

15. தண்ணளிக் கென்று முன்னே பலகோடி தவங்கள்
செய்வார்
மண்ணளிக்கும் செல்வமோ பெறுவார்? மதிவானவர்தம்
விண்ணளிக்கும் செல்வமும் அழியா முத்திவீடுமன்றோ;
பண்ணளிக்கும் சொல் பரிமள யாமளைப் பைங்கிளியே!


உனது குளிர்ச்சி பொருந்திய அருளினை வேண்டி முற்பிறவிகள் அனைத்திலும் 'பலகோடி'யெனும் அளவில் தவங்கள் செய்தோர் இவ்வுலகில் கிடைக்கக்கூடிய பொன், பொருள், புவியாளும் உயர்நிலை போன்ற உலகியல் செல்வங்களை மட்டுமா பெறுவர்? இல்லை! பல கோடி தவங்கள் செய்த அந்த மாதவர்கள் உனது அருளால் பெறக்கூடியவை வானுலக இன்பமாகிய சொர்க்க போகமும் அழியாத முக்தி எனும் பேரின்பமுமாகும் அல்லவா! கேட்பவர் செவிக்கு இனிமையான பண்ணிசைக்கும் பச்சைக் கிளியின் தோற்றத்தையும் இயற்கையான தெய்விக மணத்தையும் உடைய சியாமளா தேவியே!

16. கிளியே! கிளைஞர் மனத்தே கிடந்து கிளர்ந்து ஒளிரும்
ஒளியே! ஒளிரும் ஒளிக்கு இடமே! எண்ணில் ஒன்றுமில்லா
வெளியே! வெளிமுதல் பூதங்களாகி விரிந்த அம்மே!
அளியேன் அறிவளவிற்கு அளவானது அதிசயமே!

அழகுடன் கூடிய, கொஞ்சிப் பேசும் பச்சைக்கிளி போன்றவளே! உனது உறவினர் ஆகிய அடியார்கள் மனத்தில் உள்ளுணர்வாய் ஊறிப் பின்பு ஞானப் பேரொளியாக வளர்ந்து காட்சி தருபவளே! சந்திரன், சூரியன், அக்னி போன்ற சுடர்தரும் அனைத்து ஒளிகளுக்கும் மூலாதாரமாக இருந்து ஒளியூட்டுபவளே! ஆய்ந்து எண்ணிப் பார்த்தால் எதுவும் இல்லாத வெளியாக, உருவமற்ற சூன்யமாக இருப்பவளே! ஆகாயம் முதலான பஞ்சபூதங்களாக விரிந்த என் அன்னையே! இரக்கத்திற்குப் பாத்திரமாகிய எளியவனான எனது சிற்றறிவிற்கு எட்டும் அளவிற்கு இரங்கி வந்து அருள் செய்தது எத்தகைய அதிசயம்!

17. அதிசயமான வடிவுடையாள்! அரவிந்தம் எல்லாம்
துதிசய ஆனன சுந்தரவல்லி துணையிரதி
பதிசய மானது அபசயமாக முன்பார்த்தவர்தம்
மதிசய மாகவன்றோ வாமபாகத்தை வவ்வியதே!

வேறு எங்குமே காண்பதற்கு அரிய அதிசயமான பேரழகை உடையவளே! தாமரை





மலர்கள் அனைத்தும் போற்றித் துதிக்கின்ற பேரெழில் பொருந்திய வெற்றித் திருமுகத்தினைக் கொண்ட பூங்கொடியே! இரதியின் துணைவனும் பதியுமான மன்மதனின் தோல்வியே இல்லாத அந்த வெற்றி (ஜயம்) தோல்வி காணுமாறு நெற்றிக்கண்ணால் நோக்கிய சிவபெருமானின் மதியானது வெற்றி காணும் வகையில் அல்லவா அவரது வாம பாகத்தை (இடப்பாகத்தை) உனதாக்கிக் கொண்டாய்!

18. வல்லிய பாகத்து இறைவரும் நீயும் மகிழ்ந்திருக்கும்
செல்வியும் உங்கள் திருமணக் கோலமும் சிந்தையுள்ளே
அல்லியம் தீர்த்து என்னை ஆண்ட பொற்பாதமும் ஆகிவந்து
வெவ்விய காலன் என்மேல் வரும்போது வெளிநிற்கவே

உன்னால் விரும்பிக் கவர்ந்து கொள்ளப் பெற்ற இடப்பாகத்தைக் கொண்ட சிவபெருமானும் நீயும் இணைந்து மகிழ்ந்திருக்கும் இனிய காட்சியின் அழகும் உங்களது திருமணக்கோலமும் என் மனத்தினுள் இருக்கும் குறைபாடுகளை நீக்கி ஆண்டு கொண்ட திருவடிகளும் தோற்றம் தர, கொடிய எமன் என்னை அழைக்க எதிர்வரும்போது வெளிநின்று நீ அருளவேண்டும்.

19. வெளிநின்றநின் திருமேனியைப் பார்த்தென் விழியும் நெஞ்சும்
களிநின்ற வெள்ளம் கரைகண்டதில்லை, கருத்தினுள்ளே
தெளிநின்ற ஞானம் திகழ்கின்ற தென்ன திருவுளமோ?
ஒளிநின்ற கோணங்கள் ஒன்பதும் மேவி உறைபவளே!

வெளிப்பட்டு நின்ற உனது மூர்த்தி வடிவினைக் கண்ட எனது விழியும், நெஞ்சும் கரை காணாத ஆனந்தத்தில் திளைக்கின்றன! ஆனந்தக் களிப்பூட்டும் அத்தரிசனம் எனது சிந்தையில் ஞானத்தையும் தெளிவையும் அருளுகின்றது. அதுவும் உனது திருவருளோ? ஸ்ரீசக்ரத்தின் ஒளி பொருந்திய ஒன்பது கோணங்களிலும் எழுந்தருளி விளங்கும் அபிராமியே!

20. உறைகின்றநின் திருக்கோயில் நின்கேள்வர் ஒருபக்கமோ
அறைகின்ற நான்மறையின் அடியோ, முடியோ? அமுதம்
நிறைகின்ற வெண்திங்களோ கஞ்சமோ? என்றன் நெஞ்சகமோ?
மறைகின்ற வாரிதியோ? பூரணாசல மங்கலையே!

நீ குடியிருக்கும் திருக்கோயில் உன் கணவரான சிவபெருமானின் ஒரு பாகமான இடப் பக்கமா? உனது புகழை அறைகூவும் வேதங்களின் அடிப்பகுதியான பிரணவமந்திரமா...? இல்லை... அதன் உச்சிப் பகுதியான உபநிடதங்களா? அமுதக் கிரணங்கள் பொருந்திய சந்திர மண்டலமா? தாமரை மலரா? என் இதயமா? மறைகின்ற கடலா? இவற்றில் எது? பூரணமான நிலைத்த மங்கலத்தை உடைய அன்னையே, சொல்.

21. மங்கலை செங்கலசம் முலையாள் மலையாள் வருணச்
சங்குஅலைச் செங்கை சகலகலாமயில் தாவுகங்கை
பொங்கு அலைதங்கும் புரிசடையோன்புடை ஆளுடையாள்
பிங்கலை நீலி செய்யாள், வெளியாள், பசும் பெண் கொடியே!

நித்ய சுமங்கலியாய் என்றும் மங்களத்தைத் தருபவளே! சிவந்த செம்புக் கலசங்கள் போன்ற தனங்களை உடையவளே! இமவான் என்ற மலையரசனின் மகளாகத் தோன்றி கயிலாய மலையின் அரசனான சிவபெருமானின் மனைவியாக என்றும் மலையில் உறைபவளே! கடலில் உதிக்கும் சங்கினால் ஆன வளையல்களை அணிந்த, சகல கலைகளிலும் உயர்ந்து, மயில் போன்ற சாயல் உடையவளே! பொங்கித் தாவும் கங்கையில் அலைகளை ஒடுக்கித் தன் முடியில் சூடிய சிவபெருமானின் இடப்பாகத்தைக் கொண்டவளே! பொன்நிறத்தவளே! நீல நிறத்தைக் கொண்ட காளி வடிவினளே! சிவந்த நிறத்தைக் கொண்ட திருமகளே! வெண்ணிறமான சரஸ்வதி வடிவுடையவளே! பச்சை நிறத்துக் கொடி போன்ற பெண்ணே! அபிராமியே!

(வளரும்...)

அவ்வை தமிழ்

அறவுரையும் அறிவுரையும்




டாக்டர் தி. முத்து கண்ணப்பர்

அவ்வையார் ஒரு சிற்றூர் வழியாக ஒரு நாள் சென்று கொண்டிருந்தார். தெருக் கோடியில் ஒரு நீண்ட கொட்டகை. அதன் பக்கத்தில் நிறையக் கருங்கற்களும், பாறைத் துண்டுகளும் கிடந்தன. அக் கொட்டகையினுள்ளிருந்து 'டக் டக்' என விட்டு விட்டு ஓசை வந்து கொண்டிருந்தது. அங்கிருந்த கற்களின் அருகே அவ்வையார் சென்றார். சிதைந்த உருவங்களோடு சில கற்களும் அங்குக் கிடந்தன. அக் கொட்டகை, சிற்பம் செதுக்கும் சிற்பப் பட்டறை என்பதைப் புரிந்து கொண்டார். சிதைந்த உருவக் கல் ஒன்றை மெல்லத் தூக்கி நிமிர்த்திப் பார்த்தார். அது திருமகள் - இலட்சுமி உருவம்! அவயவங்கள் எல்லாம் மிக அழகாகச் செதுக்கப்பட்டிருந்தன. ஆனால் அச் சிலையின் முகத்தில் மூக்குப்பகுதி உடைபட்டிருந்தது. "ஆ..ஃ..ஆ! எவ்வளவு அழகான சிலை. இதன் மூக்கு உடைபட்டுவிட்டதால் அல்லவா இது தூக்கி எறியப்பட்டுக் கிடக்கிறது! ஏன்? மூக்கைச் சரிப்படுத்த முடியாதா? வேறு மூக்கைக் கல்லால் செதுக்கி அதில் பொருத்தி விட... ஊ, உம், முடியாது. கல்லோடு கல்லைச் சேர்த்தால் எப்படி ஒட்டும்? பிளந்த கற்களைப் பழையபடி இணைக்க முடியாதே! இதுவே பொன்னால் செய்யப்பட்ட சிலையாய் இருந்தால் பொடி வைத்து உருக்கி அழகாய்ப் பொருத்திவிடலாம். ஊனம் தெரியாமல் செம்மைப் படுத்தித் திருமகளின் எழிலான காட்சியைக் கண்டுகளிக்கலாம்!" என்று சிந்தித்துக் கொண்டே அவ்விடத்தை விட்டுச் சென்று விட்டார்.

சிறிது தூரம் சென்ற பிறகு அங்கு ஒரு தாமரைக் குளத்தைக் கண்டார். தெளிந்த நீர் நிறைந்த குளம். செந்தாமரை மலர்கள் பூத்துக் குலுங்கிப் பொலிவுடன் காட்சியளித்தன. தம்மை மலர்வித்த பகலவனைக் கண்டு பூரித்து, அவனுக்கே (சூரியனுக்கே) தம்மை முழுவதுமாக அர்ப்பணம் செய்து விட்டதை மௌனமாக உணர்த்திக் கொண்டிருந்தன. அருகருகே இருந்த மொட்டுகள், தாமும் அந்நிலை அடையத் தவம் செய்வது போலக் கூம்பி நின்றன! இலைகள் நீர்த் துளிகளாம் முத்துகளை ஏந்திக் கொண்டிருந்தன. அத் துளிகள் 'எங்களை விரைவில், உன்னோடு ஐக்கியப்படுத்திக் கொள்' என்று சூரியனைக் கெஞ்சிக் கொண்டிருந்தமை போல் தோன்றின.

அருகே சென்று, அக் குளத்தின் மாசு மறுவற்ற தெளிந்த தூய நீரை, அவ்வையார் கையால் எடுத்துப் பருகி, அக் குளத்தின் எழிலில் திளைத்துச் சற்று நேரம் அங்கேயே அமர்ந்துவிட்டார்.

குளத்தில் சிறியனவும் பெரியனவுமான பல்வகை மீன்கள் சுதந்திரமாகத் துள்ளிக் குதித்துக்



கொண்டிருந்தன. ஒரு புறத்தில் மீன்கள் ஒருங்கே மொய்த்துக் கொண்டு ஒன்றுடன் ஒன்று மோதிக் கொள்ளாமல் அமைதியாக இரையைச் சுவைத்துக் கொண்டிருந்தன.

'குறையறிவு படைத்த இந்த மீனினம், ஒன்றோடு ஒன்று பகை கொண்டு முட்டி மோதிக் கொள்ளாமல், அமைதியாக இரையைத் தின்று கொண்டுள்ளனவே! நிறையறிவு - ஆறறிவு படைத்த மனிதர்கள் இவ்வாறு ஒருங்கிணைந்து செயல்படுவார்களா? அப்பப்பா, தன்னலமே தலைவிரித்தாட, எனக்கு உனக்கு என்று பகையும் பொறாமையும் கொண்டு முட்டி மோதிக் கொள்வார்களே!' என்று தம்முள் எண்ணிக் கொண்டு சற்று நிமிர்ந்து, குளத்தின் மறுகரையைப் பார்த்தார்.

ஒரு வேடன், கையில் வில்லை வைத்துக் கொண்டு, அக் குளத்தில் விரைந்து ஓடிக் கொண்டிருந்த பெரிய மீன் ஒன்றன்மீது குறிவைத்து அம்பை எறிந்தான். அந்த அம்பு நீரைக் கிழித்துக்கொண்டு, ஊடுருவிச் செல்லும்போது, அம்பினால் விலகிய நீர் உடனுக்குடன் இணைந்து சென்று சேர்ந்து கொள்வதைக் கண்டார்.

அவ்வையார் உள்ளம் ஏதோ ஆழ்ந்த சிந்தனையில் பதிந்திருப்பதை அவர் முகம் உணர்த்திற்று. ஆம், அவர், முன்னர் தாம் கண்ட நிகழ்ச்சிகளை மீண்டும் நினைவு கூர்கிறார்.

"கற்சிலை ; எழில் தவழும் திருமகள் உரு வம்! செதுக்கும்போது மூக்குச் சிதறுண்டு போனதால் தூக்கி எறியப்பட்டு விட்டது; பயனற்றுக் கிடக்கிறது. அதுவே பொன்னால் செய்யப்பட்டதாக இருந்தால், பொற்கொல்லர்கள் அதனை மீண்டும் பழையபடி பொருத்தி விடுவர். இதோ, இங்கு, வேடன் மீனின்மீது எய்த அம்பால் பிளவுண்ட நீர் உடனுக்குடன் தானாகவே கூடி விடுகிறது!" என்று அம்மையார் தமக்குள் மெல்லப் பேசிக் கொண்டார்.

பின்னர், கோபத்தின் தன்மையை எண்ணிப் பார்க்கிறார். "கோபம்; அப்பப்பா பொல்லாதது. அது மக்களுக்கு இயல்பானது; உடன் பிறந்தது. மக்களுக்கு மட்டுமா? இயங்குகின்ற உயிரினங்கள் அனைத்துக்குமே இக் கோபம் உடன் பிறவிக் குணம் தான். ஆனால், பகுத்தறிவு படைத்த மக்களிடம்தான் இக் கோபத்தின் கொடுமை அதிகம். கோபத்தால் அழிந்த, அழிகின்ற குடும்பங்கள் எத்தனை ! மன்னர்கள், அரசுகள், நாடுகள் எத்தனை, எத்தனை ! எண்ணவே இதயம் நடுங்குகிறதே! கோபமே பாவங்களுக்கெல்லாம் தாய் தந்தை; குடிகெடுக்கும்; சீர் குலைக்கும்; உறவறுக்கும்! சுருக்கமாகச் சொன்னால் அழிவுகளுக்கெல்லாம் மூலகாரணமாய் உள்ளது கோபம்தானே! என் சகோதரர் - வள்ளுவர், இக் கோபத்தின் கொடுமையை எண்ணி வேதனை மீதூரப் பத்துக் குறட்பாக்கள் கொண்ட ஓர் அதிகாரத்தையே படைத்திருக்கிறாரே!

"மறத்தல் வெகுளியை யார்மாட்டும் தீய
பிறத்தல் அதனான் வரும்".

எவரிடத்தும் கோபம் கொள்வதை மறந்துவிடு; இல்லையானால் உனக்கே அதனால் பல தீமைகள் வரும்.

ஒருவன் தன்னைத் தானே காத்துக் கொள்ள வேண்டுமாயின், கோபம் வாராமல் காத்துக் கொள்ள வேண்டும். இல்லாவிடின், அக் கோபம், கொண்ட அவனையே கொன்று விடும்.

"தன்னைத்தான் காக்கின் சினம் காக்க,
காவாக்கால்
தன்னையே கொல்லும் சினம்".

"இணர்எரி தோய்வு அன்ன இன்னா செயினும்
புணரின் வெகுளாமை நன்று".

கொழுந்து விட்டு எரியும் தீப்பிழம்புபோல் பொசுக்கும் கொடுமையைப் பிறர் உனக்குச் செய்தாலும் நீ கோபம் கொள்ளாதே" என்றெல்லாம் கோபத்தின் கொடுமைகளைக் கூறியுள்ளாரே!

கோபத்தை அடியோடு ஒழித்து விட முடியாது என்றாலும் 'அதனைத் தலைகாட்ட வொட்டாமல் அடக்கிக் கொள்ள வேண்டும்' என்னும் பொருள்படத்தானே, ஆத்திசூடியில் 'ஆறுவது சினம்' என்று சுருக்கமாகக் கூறியுள்ளேன்" என்று மெல்லப் பேசிக் கொள்கிறார்.

பின்னர் அவர், சற்று முன்னர்ச் சிற்பப் பட்டறையருகில் கண்ட ஊனமடைந்த திருமகள் சிலை, பொன்னின் தன்மை, அங்குக் குளத்தில் ஓடிய மீனின் மீது வேடன் எறிந்த அம்பால் பிளந்து உடனே இணைந்து கொண்ட நீர்ப் பகுதி இவை அவ்வையாரின் மனத் திரையில் நிழலாடின. ஏதோ உண்மையைக் கண்டுணர்ந்தது போலத் தலையை மெல்ல அசைத்துக் கொண்டு தமக்குள் பேசிக் கொள்கிறார்.

'இக் காட்சிகள், கோபம் கொள்பவரை நினைவுபடுத்துகின்றன. நல்ல பொருத்தம். கடுங் கோபம் கொள்பவரை மூன்று வகையாகப் பிரிக்கலாம். சிலர், கடுஞ்சினம் கொண்டு பகைத்துக் கொண்டால் அதனை மறக்க மாட்டார்கள். நாளாக நாளாக அப் பகை உணர்வு பெருகிக் கொண்டே போகும். எவரும் அத்தகையவரின் கோபத்தையும் பகையுணர்வையும் மறக்கச் செய்யவே முடியாது. இவர்கள் முதல் வகையினர். கோபம் கொண்டு பகைத்துக் கொள்ளும் இருவரை, தெரிந்தவர் தலையிட்டுச் சமாதானம் செய்து விடலாம். இத்தகையோர் இரண்டாம் வகையினர். மூன்றாம் வகையினர், கோபம் கொண்டால் அதனை உடனே மறந்து விடுவர்.

பிளந்து போன கற்களை மீண்டும் சேர்க்க முடியாதல்லவா? அப்படித்தான் ஒருவர் மீது கோபம் கொண்டால் அதனை மறந்து விடாமல் பகையினைப் பெருக்கிக் கொள்வர். அந்த முதல் வகையினர், கீழ் மக்கள். பிரிந்து கிடக்கும் பொன் துண்டுகளை உருக்கிச் சேர்த்து விடலாம். அதைப் போல, கோபம் கொண்ட



இருவரைப் பிறர் தலையிட்டுச் சேர்த்து வைத்து விடலாம். அவர்கள் இடைப்பட்ட நிலையினர். சான்றோர், உயர்ந்த பண்பாளர் ஒருவர்க் கொருவர் கோபித்துக் கொண்டால் அடுத்த கணத்திலேயே அதனை மறந்து, ஏதும் நட வாததுபோல இணைந்து கொள்வர். அம்பால் பிளவுபட்ட நீர்ப்பகுதி உடனே கூடிக் கொள்வது போல.இவர்கள் மூன்றாம் வகையினர். இவர்களே உயர்ந்த பண்பாளர்கள்".

இந்தப் பொருத்தமான உவமைக்கு ஏற்ற உண்மைக் கருத்தினைக் கவிதையாகப் பாடி விட்டார், உவமைக்கேற்ற உண்மை காணுவதில் தந்நிகரற்ற அவ்வை பிராட்டியார். இதோ அப் பாடல்:

"கற்பிளவோடு ஒப்பர் கயவர் கடுஞ்சினத்துப்
பொற்பிள வோடு ஒப்பாரும் போல்வரே –
விற்பிடித்து
நீர்கிழிய எய்த வடுப்போல மாறுமே
சீரொழுகு சான்றோர் சினம்"

–மூதுரை: 23.

(விற்பிடித்து - வில்லைக் கையில் கொண்டு; பொற்பிளவு - துண்டான பொன் கட்டி; வடுப்போல - (நீரின்) பிளவு, அதாவது பிளவு போல; சீர் ஒழுகு சான்றோர் - சிறப்பு மிக்க பெரியோர்).

பின்னர், அவ்வையார் தமது வழக்கமான நடைப்பயணத்தைத் தொடர்ந்தார். இடையில் ஒரு சிற்றாறு ஓடிக்கொண்டிருந்தது. அந்த ஆற்றங்கரையில் - மேட்டில் பரந்து வளர்ந்திருந்த ஒரு மரநிழலில் அமர்ந்து சிறிது ஓய்வெடுத்துக் கொண்டார். ஆற்றங்கரையிலே, நீரருகே பால் வண்ணக் கொக்குகள் பல நின்று கொண்டிருந்தன. அவற்றைக் கூர்ந்து கவனித்தார். சில கொக்குகள் தம் நீண்ட அலகுகளால் நீரில் ஓடிச்செல்லும் மீன்களைக் குறிபார்த்துக் கொத்திப் பற்றி விழுங்கிக் கொண்டிருந்தன. இன்னும் சில அசையாது நீண்ட நேரம் நின்று கொண்டிருந்தன. அவ்வையார் நீரின் அருகே சென்றார். ஒரு கொக்கு நீண்ட நேரம் ஆடாமல் அசையாமல், கடுந்தவம் செய்யும் முனிவர் போல் நின்று கொண்டிருந்தது. ஆற்றோரம் பல வகையான மீன்கள் பல ஓடிக்கொண்டிருந்தன. சில மீன்கள் அக்கொக்கின் காலருகே ஓடுவதையும் தம் கூரிய கண்களால் உற்றுப் பார்த்தார். அக்கொக்கு எந்த மீனையும் பற்றாமல் வாளா நின்று கொண்டிருந்தது. அம்மையாருக்கு ஐயம்! "இந்தக் கொக்கு தன்னை மறந்து உறக்கத்தில் ஆழ்ந்துவிட்டதோ? நீண்ட நேரம் கழுத்தை நீட்டிக் கொண்டிருந்தால் கழுத்து அசைவற்றுக் குனிய முடியாமல் மரத்துப் போய்விட்டதோ?" என எண்ணிக் கொண்டே இருந்தபோது, அக்கொக்கு 'வெடுக்' கென ஒரு மீனைக் கொத்திப் பற்றிக் கொண்டு விழுங்கத் தொடங்கியது.

அக்கொக்கு அவ்வளவு நேரம் ஆடாமல் அசையாமல் நின்றிருந்ததன் காரணம்–அவ்வையாருக்குப் புரிந்துவிட்டது. எண்ணற்ற மீன்கள் நீரில் தன் கால்களைத் தொடுமளவில் திரிந்து கொண்டிருந்தாலும், தன் கழுத்துத் தாங்கும் வலிமைக்கும், அலகின் அளவுக்கும் ஏற்ற மீன் வருமளவும் அமைதியாகக் காத்திருந்தது. அத்தகைய மீன் அருகில் வந்ததும் 'லபக்' எனக் குத்திப் பிடித்துக் கொண்டது என்பதை, அவர் உணர்ந்து கொண்டார். அக்கொக்கின் திறமையைக் கண்டு வியந்தார். இந் நிகழ்ச்சியும் அவ்வையாரின் சிந்தனையைத் தூண்டியது. "இதுவும் ஓர் உண்மையை உணர்த்துகிறது. சிலர் அடக்கமாகவும், அமைதியாகவும் இருப்பர். அவருடைய நிலையினைக் கண்டோ, உருவத்தைக் கண்டோ, அவர் சுறுசுறுப்பற்றவர், மந்த மதியினர், இயங்கிச் செயல்படும் ஆற்றல் அற்றவர் என்று முடிவு செய்துவிடக் கூடாது. அவர் ஏதோ ஆழ்ந்து சிந்தித்துக் கொண்டிருக்கலாம் - அல்லது தாம் எதனையோ செய்து முடிக்க உரிய காலம், இடம், சூழ்நிலை முதலியவற்றைப் பற்றித் திட்டமிட்டு அமைதியாய்க் காத்திருக்கவும் கூடும். எதனையும் நன்கு புரிந்து கொள்ளாமலும், அறிந்து கொள்ளாமலும் முடிவுக்கு வந்துவிடுதல் முறையற்றது. இந்தக் கருத்தைத்தான், நீண்ட நெடுநேரம் ஆடாமல் அசையாமல் காத்திருந்து, உரிய மீன் வந்ததும் 'திடும்' எனக் கவ்விக் கொண்ட இந்தக் கொக்கு உணர்த்துகிறது'. ஆம், என் உடன் பிறப்பாளர் வள்ளுவரும்,

"கொக்குஒக்க கூம்பும் பருவத்து மற்றுஅதன்
குத்து ஒக்க சீர்த்தவிடத்து"

என்று இதே கருத்தைத்தானே கூறியுள்ளார்?' என எண்ணினார். பின்னர் அக்கருத்து அவர் வாயினின்றும் ஓர் அரிய பாட்டாக வெளிப்பட்டது. அதுதான் பின் வரும் பாடல்:

"அடக்கம் உடையார் அறிவிலர் என்றெண்ணிக்
கடக்கக் கருதவும் வேண்டா – மடைத்தலையில்
ஓடுமீன் ஓட உறுமீன் வருமளவும்
வாடி இருக்குமாம் கொக்கு"

–மூதுரை – 16.

(கடக்க - அளவிட; மடைத்தலை - நீர்நிலைக் கரையின் கண்; உறுமீன் - தன் ஆற்றலுக்கு ஏற்ற அளவான மீன்).

கங்காபுரிக் காவலன்

21. சித்தர் சிரித்தார்

கங்கைக் கரையினின்று வெற்றிச் செய்தியைக் கொண்டு வந்த தூதர் கூறியவற்றை அரசி பஞ்சவன் மாதேவி அமைதியுடன் கேட்டுக் கொண்டிருந்தாள்.

வடக்கே, வடமேற்கே, கிழக்கே, வடகிழக்கே என்று சோழரின் வீரப் படைகள் பல திசைகளுக்குச் சென்றதை அவர்கள் விவரித்தார்கள்.

"வடமேற்கே நம் படைகள் சென்றன. புதிய இடம், பெரிய நதி, மிகப் பெரிய நதி. எதிர்க் கரையைக் காணமுடியாத அளவுக்கு மிகமிக அகலமான மாபெரும் நதி" என்று அவர்கள் விவரித்தார்கள்.

"இதோ இந்தக் கோதாவரியின் மறுகரை தெரிகிறதா? இதுவும் நம் காவிரியை விடப் பெரியது. அதைப் போலத்தானே? அதற்கு ஏன் பெரியது, மிகப் பெரியது என்று கையை அகலமாக விரிக்கிறீர்கள்?" என்று பஞ்சவன் மாதேவி மிகுந்த எரிச்சலுடன் கேட்டாள்.

அப்படி இல்லை என்பதற்கு அடையாளமாக, "ஹூம் ஹூம்" என்று கூறி அவர்கள் தலையை அசைத்தார்கள். "இந்தக் கோதாவரியைப் போல நான்கு மடங்கு, ஆறு மடங்கு, எட்டு மடங்கு பெரியது. கங்கையைவிடப் பெரியது. ஆகவே நடு ஆற்றில் படகில் செல்லும் போது எங்கள் குலை நடுங்கியது. குலதெய்வத்தை வேண்டிக் கொண்டோம், படகு, சுழலில் சிக்கிக் கவிழாமல் இருக்க வேண்டும் என்று".

சிந்து நதியைப் பற்றி அவர்கள் வர்ணிப்பது அரசிக்குப் பிடிக்கவில்லை. "உம் – அங்கே எதற்குச் சென்றீர்கள்? கங்கைக் கரைக்குத் தானே செல்லுமாறு உத்தரவு?" – அரசி கேட்டாள்.

"சக்கரவர்த்திகள் கட்டளையை மீறுவோமா தேவி? ஒரு பகுதிப் படைகள் கங்கைக் கரைக்குச் சென்றன. ஒரு பகுதி மதுரை மண்டலம் அடைந்தது. சென்ற இடமெல்லாம் எதிர்ப்பின்றி வெற்றி. வெற்றி! புலிக் கொடியைப் பார்த்தவுடனேயே அங்குள்ள அரசர்கள் அஞ்சி நடுநடுங்கிச் சமாதானம் பேசி சரணாகதி அடைந்தனர். கண்ணபிரான் பிறந்து, வளர்ந்து, விளையாடிய மதுரா நகரை மேற்குத் திசையினின்று வந்த பெயர் சொல்ல முடியாத வேற்று நாட்டரசன் திடீரென்று தாக்குவதாக செய்தி வந்தது.

கேள்வியுற்ற நம் படைத்தலைவர் வெகுண்டெழுந்தார். ஆயிரக்கணக்கான நம் வீரர்கள் புயலெனப் பாய்ந்தனர். வாயில் பெயர் நுழையவில்லை. கஜினியோ, கஜினிமுகமதோ, அவனை வேரோடு நசுக்காவிடில் பெரும் ஆபத்து என்பதை அங்குள்ள சிறு சிறு நாட்டரசர்கள் உணர்ந்தனர். எப்போதும் அவர்களுக்குள் சிறு சிறு பிணக்குகள், சச்சரவுகள். ஒருவரோடொருவர் சண்டையிட்டுக் கொள்வார்கள். தங்கள் பொதுப் பகைவரின் ஆபத்தை உணர்ந்த அவர்கள் புலிக்கொடி வேந்தர் உதவியை நாடினார்கள். நம் சக்கரவர்த்தி முன்பே கட்டளையிட்டிருந்தார். போசராசனும், சேதி நாட்டுக் காளசூரி மன்னன் காங்கேய விக்கிரமாதித்தனும், சாந்தல நாட்டு மன்னன் நித்தியாதரனும் நம் புலிக்கொடியின் தலைமையின் கீழ் ஒன்று சேர்ந்தனர். பகையரசர் கஜினிமுகமதுவை எதிர்த்துப் போரிட்டனர்.

சோழ வீரர்களின் தாக்குதலைத் தாங்காமல் கஜினி பின்வாங்கி ஓடினான்".

சோழப் படைகளின் வெற்றியை, தூதுவர்கள் விவரித்ததை ஆர்வத்துடன் பஞ்சவன் மாதேவி கேட்டுக் கொண்டிருந்தாள்.

"பிறகு, கஜினி என்ன ஆனான்? கங்கை நீரைக் கொண்டு வரும் நம் நோக்கம் என்ன ஆனது? கங்கைக் கரைக்குச் செல்ல வேண்டும் என்று எவ்வளவு நாள்கள் கோதாவரிக் கரையில் காத்திருப்பது? அதைப்பற்றிச் சொல்லுங்கள். பழையாறையில் என் சகோதரி அரிந்தவன் மாதேவி மரணப்படுக்கையில் இருக்கிறாள். நாங்கள் உடனே போயாக வேண்டும். கங்கை நீரா, இளவரசியைக் கடைசி கடைசியாகக் காண்பதா என்ற குழப்பத்தில் நானிருக்கிறேன். சக்கரவர்த்திகளும் இருக்கிறார். சொல்லுங்கள், சொல்லுங்கள், சீக்கிரம் சொல்லுங்கள்" – அரசி பரபரப்புடன் கேட்டாள்.

செய்தி கொண்டு வந்த தூதர்கள் கலக்கமடைந்தார்கள். அவர்கள் என்ன மறுமொழி சொல்வார்கள்? இராசராசன் சக்கரவர்த்திகளுக்குச் சொல்லியனுப்பியதை எடுத்துக் கூற வந்திருக்கிறார்கள்.

விக்கிரமன்

வடபுலத்திற்குச் சென்றிருக்கும் படை வீரர்களின் தலைவர் அரையன் இராசராசன் சொல்லியனுப்பியதை எடுத்துக் கூற முற்பட்டார்கள்.

"கங்கைக் கரையில் படைத் தலைவர் தங்களுக்காகக் காத்திருக்கிறார். அந்த நாட்டுச் சிற்றரசர்கள் சக்கரவர்த்திகளை வரவேற்க ஆவலுடன் காத்திருக்கிறார். சக்கரவர்த்தியையும், தங்களையும் அங்கே எதிர்பார்த்திருக்கிறார். தங்கள் திருப்பாதங்கள் பதிந்து வர மலர்களைத் தூவ நந்தவனத்து மலர்களை ஏற்பாடு செய்திருக்கிறார். மற்றுமோர் அதிசயத்தை - புதுமையைச் - செய்யவும் ஏற்பாடு களைச் செய்துள்ளார். உலக அதிசயத்துள் ஒன்றாக அது அமைய வேண்டும் என்று திட்டமிட்டுள்ளார்..." தூதர்கள் சொல்லிக் கொண்டே போனார்கள். அவர்கள் பயம் தெளிந்துவிட்டது. தைரியமாகப் பேசத் தொடங்கினார்கள்; உற்சாகமாகவும் பேசத் தொடங்கினார்கள்.



"அதிசயமா - அப்படி என்ன அதிசயம்?" அரசி கேட்டாள்.

"அதை விவரிக்க எங்களுக்கு ஆற்றல் இல்லை. அந்தக் கண்கொள்ளாக் காட்சியை வர்ணிக்க வார்த்தைகளைத் தேடவேண்டிய நிலையிலிருக்கிறோம். லட்சோப லட்சம் மலர்கள். சம்பங்கியும், முல்லையும், தாமரையும், அல்லியும், பாரிஜாதமும் பூத்துக் குலுங்கும் நந்தவனத்திலிருந்து பக்குவமாக மலர்களைக் கொய்து நடைபாதையில் ரத்னக் கம்பளம் விரித்தது போன்று பரப்பி, தங்கள் செம் பொற்பாதங்களை அவற்றில் பதிய வைக்கத் திட்டமிட்டிருக்கிறார் இந்திரதரன் என்ற கங்கை நாட்டு அரசர்".

பஞ்சவன் மாதேவியின் விழிகள் வியப்பால் விரிந்தன. சக்கரவர்த்திகளின் பெருமை எட்டுத் திக்கும் பரவியிருப்பது கேட்க அவளுக்குப் பெருமையாக இருந்தது.

"அதில் என்ன அதிசயம்?" தேவி கேட்டாள்.

"கங்கைக் கரையில் ஆயிரத்தெட்டுப் பொற்குடங்களில் கங்கை நீரை நிறைத்து தங்களுக்கு அபிஷேகம் செய்யப் பொற்குடங்களைப் பொற்கொல்லர்கள் இரவு பகலாகச் செய்து வருகிறார்கள். கங்கை பாயும் நாட்டு வேத பிராமணர்கள் ஆயிரக்கணக்கானவர்கள் அந்திப் பொழுதில் வேதம் ஒலிக்கப் போகிறார்கள். சோழப் படை வீரர்களால் தங்கள் நாட்டைக் காப்பாற்றிக் கொண்ட மன்னர்கள் கூடுகிறார்கள். பொன்னும், மணியும், கோமேதக இரத்தினங்களும், வைர, வைடூரியங்களும் சக்கரவர்த்திகளின் திருப்பாதங்களில் காணிக்கையாக்கப் பெரிய பெரிய பொற்பேழைகளைச் செய்து கொண்டிருக்கிறார்கள்".

இந்த அதிசய அற்புதங்களை விவரிக்கும் பொழுது தூதர்களின் குரலில் உற்சாகம் இருந்தது. நிமிர்ந்து நின்றார்கள். முகம் மலர்ந்து பேசினார்கள். கரங்களை அகல விரித்து, அந்த நிகழ்ச்சியை விவரித்தார்கள். அரசி எதிரே பேசுகிறோம் என்ற அச்சமில்லை.

நடைபெறவிருக்கும் கங்காபிஷேக நிகழ்ச்சி பஞ்சவன் மாதேவியின் கண் எதிரே தாண்டவமாடியது.

"இவை எல்லாம் எப்போது நடைபெறும்?" - அரசி கேட்டாள்.

"புஷ்பக விமானம் ஒன்று இருந்தால், சக்கரவர்த்திகளும் தாங்களும் அதில் அமர்ந்து வானமார்க்கமாக சில நாழிகைகளில் அங்கே சென்று சேரலாம். அவர்கள் ஒவ்வொரு நொடியும் தங்கள் வருகையை எதிர்பார்த்துக் காத்திருக்கிறார்கள்". தூதர்கள் ஆவலுடன், உற்சாகத்துடன் கூறினார்கள்.


"புஷ்பக விமானத்தைத் தேவலோகத்தி லிருந்து யார் கொண்டு வருவது? சோழ மூதாதையர் முசுகுந்த சக்கரவர்த்தி தேவேந் திரனுக்கு அசுரர்களை ஒழிக்க உதவி யிருக்கிறார். அந்த நன்றியை நினைவில் கொண்டு, இப்போது தேவேந்திரன் புஷ்பக விமானத்தை அனுப்பலாம். விமானத்தில் செல்லாவிடில் அங்கே செல்ல எவ்வளவு நாள்கள் ஆகும்?" - அரசி கேட்டாள்.

தூதர்கள் ஒருவரையொருவர் பார்த்துக் கொண்டனர்.

"கங்கை நதிக் கரையையும், அதன் பிர வாகத்தையும், புனிதத் தன்மையையும், அங்கே எங்களுக்கு நடக்கவிருக்கும் வரவேற்பையும், உபசரணையையும் அவர்கள் நடத்தவிருக்கும் கங்காபிஷேகத்தையும் நீங்கள் வர்ணிப்பதைக் கேட்டு எனக்கும் ஆசையாக இருக்கிறது ஆனால்..."

அடுத்து அரசி என்ன சொல்லப் போகி றாரோ என்று தூதர்கள் அவள் முகத்தையே உற்று நோக்கினார்கள்.

"சக்கரவர்த்திகளிடம் நான் சொல்கிறேன். ஆனால் என் நினைவெல்லாம் பழையாறையி லிருக்கிறது. அங்கே உயிருக்குப் போராடிக் கொண்டிருக்கும் அரிந்தவன் மாதேவியின் நிலை எப்படி இருக்கிறதோ என்ற கவலையில்



கங்கையில் நீராடுவதைப் பற்றி என்னால் நினைக்க முடியவில்லை. மனம் சிந்தனைச் சுழலில் சிக்கித் தடுமாறுகிறது. நீங்கள் சொன்ன புஷ்பக விமானமிருந்தால் சில நொடிகளில் நான் பழையாறைக்குச் சென்று விடுவேன். முருகபிரானின் மயில்வாகனமோ, திருமாலின் கருடனோ, அன்னப்பறவையோ அல்லது என்னை முதுகில் தூக்கிப் பறந்து செல்லும் சக்தியுடைய எந்தத் தேவ புருடரோ இருந்தால் நான் உடனே பழையாறைக்குத்தான் செல்வேன்.

"ஆனால்... ஆனால் எனக்கு நம்பிக்கை தருவதற்குக் கருவூர்த் தேவர் வந்திருக்கிறார். சரியான வேளையாகப் பார்த்து அவர் இங்கே தோன்றிவிட்டார். அவர் எனக்கு வழிகாட்டு வார். என் சஞ்சலம் தீர்ப்பார்" என்று பஞ்சவன் மாதேவி கைகூப்பி விழிகளை மூடியவாறு துதிப்பதுபோல் உருக்கமாகப் பேசினாள்.

அருகே பன்னீரும், பாரிஜாதமும் சேர்ந்து மணம் வீசுவது போல் தேவமணம். சந்தன மணமும், தேவதாரு மகிழ மலர் மணமும் ஒன்று சேர்ந்து காற்றில் மிதப்பது போன்ற நறுமணம்.

பஞ்சவன் மாதேவி விழி திறந்தாள். கருவூர்ச் சித்தர் அருகே நின்றிருந்தார். அவர் அருகே சோழ சக்கரவர்த்தி இராசேந்திர சோழர் மேலே அலங்கரிக்கும் பட்டாடையை இடுப்பில் கட்டியவாறு கைகட்டி மிகவும் பயபக்தியுடன் நின்றிருந்தார்.

"பஞ்சவன் மாதேவி என்ன சொல்கிறாள் என்று கேட்போம், வா" என்று இராசேந்திரன் பக்கம் திரும்பிய சித்தர், "பார்த்தாயா இராசேந்திரா! உன் இல்லத்தரசியின் வேண்டு தலை? சஞ்சலம் தீர்ப்பேனாம்; வழிகாட்டு வேனாம்! எவ்வளவு உயரிய நம்பிக்கை! கங்கையில் புனித நீராட வேண்டும் என்பது உன் ஆவல்; இலட்சியம். பட்டத்து அரசிக்கோ பழையாறை செல்ல வேண்டும் என்ற துடிப்பு" என்று கூறி பஞ்சவன் மாதேவியின் விழி களைக் கூர்ந்து நோக்கியவாறு, "தேவி! உண்மையைச் சொல்ல வேண்டும், அரிந்தவன் மாதேவியிடம் உனக்கு அவ்வளவு பற்றா? அப்படித் தோன்றவில்லையே! இராசந்திர னின் அபிமானம் மிக்க வீரமாதேவியின் மீதுதான் உன் கவனம், எண்ணமெல்லாம். அங்கே கட்டிமுடிக்கப்பட்டிருக்கும் பெரிய கோயிலைக் காணவேண்டும், உருவாகி யிருக்கும் பெரிய நகரத்தைக் காண வேண்டும், கட்டி முடிக்கப்பட்டிருக்கும் அழகிய மாளிகை யில் வீரமாதேவி குடியேறிவிடப் போகிறாளே என்றஞ்சி, அந்த மாளிகையில் நல்ல வேளை யில் குடிபுகுந்து விடவேண்டும். அதுதானே உன் எண்ணம்?"

சித்தர் உரை கேட்ட பஞ்சவன் மாதேவி நடு நடுங்கினாள். அரசர் அருகே இருக்கிறார்; சற்று விலகித் தொலைவில் அதிகாரிகள், தூதர்கள் நிற்கிறார்கள்; நம் மனத்தில் இருப்பதை அப்படி அப்படியே விண்டு வைத்து விட்டாரே! அவர்கள் கேட்டிருப்பார்களே. என்ன நினைப்பார்கள்? இதே போல் வேறு யாராவது சொல்லியிருந்தால் நாம் அமைதி யாயிருப்போமா? சொன்னவருக்குத் தண்டனை வழங்க முனைந்திருப்போமே!' —

"சுவாமி சுவாமி!" என்று பஞ்சவன்மாதேவி கதறினாள். சித்தர் பாதங்களில் நெடுஞ்சாண் கிடையாக விழுந்தாள். பேச்சு வரவில்லை. இராசேந்திரனும், சித்தரும், பஞ்சவன் மாதேவியைத் தூக்கி நிறுத்தினர்.

சித்தர், பஞ்சவன் மாதேவியைச் சிறு குழந்தைபோல் அணைத்து, கண்ணீர் துடைத்து, "நீ நினைத்ததில் தவறென்ன? வீரமாதேவியின் மீது உனக்கேற்பட்ட கோபமும் தவறில்லை தான். மனிதர்களின் ஆசைக்கும், வெறுப்புக் கும், அன்புக்கும் அப்பாற்பட்டவர் இறைவன்.

ஓர் உருவம், ஒரு நாமம் இல்லாதவ — இறைவனுக்கு இராசேந்திரன் கோயில் கட்டு கிறான். சிறிய கோயிலா? பெரிய கோயில்! மிகப் பெரிய கோயிலாயிற்றே!

அந்தக் கோயிலின் கருவறையில் பெரிய இலிங்கம் அமைக்கிறான். கருவறை மீது மிகப் பெரிய விமானம் கட்டுகிறான். முழு முதற் கடவுள் வீற்றிருக்கும் மேரு மலையின் பெயரையே அந்த விமானத்திற்குச் சூட்டு கிறான்.

ஓர் உருவம் இல்லை என்று சொன்னால் எளியவர்களுக்கு எப்படிப் புரியும்? தன்னை உணர வைக்கவே கலைஞர்களைப் படைத் தான். சிற்பியைப் படைத்தான், சித்திரக்காரர் களைப் படைத்தான், புலவர்களைப் படைத் தான், மொழியைப் படைத்தான், கல்லிலும், செப்புத் தகடுகளிலும் அவர்களுடைய கருத்துகளை உணர்வுகளைத் தீட்டச் செய்தான். இறைவன் புகழ் பாடுமாறு கவிஞர்களைப் படைத்தான். அவர்கள் எண்ணத்தைப் பனை ஓலைகளில் எழுதச் செய்தான்.

இறைவன் அம்பலத்தில் ஆடுகிறான். அம்பலம் என்பது என்ன? அதற்குக் கரை உண்டா? மண்டபம் உண்டா? மண்டபத்தைத் தாங்கும் தூண்கள் உண்டா? அண்டவெளி பிரம்மாண்டமான வெளி - பாழ்வெளி - அது

தான் ஆண்டவன் இருப்பிடம். இதைச் சொன்னால் புரிந்து கொள்ள மாட்டார்களே, நம்ப மாட்டார்களே! நம்பிக்கை இல்லாவிட்டால் நேற்று - இன்று நாளை என்ற கால வித்தியாசம் ஏது? சூரியன் உதிப்பதையும் சந்திரன் மறைந்து மறைந்து தோன்றுவதையும் செய்பவன் யார்? என்று நம்பமாட்டார்களே. அதனால்தான் தில்லைப் பெருவெளியில் அவன் ஆடினான்; ஆடிக் கொண்டே இருக்கிறான்.

பேரம்பலமான அகண்ட வானவெளியைச் சிறிதாக்கி - சிற்றம்பலமாக்கி நமக்குப் புரிய வைத்தது யார்? கலை உள்ளம் படைத்தவர்கள்தாம். ஆட்டுவித்தால் யாரொருவர் ஆடாதாரே என்பதுதானே நியதி!

உன் அருமைக் கணவர் இராசேந்திரன் தன் தந்தையைப் போல், பாட்டனாரைப் போல், முப்பாட்டனாரைப் போல், சோழர் குலத்தை மீண்டும் உருவாக்கிய விஜயாலயரைப்போல் மாவீரன். திண்தோள் வீரரான இராசேந்திரன் தன் தோள் வலிமையினால், ஆற்றலினால் சோழர் குலத்திற்குப் பெருமை தேடித் தந்தான். உன் மாமனார் இராசராசனுடைய பெரும் வெற்றிகளுக்கெல்லாம், அடைந்த புகழ்களுக்கெல்லாம் உன் கணவர்தான் காரணம் என்பதை நீ அறிவாயா?

இராசேந்திரனுடன் சமமாக அரியணையில் அமரும் பேறு கிடைக்கும் என நீ அவனைக் கரம்பிடித்தபோது நம்பினாயா? அல்லது உன் தந்தை பழுவேட்டரையர் நினைத்திருப்பாரா?

காலச் சுழற்சியில் பட்டத்துக்கு உரிமையானவர்களின் காலம் முடிந்தது. உனக்கு அந்தப் பெரும் பாக்கியம் கிடைத்தது.

போர்க்கள வெற்றி நிலையற்றது என்பதை இராசேந்திரன் உணர்ந்து தன் பெயரும், சோழ நாட்டின் பெயரும் என்றும் நிலைத்து நிற்க என்ன செய்வது என்று சிந்தித்தார். அவர் மனத்தடாகத்தில் மலர்ந்த வாடா மலர்தான் பெரிய கோயில். அவர் கலை உணர்வுக்கு உருக் கொடுத்து நிறைவேற்றச் சபதம் எடுத்தவள் வீரமாதேவி.

அவள் உன்னிடத்தைப் பிடித்துவிடப் போகிறாள் என்று நீ தவறாக எண்ணியதன் விளைவே அவள் மீது உனக்கு ஏற்பட்ட பொறாமை. அவள் வயிற்றில் குழந்தை பிறந்தால் அந்தக் குழந்தையும் வாரிசு உரிமை கொண்டாடுமே என்று நினைத்தாய். அப்படி ஏதும் நடைபெறாது என்பதை விளக்கக்கூடிய காலம் வந்துவிட்டது.

என் அருமைக் குழந்தாய், பஞ்சவன் மாதேவி! உன் மனத்திலுள்ள அழுக்காறுகளை நீக்கிவிடு.

Form IV [See Rule 8]
REGISTRATION OF NEWS PAPERS (CENTRAL) RULES - 1956

Statement about ownership and other particulars about the

"AMUDHA SURABI"

1. Place of Publication	:	145, Linghi Street, Madras - 600 001.
2. Periodicity of the Publication	:	Monthly
3. Printer's Name	:	M. Natarajan M.A.
Whether Citizen of India	:	Yes, Indian.
Address	:	Tamil Arasi Achagam, 84, T.T.K. Road, Alwarpet, Madras - 600 018.
4. Publisher's Name	:	A.V.S. Raja
Whether Citizen of India	:	Yes, Indian.
Address	:	145, Linghi Street, Madras - 600 001.
5. Editor's Name	:	Vikiraman
Whether Citizen of India	:	Yes, Indian.
Address	:	2, Jayasankar Street, Madras - 600 033.
6. Name and Address of Individuals who own the news paper and partners or share holders holding more than one percent of the total capital	:	Shriram Trust (Regd. Office) 145, Linghi Street, Madras - 600 001.

I, A.V.S. Raja hereby declare that the particulars given above are true to the best of my knowledge and belief.

On behalf of Shriram Trust.

Date : 1.3.95

[Sd.] A.V.S. Raja
PUBLISHER

பழையாறைக்குச் செல்லவேண்டும். அரிந்தவன் மாதேவியைக் கடைசியாகக் காண வேண்டும் என்பதுதானே உன் எண்ணம்?

அப்படியென்றால் கங்கை நீரைக் கொண்டு வந்து, குடமுழுக்கு ஆற்றுவேன் என்று உறுதி பூண்ட இராசேந்திரன் எண்ணம் என்ன ஆவது?

இரண்டுமே நிறைவேறப் போகிறது. இப்படி நான் சொன்னவுடன் உனது புருவங்கள் உயர்கின்றன. எப்படி முடியும் எனத் திகைப்படைகிறாய். இராசேந்திரனுக்கும் கூட, அப்படி ஓர் ஐயம் எழவே செய்யும். அந்த ஐயம் தேவையற்றது.

சோழ சக்கரவர்த்தி தன் மனைவியின் விருப்பப்படி கங்கை நீரைக் கொண்டு வராமல் பாதி வழியிலேயே திரும்பி விட்டார் என்ற அவப்பெயர் கால காலத்திற்கு நிலவ வேண்டுமா? கூடாது கூடாது. பெரிய கோயிலுக்குக் குடமுழுக்குச் செய்த பிறகே சோழ நாட்டை விட்டு வெளியேறுவேன் என்று நான் சொல்லியிருக்கிறேன். சோழ நாட்டிலேயே நான் தங்கியிருக்க முடியாது. என் வார்த்தை என்னாவது?

நடப்பதை - நடக்கக் கூடியதைச் - சொல்கிறேன். சொன்னபடி செய்வேன். அதுவே இறைவன் கட்டளை".

சித்தர் பேசிக் கொண்டே போனார். பேசினார் என்பதைவிட சொல் மாரி பொழிந்தார் என்பதே சரியாகும். மந்திரம் போல் அவர் வார்த்தைகள் ஒலித்தன.

இப்போது இராசேந்திரனும், பஞ்சவன் மாதேவியும் நின்று கொண்டிருக்கவில்லை. இருவரும் சித்தரின் திருப்பாதங்களில் வீழ்ந்து , அவர் பாதங்களைச் சிக்கெனப் பிடித்திருந்தனர். அவர்களின் கண்ணீர், சித்தர் பாதங்களை நனைத்தன.

"எழுந்திரு இராசேந்திரா! உன் இலட்சியம் நிறைவேறும். எழுந்திரு தேவி! உன் எண்ணமும் நிறைவேறும். கங்கை வரும். பழையாறைக்கும் செல்லலாம்" என்று கூறி, சித்தர் சிரித்தார்.

"கங்கை வருமா? என்ன இது சித்தரின் சித்து வேலையா என்று நினைக்காதே. இந்தப் புண்ணிய பூமியில் எல்லா நதிகளும் மிகப் புனித நதிகளே! சிந்து, நர்மதா, யமுனை, கங்கை, கோதாவரி, கிருஷ்ணா, காவிரி, பொருநை எல்லாம் இறைவனின் திருமேனியிலிருந்து தோன்றுபவையே. வேற்றுமை, ஏற்றத்தாழ்வு பார்ப்பவன் இறைவனல்லன்.

கோதாவரி நதிக்கரையில் அடுத்த பௌர்ணமி வரை நீங்களிருவரும் அமைதியாகத் தவம் செய்யுங்கள். கங்கை வரும்.

பிறகு, கங்கையுடன் நீங்கள் புறப்பட்டுச் செல்லுங்கள்.

இராசேந்திரா! பஞ்சவன் மாதேவி! இதயம் என்பது புனிதமான கோயில். அந்தக் கோயில் தூய்மையாக விளங்க வேண்டும்.

தெற்கே உருவாகியிருக்கும் பெரிய கோயில் இந்த உலகம் உள்ளளவும் அழியாதிருக்கும். அந்தக் கோயிலுக்கும், கோயில் இருக்கும் ஊருக்கும் என்ன பெயர் சூட்ட வேண்டும் என்று கவலைப்படாதீர்கள்.

நல்ல பெயராக அழியாத பெயராக நான் சூட்டுவேன்.

பெயரைச் சூட்டி, குடமுழுக்கு செய்து ஆசி வழங்கிய பிறகே நான் சோழநாட்டை விட்டுச் செல்வேன்".

இராசேந்திரனும், பஞ்சவன்மாதேவியும் ஏதும் பேசமுடியாமல் திகைத்து நிற்க, சித்தர் திரும்பினார், நடந்தார். சற்றுத் தொலைவு சென்ற பிறகு நின்று அவர்களைத் திரும்பிப் பார்த்தார். கரங்களைத் தூக்கி ஆசி வழங்கினார். அவருடைய அருள் புன்னகை பளிச் சென்று தெளிவாகத் தெரிந்தது. (தொடரும்)

சூரி	கேது		
புதன் சனி	இம்மாத கிரக நிலை		செவ் (வ)
சுக்			
	குரு	ராகு	

கிரக பாதசாரம்:

சூரியன் - பூரட்டாதி 4, சந்திரன் - மகம் 2, செவ்வாய் - ஆயில்யம் 2(வக்ரீ), புதன் - அவிட்டம் 4, குரு - கேட்டை 2, சுக்கிரன் - திருவோணம் 3, சனி - பூரட்டாதி 1, ராகு - சுவாதி 3, கேது - பரணி 1.

கிரக மாறுதல்

24-03-1995 முதல் செவ்வாய் வக்கிர நிவர்த்தி
25-03-1995 முதல் கும்ப சுக்கிரன்
29-03-1995 முதல் மீன புதன்
01-04-1995 முதல் குரு வக்கிர ஆரம்பம்

மேஷம் : *(அசுவினி, பரணி, கிருத்திகை 1-ஆம் பாதம் முடிய)*

லாபஸ்தானத்தில் உலவுகின்ற கிரகங்கள் உங்கள் அறிவாற்றலையும் செயல் திறமையையும் வெளிப் படுத்துவார்கள். உழைப்புக்குரிய வருவாய் கிடைக்கத் தவறாது. வியாபாரிகளுக்கு லாபம் கூடும். மாணவர்களது நிலை உயரும். தொழிலாளர்களது எண்ணம் ஈடேறும். சமுதாய நலப்பணிகளில் ஈடுபாடு உள்ளவர்கள் வரவேற்பு கூடப் பெறுவார்கள். எண்ணெய் வகையறாக்கள், இரும்பு சம்பந்தப்பட்ட இனங்கள், தோல் பொருட்கள் ஆகியவை ஆதாயம் கொண்டு வரும். நண்பர்கள், உற்றார், உறவினர்களால் அளவோடு நலம் உண்டாகும். உடன் பிறந்தவர்களாலும் உடன் பணிபுரிபவர்களாலும் ஒரிரு எண்ணங்கள் நிறைவேறும். எதிரிகள் கட்டுக்குள் அடங்கியிருப்பார்கள். போட்டிப் பந்தயங்களிலும், வழக்கு வியாஜ்ஜியங்களிலும் அனுகூலமான போக்கு தென்படும்.

அலைச்சல் சற்று அதிகமாகும். கணவன், மனைவி யரிடையே சலசலப்புகள் உண்டாகும். பக்குவத்துடன் சமாளிப்பது நல்லது. கூட்டாகத் தொழில் செய்பவர்கள் பங்குதாரர்களிடம் பக்குவமாகப் பழகி வருவது அவசிய மாகும். மக்கள் நலனில் கவனம் தேவைப்படும். பெற்றோரால் அதிகம் நன்மைகளை எதிர்பார்க்க இயலாது. ஸ்பெகுலேஷன், கொடுக்கல் - வாங்கல் இனங்களில் ஈடுபட வேண்டாம். 25-ஆம் தேதி முதல் கலைத் துறைகளைச் சேர்ந்தவர்களுக்கு மந்தநிலை விலகும்.

பவ ஆண்டு பங்குனி மாதத்திற்கு

உங்கள் ராசி பலன்

15-03-1995 முதல் 13-04-1995 வரை

பாலஜோசியர்
வித்வான் வே. லட்சுமணன்

மாதர்களது நிலைமையில் அபிவிருத்தி தெரிய வரும். 29-ஆம் தேதி முதல் கணிதம், விஞ்ஞானம், வியாபாரம் போன்ற துறைகளைச் சேர்ந்தவர்கள் விழிப்புடன் இருப்பது நல்லது. உடல் நலனில் கவனம் தேவைப்படும். மருத்துவச் செலவுகள் கூடும். மார்ச் 15, 17, 19, 20, 26, 27, 29, 30, 31 ஏப்ரல் 2, 5, 7, 10, 12 தேதிகள் சிறப்பானவை. மேற்கு, வடக்குத் திசைகள் அனுகூலமானவை. கும்ப ராசிக்காரர்கள் உதவுவார்கள். 5, 8 எண்கள் அதிர்ஷ்டமானவை.

ரிஷபம் : *(கிருத்திகை 2-ஆம் பாதம் முதல், ரோகிணி, மிருகசீரிஷம் 2-ம் பாதம் முடிய)*

குரு, சனி, செவ்வாய் ஆகிய முக்கியமான கிரகங்கள் அனுகூலமான நிலையில் சஞ்சரிப்பதாலும் ராசிநாதனது சஞ்சாரம் திருப்திகரமாக இருப்பதாலும் உங்கள் எண்ணங்கள் எளிதில் நிறைவேறும். மனத்தில் உற்சாகம் கூடும். எடுத்த காரியங்கள் தடையின்றி நிறைவேறும். எதிரிகள் விலகிப் போவார்கள். போட்டிப் பந்தயங்களிலும் வழக்கு வியாஜ்ஜியங்களிலும் அனுகூலமான போக்கு தெரிய வரும். பொறியியல், சட்டம், காவல், இராணுவம் போன்ற துறைகள் ஆக்கம் தரும். கலைத்துறைகளைச் சேர்ந்தவர்களுக்குச் செழிப்பான பாதை புலப்படும். மாதர்கள், சமுதாய நலப் பணியாளர்கள், அரசியல் வாதிகள் ஆகியோர் புகழ் பெறுவார்கள். வெளிநாட்டுத் தொடர்பு நலம் தரும்.

கணவனால் மனைவிக்கும், மனைவியால் கணவனுக்கும் அனுகூலம் உண்டாகும். கூட்டுறவுத் துறை லாபம் தரும். பொருள் வரவு கூடும். எதிர்பாராத திடீர் அதிர்ஷ்ட வாய்ப்புகளும் உண்டாகும். திருமணம் ஆகாதவர்கள் அதற்கான வாய்ப்பைப் பெறுவார்கள். திருமணம் ஆனவர்களுக்கு மகப்பேறு அல்லது மக்களால் பாக்கியம் பெற வாய்ப்புண்டாகும். வியாபாரிகள், உத்தியோகஸ்தர் கள், தொழிலாளர்கள் ஆகியோர் தங்கள் நிலைமையில் அபிவிருத்தி காண்பார்கள். கடல் வாணிபம் ஆதாயம் கொண்டு வரும். பதவி உயர்வு, ஊதிய உயர்வு, இடமாற்றம் ஆகியவற்றை எதிர்பார்த்துக் காத்துக் கொண்டிருந்தவர் கள் அதற்கான சந்தர்ப்பத்தை இப்போது பெறுவார்கள். நிலபுலங்களால் அனுகூலம் உண்டாகும். புதிய பொருட்களின் சேர்க்கை நிகழும். தெய்வீக மார்க்கங்களில் ஈடுபாடு கூடும். நல்லோர் நேசம் கிட்டும். மார்ச் 15, 17, 19, 20, 22, 26, 27, 29, 30, 31 ஏப்ரல் 2, 5, 7, 10, 12 தேதிகள் சிறப்பானவை. வடகிழக்கு, தெற்குத் திசைகள் நலம் தரும். கடக, விருச்சிக, கும்ப ராசிக்காரர்கள் உதவுவார்கள். 1, 3, 4, 6, 9 எண்கள் அதிர்ஷ்டமானவை.

மிதுனம் : *(மிருகசீரிஷம் 3-ம் பாதம் முதல், திருவாதிரை, புனர்பூசம் 3-ஆம் பாதம் முடிய)*

குரு, செவ்வாய், சனி ஆகியோர் கோசாரப்படி அனுகூலமான நிலையில் சஞ்சரிக்காததால் நீங்கள் எதிலும் விழிப்புடன் ஈடுபடுவது நல்லது. மற்றையோர் மனம் புண்படும்படியான வார்த்தைகளை உதிர்க்கலாகாது. குடும்பத்தில் சிறுசிறு குழப்பங்கள் சூழும். பக்குவத்துடனும் விட்டுக் கொடுக்கும் மனோபாவத்துடனும் பழகிவருவது அவசியமாகும். பெரியவர்கள், தனவந்தர்கள் ஆகியோரது அதிருப்திக்கு உள்ளாகாமல் இருப்பது நல்லது. பொருளாதாரநிலை ஏற்றம், இறக்கமாகவே அமையும். ஸ்பெகுலேஷன், கொடுக்கல்-வாங்கல் இனங்களில் ஈடுபட வேண்டாம். மக்களால் மனக்குழப்பம் ஏற்படும். அலுவலகப் பணியாளர்கள், தொழிலாளர்கள், வியாபாரிகள் ஆகியோரது முன்னேற்றம் தடைப்படும். எண்ணங்கள் ஈடேற அரும்பாடுபட வேண்டிவரும்.

சூரியன், சுக்கிரன், கேது ஆகியோரது அனுகூலமான சஞ்சாரம் காரணமாகப் பிரச்சினைகளைச் சமாளிக்கக் கூடிய சக்தி பிறக்கும். அரசு விவகாரங்கள் ஆக்கம் தரும். சினிமா, நாடகம், நாட்டியம், சங்கீதம் போன்ற கலைத்துறைகளைச் சேர்ந்தவர்களுக்குச் செழிப்பான சூழ்நிலை உருவாகும். மாதர்கள், சமுதாய நலப் பணியாளர்கள் ஆகியோர் வரவேற்பு கூடப் பெறுவார்கள். அரசியல்வாதிகளுக்குச் செல்வாக்கு கூடும். பக்தி மார்க்கத்திலும் ஞானமார்க்கத்திலும் ஈடுபாடு உள்ளவர்கள் மனத் தெளிவு பெறுவார்கள். உங்கள் ஜனன ஜாதகப்படி தற்சமயம் யோக பலம் உள்ள தசை, புக்தி, அந்தரங்கள் நடைபெறுமானால் சோதனைகள் குறையும். மார்ச் 15, 17, 19, 20, 22, 29, 30, 31, ஏப்ரல் 2, 5, 7, 10, 12 தேதிகள் சிறப்பானவை. கிழக்கு, வடமேற்குத் திசைகள் அனுகூலமானவை. மீன, மேஷ ராசிக்காரர்கள் உதவுவார்கள். 1, 6, 7 எண்கள் அதிர்ஷ்டமானவை.

கடகம் : *(புனர்பூசம் 4-ஆம் பாதம் முதல், பூசம், ஆயில்யம் முடிய)*

தெய்வானுகூலம் உண்டாகும் நேரமிது. மனத்தில் தெளிவு பிறக்கும். வாழ்க்கையில் பிடிப்பு உண்டாகும். மக்களால் பெற்றோருக்கும், பெற்றோரால் மக்களுக்கும் அனுகூலமேற்படும். எண்ணங்களில் மலர்ச்சி உண்டாகும். பொருள்வரவு திருப்தி தரும். ஸ்பெகுலேஷன், கொடுக்கல்-வாங்கல் இனங்கள் லாபம் தரும். மற்றையோரால் மதிக்கப்படுவதற்குரிய வாய்ப்புக்கள் கனிந்துவரும். உடல் ஆரோக்கியம் சீராகவே இருந்து வரும். வெளிநாட்டுத் தொடர்பு பயன்படும். ஆசிரியர்கள், பேராசிரியர்கள், மத போதகர்கள் ஆகியோர் தங்கள் செல்வாக்கு உயரப் பெறுவார்கள். அரசு விவகாரங்கள் ஆக்கம் தரும். அரசியல்வாதிகள் தங்கள் கொள்கைகளுக்கு வரவேற்புப் பெறுவார்கள்.

ஜன்மத்தில் செவ்வாயும், 4-ல் ராகுவும், 8-ல் சனியும் உலவுவதால் எக்காரியத்திலும் அவசரப்போக்கு அடியோடு கூடாது. நிதானம் அவசியம் தேவை. குறிப்பாகப் பயணத்தின்போதும், இயந்திரங்களின் பக்கம் நெருங்கும்போதும் பாதுகாப்பை மேற்கொள்வது நல்லது. தொழிலாளர்கள், இயந்திரப் பணியாளர்கள், ரியல் எஸ்டேட் துறைகளைச் சேர்ந்தவர்கள் ஆகியோருக்கெல்லாம் சிறுசிறு சோதனைகள் உண்டாகும். 25-ஆம் தேதி முதல் கலைத் துறையினருக்கு அனுகூலமான போக்கு தென்படும். சமுதாய நலப்பணியாளர்களுக்கு வரவேற்பு கூடும். மாதர்கள் அளவோடு நலம் பெறுவார்கள். வியாபாரிகள் அகலக்கால் வைக்கலாகாது. மார்ச் 15, 17, 19, 20, 22, 26, 30, 31 ஏப்ரல் 2, 5, 7, 10, 12 தேதிகள் சிறப்பானவை. வடகிழக்கு, வடமேற்குத் திசைகள் அனுகூலமானவை. விருச்சிக, மீன, மேஷ ராசிக்காரர்கள் உதவுவார்கள். 1, 3, 7 எண்கள் அதிர்ஷ்டமானவை.

சிம்மம் : *(மகம், பூரம், உத்திரம் 1- ஆம் பாதம் முடிய)*

குரு, சனி, செவ்வாய் ஆகிய முக்கியமான கிரகங்கள் அனுகூலமான நிலையில் சஞ்சரிக்காததால் நீங்கள் எதிலும் முழுமையான வெற்றியைக் கண்டுவிடமுடியாத வண்ணம் தடைகளும், குறுக்கீடுகளும் உண்டாகும். மனத்தில் நிம்மதி குறையும். அலைச்சல் கூடும். எடுத்த காரியத்தை நிறைவேற்ற அரும்பாடு படவேண்டிவரும். எதிர்ப்புக்களின் கரம் வலுவடையும் நேரமிது என்பதால் யாரிடத்திலும் வெளிப்படையாகப் பழகவேண்டாம். பேச்சில் நிதானத்தைக் கடைப்பிடிப்பது நல்லது. உடல் நலனில் அக்கறை தேவைப்படும். உஷ்ணாதிக்கத்தால் பாதிக்கப்படலாம். வீண்சண்டை, சச்சரவுகளில் ஈடுபடலாகாது. வழக்கு, வியாஜ்ஜியங்களிலும் போட்டிப் பந்தயங்களிலும் அனுகூலமான போக்கைக் காண்பது அரிது.

நிலம், மனை, வீடு, வாகனம் போன்ற இனங்களில் விசேடமான அனுகூலத்தை எதிர்பார்க்க இயலாது. மாணவர்கள் படிப்பில் முழுமையான கவனம் செலுத்த வேண்டிவரும். மாதர்களும், கலைத்துறைகளைச் சேர்ந்தவர்களும் சரிவுக்கு ஆட்பட நேரும். பொருளாதார நிலை சாதாரணமாகவே காணப்படும். திடீர் அதிர்ஷ்ட வாய்ப்புக்களை எண்ணிக் கைப்பொருளை வீணாக்க வேண்டாம். சிக்கன நடவடிக்கை அவசியம் தேவை. கூட்டுத் தொழிலில் கவனம் செலுத்த வேண்டிவரும். கணவன், மனைவியர் உறவுநிலை சீராக இராது. உத்தியோகம், வியாபாரம் போன்ற துறைகளைச் சேர்ந்தவர்கள் அகலக்கால் வைக்கலாகாது. இறை வழிபாடு மனநிம்மதியைத் தரும். பிற மொழி, மதக்காரர்கள் ஓரளவு உதவுவார்கள். மார்ச் 15, 17, 19, 20, 22, 26, 27 ஏப்ரல் 2, 5, 7, 10, 12 தேதிகள் சிறப்பானவை. தென்மேற்குத் திசை நலம் தரும். துலா, ரிஷப ராசிக்காரர்கள் உதவுவார்கள். 4-ஆம் எண் அதிர்ஷ்டமானது.

கன்னி: *(உத்திரம் 2- ஆம் பாதம் முதல் ஹஸ்தம், சித்திரை 2-ஆம் பாதம் முடிய)*

சனி, செவ்வாய் ஆகியோரது பலம் காரணமாக உங்கள் மனத்தில் துணிவும் தன்னம்பிக்கையும் கூடும். எடுத்த காரியங்கள் இனிது நிறைவேறும். எதிர்ப்புக்கள் விலகும். போட்டிப் பந்தயங்களிலும் வழக்கு வியாஜ்ஜியங்களிலும் வெற்றி பெறச் சந்தர்ப்பம் கனிந்துவரும். உடன் பிறந்தவர்களால் உங்களுக்கும் உங்களால் அவர்களுக்கும் அனுகூலம் உண்டாகும். தொழிலாளர்களது குறிக்கோள்

நிறைவேறும். பொதுநலப் பணியாளர்களுக்கு நற்பெயர் கிட்டும். எண்ணெய் வகையறாக்கள், இரும்பு சம்பந்தப்பட்ட பொருட்கள், தோல்பொருட்கள் ஆகியவை லாபம் தரும். விவசாயிகள் உற்சாகமான சூழ்நிலையைக் காண்பார்கள். பொறியியல், சட்டம், காவல், ராணுவம் போன்ற துறைகளைச் சேர்ந்தவர்கள் சுபிட்சமான சூழ்நிலையைக் காண்பார்கள்.

செந்நிறப்பொருட்கள் ஆதாயம் தரும். உழைப்பு வீண் போகாது. புனிதமான பணிகளில் ஈடுபடச் சந்தர்ப்பம் கனிந்து வரும். சினிமா, நாடகம், நாட்டியம், சங்கீதம் போன்ற கலைத்துறைகளைச் சேர்ந்தவர்கள் 24-ஆம் தேதி வரையிலும் அனுகூலமான போக்கைக் காண்பார்கள். அதன்பிறகு ஓரிரு இடையூறுகள் ஏற்படும். மாதர்களும் 24-ஆம் தேதிக்குப் பிறகு விழிப்புடன் இருப்பது அவசியமாகும். கணவன், மனைவியரிடையே சிறுசிறு பிரச்சினைகள் உருவாகும். வாழ்க்கைத்துணைவரின் நலனில் கவனம் செலுத்த வேண்டிவரும். கூட்டாகத் தொழில் செய்பவர்கள் பங்குதாரர்களிடம் பக்குவமாகப் பழகுவது நல்லது. பிற மொழி, மதக்காரர்களிடம் அதிகம் நெருக்கம் வேண்டாம். ஸ்பெகுலேஷன், கொடுக்கல்-வாங்கல் இனங்களில் விழிப்புடன் ஈடுபடுவது நல்லது. மார்ச் 15, 17, 19, 20, 22, 26, 27, 29, 30, 31 ஏப்ரல் 5, 7, 10, 12 தேதிகள் சிறப்பானவை. மேற்கு, தெற்குத் திசைகள் அனுகூலமானவை. மகர, கடக ராசிக்காரர்கள் உதவுவார்கள். 6, 8, 9 எண்கள் அதிர்ஷ்டமானவை.

துலாம் : *(சித்திரை 3- ஆம் பாதம் முதல், சுவாதி, விசாகம் 3-ஆம் பாதம் முடிய)*

ராசிநாதன் சுக்கிரனும், குரு, செவ்வாய் ஆகியோரும் அனுகூலமான நிலையில் சஞ்சரிப்பதால் உங்கள் எண்ணங்கள் எளிதில் நிறைவேறும். தடைகளும், குறுக்கீடுகளும் விலகும். மனத்தில் உற்சாகம் கூடும். மிடுக்காக நடைபோடுவீர்கள். புதிய பொருடகளின் சேர்க்கை நிகழும். நிலம், மனை, வீடு, வாகனங்களால் அனுகூலம் உண்டாகும். பேச்சில் இனிமை தவழும். வசீகரச் சக்தி கூடும். குடும்பத்தில் நற்காரியங்கள் நிகழும். திருமணம் ஆகாதவர்களுக்கு அதற்கான வாய்ப்பு இப்போது பூத்து வரும். திருமணம் ஆனவர்கள மகப்பேறு அல்லது மக்களால் பாக்கியம் பெறச் சந்தர்ப்பம் கனிந்துவரும். பண நடமாட்டம் திருப்திகரமாக இருந்து வரும். கேளிக்கை, உல்லாசங்களில் ஈடுபாடு கூடும். நல்லவர்களும், வல்லவர்களும் உங்களுக்கு உற்ற துணையாக விளங்குவார்கள்.

சினிமா, நாடகம், நாட்டியம், சங்கீதம் போன்ற கலைத்துறைகள் ஆக்கம் தரும். கணவன், மனைவியரிடையே களிப்புறவு கூடும். கூட்டுத் தொழில் லாபம் தரும். கடல் வாணிபம் ஆதாயம் கொண்டுவரும். உடன்பிறந்தவர்கள் மூலம் ஓரிரு காரியங்கள் நிறைவேறும். அரசியல்வாதிகளுக்கும், அரசுப் பணியாளர்களுக்கும், நிர்வாகத்துறைகளைச் சேர்ந்தவர்களுக்கும் செழிப்பான சூழ்நிலை உதயமாகும். மருத்துவம், இரசாயனம் விஞ்ஞானம், ஆன்மீகம் போன்ற துறைகளைச் சோந்தவர்கள் உற்சாகமான பாதையைக் காண்பார்கள். அலைச்சல் கூடினாலும் அதற்கான பயன் கிடைத்துவரும். ஸ்பெகுலேஷன், கொடுக்கல்-வாங்கல் இனங்கள் லாபம் தரும். மார்ச் 15, 17, 19, 20, 22, 26, 27, 29, 30, 31, ஏப்ரல் 2, 7, 10, 12 தேதிகள் சிறப்பானவை. வட

கிழக்கு, தென்கிழக்குத் திசைகள் நலம் தரும். விருச்சிக, கும்ப, கடக ராசிக்காரர்கள் உதவுவார்கள். 1, 3, 6, 9 எண்கள் அதிர்ஷ்டமானவை

விருச்சிகம் : (விசாகம் 4-ஆம் பாதம் முதல், அனுஷம், கேட்டை முடிய)

கோசாரப்படி முக்கியமான கிரகங்களான குரு, சனி, செவ்வாய் ஆகியோர் அனுகூலமான நிலையில் சஞ்சரிக்காததால் விசேடமான வெற்றி வாய்ப்புக்களை இந்த நேரத்தில் எதிர்பார்க்க இயலாது. அலைச்சலும், உழைப்பும் கூடும். மனத்தில் சிறுசிறு சலனங்கள் குடி கொள்ளும். பெற்றோர் நலனில் கவனம் தேவைப்படும். நிலம், மனை, வீடு, வாகனங்களால் அதிகம் அனுகூலமிராது. மக்கள்நலம் சீராக இருந்துவரும். மக்களால் ஓரிரு எண்ணங்களும் ஈடேறும். கணவன், மனைவியர் உறவுநிலை சீர்பெறும். கூட்டாகத் தொழில் செய்பவர்கள் சுபிட்சம் காண்பார்கள். கணிதம், விஞ்ஞானம், எழுத்து, வியாபாரம் போன்ற துறைகளைச் சேர்ந்தவர்கள் தங்கள் திறமைக்குரிய வகையில் வளர்ச்சி காண்பார்கள்.

மாணவர்களது நிலை உயரும். பொதுநலப்பணிகளில் ஆர்வம் கூடும். மாதர்களது எண்ணம் ஈடேறும். அரசியல்வாதிகள், அரசுப் பணியாளர்கள் ஆகியோர் தங்கள் தகுதிக்குரிய வகையில் முன்னேற்றம் காண்பார்கள். மருத்துவம், இரசாயனம், ஆன்மீகம் போன்ற துறைகளைச் சேர்ந்தவர்கள் அளவோடு வளர்ச்சி பெறுவார்கள். பக்தி மார்க்கத்திலும், ஞானமார்க்கத்திலும் ஈடுபாடு உள்ளவர்கள் மனத்தெளிவு பெறுவார்கள். வெளிநாட்டுத் தொடர்பு பயன்படும். கேளிக்கை, உல்லாசங்களில் ஈடுபாடு கூடும். 25-ஆம் தேதிக்கு மேல் புதிய பொருட்களின் சேர்க்கை நிகழும். எலக்ட்ரானிக், கம்ப்யூட்டர் இனங்கள் ஆக்கம் தரும். மார்ச் 15, 17, 19, 20, 22, 26, 27, 29, 30, 31, ஏப்ரல் 2, 5, 10, 12 தேதிகள் சிறப்பானவை. கிழக்கு, வடமேற்குத் திசைகள் நலம் தரும். மீன, ரிஷப, கடக ராசிக்காரர்கள் உதவுவார்கள். 1, 5, 6, 7, 9 எண்கள் அதிர்ஷ்டமானவை.

தனுசு : (மூலம், பூராடம், உத்திராடம் 1-ஆம் பாதம் முடிய)

சனி, ராகு ஆகியோரது பலம் காரணமாக உங்கள் ஆற்றல் பிரகாசிக்கும். பேச்சில் இனிமை தவழும். எதிர்ப்புக்கள் குறையும். எடுத்த காரியங்கள் இனிது நிறைவேறும். நூதனமானவர்களால் அனுகூலம் உண்டாகும். குடும்பத்தில் சுபகாரியங்கள் நிகழும். தொழிலாளர் களுக்கும், விவசாயிகளுக்கும் உற்சாகமான பாதை தெரியவரும். எண்ணெய் வகையறாக்கள், இரும்பு சம்பந்தப்பட்ட இனங்கள், தோல் பொருட்கள் ஆகியவை லாபம் தரும். சினிமா, சங்கீதம் போன்ற கலைத் துறைகளைச் சேர்ந்தவர்கள் சுபிட்சம் காண்பார்கள். பொருள்வரவு கூடும். எதிர்பாராத ஓரிரு செலவுகளும் அவ்வப்போது ஏற்படும். கேளிக்கை உல்லாசங்களிலும் விருந்து உபசாரங்களிலும் ஈடுபடச் சந்தர்ப்பம் கனிந்துவரும்.

கணவன், மனைவியரிடையே களிப்புறவு கூடும். நில புலங்களால் அளவோடு அனுகூலம் உண்டாகும். நண்பர்கள் ஓரளவு உதவுவார்கள். பிற மொழி, மதக்காரர்களது தொடர்பு நலம் தரும். 4-ல் சூரியனும், 8-ல் செவ்வாயும் உலவுவதால் எதிலும் பதற்றம் வேண்டாம். நிதானம் அவசியம் தேவை. உடன் பிறந்தவர் களால் ஓரிரு பிரச்சினைகள் உருவாகும். பக்குவத்துடன் சமாளிப்பது நல்லது. 5-ல் உள்ள கேதுவும், விரயத்தில் உள்ள ராசிநாதனாகிய குருவும் மனத்தில் சிறுசிறு குழப்பத்தை உண்டுபண்ணுவார்கள். மக்கள் நலனில் கவனம் செலுத்திவருவது நல்லது. தெய்வ வழிபாட்டில் சிந்தையைச் செலுத்தினால் அமைதி காணலாம். மார்ச் 15, 17, 19, 20, 22, 26, 27, 29, 30, 31, ஏப்ரல் 2, 5, 7, 12 தேதிகள் சிறப்பானவை. மேற்கு, தென்கிழக்குத் திசைகள் நலம் தரும். மகர, கும்ப, துலா ராசிக்காரர்கள் உதவுவார்கள். 4, 6, 8 எண்கள் அதிர்ஷ்டமானவை.

மகரம் : (உத்திராடம் 2-ஆம் பாதம் முதல்,. திருவோணம், அவிட்டம் 2-ஆம் பாதம் முடிய)

குரு, சுக்கிர பலம் காரணமாக உங்கள் அந்தஸ்தும் மதிப்பும் உயரும். உடல் நலம் சீர்பெறும். மனத்தில் உற்சாகம் கூடும். எண்ணங்கள் இனிது நிறைவேறும். பணநடமாட்டம் திருப்திதரும். ஸ்பெகுலேஷன், கொடுக்கல்-வாங்கல் இனங்கள் ஆதாயம் கொண்டு வரும். கலைத்துறைகளைச் சேர்ந்தவர்கள், மாதர்கள், சமுதாய நலப்பணியாளர்கள், அரசியல்வாதிகள், ஆசிரியர்கள், ஆன்மீகவாதிகள் ஆகியோருக்கெல்லாம் செழிப்பான நேரமிது. அரசு விவகாரங்கள் பயன் அளிக்கும். நிர்வாகத் திறமை கூடும். பிற மொழி, மதக்காரர்களது தொடர்பு பயன்படும். குடும்பத்தில் நற்காரியங்கள் நிகழும். விருந்து உபசாரங்களிலும், கேளிக்கை, உல்லாசங்களிலும் ஈடுபடச் சந்தர்ப்பம் கனிந்துவரும்.

மருத்துவம், இரசாயனம், விஞ்ஞானம் போன்ற துறைகளைச் சேர்ந்தவர்கள் வெற்றிநடை போடுவார்கள். அலுவலகப் பணியாளர்களது எண்ணம் நிறைவேறும். தொழிலாளர்களது திறமை பளிச்சிடும். வியாபாரிகள், கணிதத் துறையாளர்கள், எழுத்தாளர்கள் ஆகியோர் ஓரளவு வளர்ச்சி காண்பார்கள். மக்களால் நலம் உண்டாகும். தனவந்தர்கள், பெரியவர்கள் ஆகியோரது ஆதரவு கிட்டும். தெய்வப்பணிகள் நிறைவேறும். 4-ல் கேதுவும், 7-ல் செவ்வாயும் உலவுவதால் எதிலும் பதற்றம் வேண்டாம். பொறுமை மிகத் தேவை. கூட்டுத் தொழிலி ல் அக்கறை செலுத்த வேண்டிவரும். நிலபுலங்கள் விஷயத்தில் விழிப்புடன் ஈடுபடுவது நல்லது. மார்ச் 19, 20, 22, 26, 27, 29, 30, 31, ஏப்ரல் 2, 5, 7, 10 தேதிகள் அனுகூலமானவை. வடகிழக்கு, தென்கிழக்குத் திசைகள் நலம் தரும். கும்ப, மீன, ரிஷப, விருச்சிக ராசிக்காரர்கள் உதவுவார்கள். 1, 3, 4, 6 எண்கள் அதிர்ஷ்டமானவை.

கும்பம் : (அவிட்டம் 3-ஆம் பாதம் முதல், சதயம், பூரட்டாதி 3-ஆம் பாதம் முடிய)

3-ல் உள்ள கேதுவும், 6-ல் உள்ள செவ்வாயும் உங்கள் பராக்கிரமத்தைக் கூட்டுவார்கள். எதிர்ப்புக்களை முறியடித்துக் கொண்டு வாழ்வில் வளர்ச்சி காண்பீர்கள். பொறியியல்துறை லாபம் தரும். நூதனமானவர்களால் அனுகூலம் உண்டாகும். போட்டிப் பந்தயங்களிலும் வழக்கு, வியாஜ்ஜியங்களிலும் அனுகூலமான போக்கு தெரியவரும். நிலம், மனை, வீடு, வாகனங்களால்

நலமேற்படும். சட்டம், காவல், இராணுவம் போன்ற துறைகளைச் சேர்ந்தவர்கள் வெற்றி நடைபோடுவார்கள். செந்நிறப்பொருட்கள் லாபம் தரும். மனத்தில் நல்ல எண்ணங்கள் உருவாகும். பொதுநலப்பணிகளில் ஆர்வம் கூடும். உடல்நலம் ஒருநாள் போல் மறுநாளிராது என்பதால் கவனம் தேவை.

2-ல் சூரியன் உலவுவதால் குடும்பத்தில் சிறுசிறு பிரச்சினைகள் எழும் என்றாலும் சமாளிப்பீர்கள். பேச்சில் சூடான வார்த்தைகளை உதிர்க்கலாகாது. சுக்கிரபலம் கூடியிருப்பதால் கலைத்துறை ஆக்கம் தரும். மாதர்களது திறமை பளிச்சிடும். புதிய ஆடை, அணிமணிகளின் சேர்க்கை நிகழும். பெற்றோரால் ஓரிரு எண்ணங்கள் நிறைவேறும். அலுவலகப்பணியாளர்கள், தொழிலாளர்கள், வியாபாரிகள் ஆகியோர் கடுமையாகப் பாடுபட்டே பயன் பெறவேண்டிவரும். எதிர்பாராத ஓரிரு மாற்றங்களுக்கும் ஆட்பட நேரலாம். ஜனன கால ஜாதகப்படி தற்சமயம் யோக பலம் உள்ள தசை, புக்தி, அந்தரங்கள் நடைபெறுமானால் நலம் கூடவும், சங்கடங்கள் குறையவும் வாய்ப்புண்டாகும். தெய்வ வழிபாடு மனநிம்மதியைத் தரும். மார்ச் 15, 19, 20, 22, 26, 27, 29, 30, 31, ஏப்ரல் 2, 5, 7, 10, 12 தேதிகள் சிறப்பானவை. தெற்கு, வடமேற்குத் திசைகள் அனுகூலமானவை. மேஷ, கடக ராசிக்காரர்கள் உதவுவார்கள் 6, 7, 9 எண்கள் அதிர்ஷ்டமானவை.

மீனம் *: (பூரட்டாதி 4-ஆம் பாதம் முதல், உத்திரட்டாதி, ரேவதி முடிய)*

ராசிநாதன் 9-ல் அமர்ந்து உங்கள் ராசியையும், 3-ஆம் இடத்தையும், 5-ஆம் இடத்தையும் பார்வையிடுவதால் உங்கள் புத்திசாலித்தனம் பிரகாசிக்கும். செயலில் ஒரு வேகம் தென்படும். மனத்தில் உற்சாகம் கூடும். முயற்சிகள் வெற்றி பெறும். நல்லவர்களது நேசத்தால் நலம்பெறச் சந்தர்ப்பம் கனிந்து வரும். தெய்வப் பணி களிலும் தருமப்பணிகளிலும் ஈடுபாடு கூடும். பெற்றோரால் மக்களுக்கும், மக்களால் பெற்றோருக்கும் அனுகூலம் உண்டாகும். அலுவலகங்களில் பணி புரிபவர்கள், ஆசிரியர்கள், பேராசிரியர்கள், மதபோதகர் கள், சட்ட வல்லுனர்கள் ஆகியோர் தங்கள் நோக்கம் ஈடேறப் பெறுவார்கள். பதவி உயர்வு, இடமாற்றம், ஊதிய உயர்வு ஆகியவற்றைப் பெறுவதற்குரிய வாய்ப்புக்கள் கூடிவரும்.

பொருள்வரவு கூடும். ஸ்பெகுலேஷன், கொடுக்கல்-வாங்கல் இனங்கள் லாபம் தரும். அயல்நாட்டுத் தொடர்பு பயன்படும். புனித யாத்திரை மேற்கொள்ளச் சந்தர்ப்பம் கூடிவரும். கலைத்துறையினருக்கு வெற்றி வாய்ப்புக்கள் கூடும். மாதர்களது திறமை பளிச்சிடும். அலைச்சலும் உழைப்பும் சற்று கூடும். எதிர்பாராத ஓரிரு செலவுகளைச் சந்திக்கவும் நேரலாம். பிற மொழி, மதக்காரர்களிடம் வெளிப்படையாகப் பழகவேண்டாம். உணவு விஷயத்தில் கட்டுப்பாடு தேவை. பயணத்தின் போதும் இயந்திரங்களில் பணிபுரியும்போதும் விழிப்புடன் இருப்பது நல்லது. திருமணம் ஆகாதவர்கள் அதற்கான வாய்ப்பைப் பெறுவார்கள். கணவன், மனைவியர் உறவுநிலை சீராகவே இருந்துவரும். வியாபாரிகள் விழிப்புடன் இருப்பது நல்லது. மார்ச் 15, 17, 22, 26, 27, 29, 30, 31, ஏப்ரல் 2, 5, 7, 10, 12 தேதிகள் சிறப்பானவை. வடகிழக்கு, தென்கிழக்குத் திசைகள் நலம் தரும். கடக, விருச்சிக, மகர ராசிக்காரர்கள் உதவுவார்கள். 3, 6, 9 எண்கள் அதிர்ஷ்டமானவை.



சிறுகதைக் களஞ்சியம் நூல் வெளியீடு

அரை நூற்றாண்டுகளாக இதழ்ப் பணியில் தன்னை ஈடுபடுத்திக் கொண்டு இலக்கிய வளர்ச்சிக்குத் தொண்டாற்றி வரும் 'அமுதசுரபி'யின் ஆசிரியர் கலைமாமணி விக்கிரமன் அவர்களுக்கு, இவ்வாண்டு சிறுகதை இலக்கியப் பொன்விழா ஆண்டாகும்.

இந்த பொன்விழா ஆண்டைச் சிறப்பிக்கும் வகையில் விக்கிரமன் அவர்கள் எழுதிய சிறந்த சிறுகதைகள் 51ஐத் தொகுத்து, காலத்தின் கண்ணாடியாக ஒரே நூலாக உருவாக்கப்பட்டுள்ள 'விக்கிரமனின் பொன்விழா ஆண்டுச் சிறுகதைக் களஞ்சியம்' என்ற நூலின் வெளியீட்டு விழா 22.1.95 ஞாயிறு காலை 9 மணிக்கு சென்னை அண்ணா சாலையிலுள்ள பிலிம் சேம்பர் கட்டட அரங்கத்தில் நடைபெற்றது.

விழாவிற்கு டாக்டர் கி. வேங்கட சுப்பிரமணியன் தலைமை வகித்தார்.

முன்னதாக செல்வி பவானி சுபாக்யாவின் நாட்டிய நிகழ்ச்சியும், கவிஞர்கள் தேவநாராயணன், பால இரமணி, வேதம், டாக்டர் கிருஷ்ண ஸ்ரீநிவாஸ் வாழ்த்து கவியரங்கமும் நடந்தன.

பாரதி காவலர் டாக்டர் கே. இராமமூர்த்தி வரவேற்புரையாற்றினார்.

டாக்டர் கி. வேங்கட சுப்பிரமணியனின் தலைமை உரைக்குப் பிறகு, 'பொன்விழா ஆண்டு சிறுகதைக் களஞ்சியம்' நூலை கலைமாமணி கங்கை அமரன் வெளியிட, ஸ்ரீராம் நிறுவனத்தைச் சேர்ந்த என்.சி. விஜயராகவன் பெற்றுக் கொண்டார். தொடர்ந்து ஐ.எச்.எஃப்.டி.ஸி நிர்வாக இயக்குநர் எம்.மாரிமுத்து, மோகன் டிஸ்டிலரீஸ் லிட் நிர்வாக இயக்குநர் எம். நந்தகோபால், பார்க் டவுன் பெனிஃபிட் பண்ட் லிட் சேர்மன் ஆர். விவேகானந்தன், தமிழ்நாடு - புதுவை மாநில திரைப்படச் சங்கங்கள் பிரிவு செயலர் ஏ.வி. ராஜகோபால், தென்னிந்திய சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகத் தலைவர் இரா. முத்துக்குமாரசாமி, தென்னிந்தியப் பதிப்பாளர்கள் சங்கச் செயலாளர் அகிலன் கண்ணன், ஸ்டேட் பாங்க் அதிகாரிகள் சங்கப் பள்ளிகளின் தாளாளர் எம்.பாலகிருஷ்ணன், கயல் தினகரன், உரத்த சிந்தனை, நெல்லை கலாசாரச் சங்கம், இலக்கிய வீதி அமைப்புகளின் சார்பில் அதன் அங்கத்தினர்கள், ராஜபாளையம் ஸ்ரீராமலிங்கா மில்ஸ் அதிபர் டி.ஆர்.தினகரன், மு. சிவம் ஆகியோர் நூல் பிரதிகளைப் பெற்றுக் கொண்டவர்களில் குறிப்பிடத்தக்கவர்கள்.

கலைமாமணி விக்கிரமன் அவர்களின் உயர்வுக்குத் தொடக்ககாலத்தில் உறுதுணையாயிருந்த எழுத்தாளர் நவீனன், ஓவியர் என். சுப்ரமணயம் (ஸுபா), ஆ. தாமோதரன், வித்வான் வே. லட்சுமணன், டாக்டர் கிருஷ்ண ஸ்ரீநிவாஸ், வி.ஜி. சந்தோஷம் ஆகிய பெருமக்களை விக்கிரமன் பாராட்டிக் கௌரவித்தார்.

சென்னை பல்கலைக்கழகத் தமிழ்த்துறைத் தலைவர் டாக்டர் சி. பாலசுப்பிரமணியன் நூலின் சிறுகதைகளைத் திறனாய்வு செய்து உரையாற்றினார்.

மங்கையர் மலர் ஆசிரியை திருமதி மஞ்சுளா ரமேஷ் விக்கிரமனுக்கும், அவர் துணைவியாருக்கும் மலர் கிரீடம் அணிவித்துப் பாராட்டிப் பேசினார். வழக்கறிஞர் த.இராமலிங்கம், சிறுகதைகளின் சிறப்பை விளக்கிச் சிறப்புரையாற்றினார். இரா. முத்துக்குமரன், வள்ளல் வி.ஜி. சந்தோஷம் மற்றும் பலர் பாராட்டுரையாற்றினர்.

விழாவில் வித்வான் வே.லட்சுமணன் ரூபாய் 5000 பொற்கிழி வழங்கிப் பேசினார். கலை மாமணி விக்கிரமனின் ஏற்புரைக்குப் பின் குன்றக்குடி பெரிய பெருமாள் நன்றி கூறினார்.

ஏர்வாடி எஸ். இராதாகிருஷ்ணன் விழா நிகழ்ச்சிகளைத் தொகுத்து வழங்கினார்.

தனிமரத் தோப்பு

ராஜேந்திரகுமார்

12

நேரமாக ஆக பயமும் அமைதியின்மையுமாக நிறைய வியர்த்துப் போன வினிதா எழுந்து நிற்க –

இழுத்துப் பிடித்து நிறுத்தினான் மகேஷ். "இரு. எத்தனை வருஷம் கழிச்சு சந்திக்கிறோம். நிறையப் பேசணும். இப்படி ஓடினால் என்ன அர்த்தம்? அப்படி என்ன அவசர ஓட்டம்?"

"விடு..." கைகளை உருவி உதறி விலகி நின்றாள். "என்னை விடு. எனக்கு சாகிறதிலே சம்மதமில்லே. அதுவும் உங்களோட சேர்ந்து சாக நான் விரும்பலை."

ஒருசேர எல்லாரும் அதிர்ந்து நிமிர்ந்து பார்க்க –

"ஆமாம். இன்னும் கொஞ்ச நேரத்திலே இந்தக் கட்டடமே இடிஞ்சு தூள் தூளாகிப் பறக்கப் போகுது. நீங்க எல்லாருமே போயிடுவீங்க. இத்தனை சொத்துகளையும் வாரிசாகி கட்டிக் காக்க நான் ஒருத்தியாவது இருக்க வேண்டாமா?"

"வினிதா டியர். உனக்கென்ன பைத்தியமா?"

"என்ன உளறலிது?"

"உளறல் இல்லே. உண்மை. என் ஆள் பாண்டி இந்த வீட்டில ஒளிச்சு வைச்ச டயம் பாம் சில நிமிஷத்தில் வெடிக்கும். ஒட்டு மொத்தமாக எல்லோரும் சிதறிப் போயிடுவீங்க. எதிர்ப்பேயில்லாத மகாராணியாக நானே முடி சூட்டிக்குவேன்" என்றவள் –

மற்றவர்கள் எழுந்து துரத்தும் முன் அறைக்கு வெளியே போய், கதவை இழுத்து சாத்தி பூட்டி விட்டாள். "தப்ப முடியாது. நீங்க தப்ப முடியாது."

"பைத்தியக்காரி செய்தாலும் செய்வாள்."

"யாரும் பயப்படாதீங்க. அமைதியாயிருங்க" என்றவள் அறை மூலையில் இருந்த இன்டர்காமை நோக்கிப் போனாள்.

வெளியே –

படியிறங்க முயன்ற வினிதா – கீழேயிருந்து மானேஜரும் ராஜாத்தியும் ஏறி வருவதை அறிந்து பக்வாட்டில் திரும்பி மரத்தால் ஆன தளத்தின் வராண்டாவில் ஓட ஆரம்பித்தாள் தடதடவென்ற பெரும் ஓசையுடன்.

இரும்பு கேட் அருகே அமர்ந்திருந்த காவல் ஆளின் கண்ணில் காட்சி பட்டதும் நிமிர்ந்து எழுந்து பார்த்தான்.

தடதடவென்ற ஓசையுடன் ஓடி வரும் பெண்ணை அடையாளம் தெரிந்ததும் வியந்தான்.

இதென்ன? காட்டேஜில் குடியிருக்கும் பெண் – அலறியடித்து, அதுவும் இந்த நேரத்தில் ஓடி வருகிறது? முகத்தில் உடனே தீர்மானம் வந்து தோளில் சாத்தியிருந்த இரட்டைக் குழல் துப்பாக்கியை எடுத்து மடித்து நிமிர்த்தி காக் செய்து கொண்டு நிமிர்த்தினான்.

"யாரது?" என்ற இவனது இடியோசைக் குரலுக்கு –

நின்று திரும்பிப் பார்த்த வினிதாவின் வலது மார்பில் நெருப்பும் புகையும் ரத்தத்தையும் சிதறடித்து துளைத்ததும் மடிந்து நிமிர்ந்தாள். அதற்குள் –

இடப் பக்க மார்பில் பாய்ந்த குண்டு அவளைத் தூக்கியடிக்க – சுவரின் மேல் பகுதியில் மோதி – சரிந்து... சரிந்து தரையில் விழுந்து துவண்டாள் – நிரந்தரமாக.

பரபரப்பாக மாடி ஏறி வந்த மானேஜரும் ராஜாத்தியும் கதவு திறந்து விட வெளிப்பட்டவர்கள் கேட்டார்கள் –

"அது என்ன வேட்டு சத்தம்?"

புரியாத நிலையில் வராண்டாவுக்கு ஓடிப் போனவர்கள் கவிழ்ந்து கிடந்த வினிதாவின்

மார்புப் பகுதி தரையில் ரத்தம் குளமாக தேங்கி இருந்ததைப் பார்த்தார்கள்.

நாடி பிடித்துப் பார்த்தான் டாக்டர் மகேஷ்.

அமைதி அலறியது. மௌனம் முனகியது.

முதலில் நினைவுக்குத் திரும்பிய லீனா சொன்னாள், "வாங்க, போனவள் போய் விட்டாள். நாங்களாவது பத்திரமான இடம் தேடிப் போய் விடுவோம்."

"நீ என்ன சொல்றே டியர்?"

"சொன்னாளே. அவள் அசிஸ்டெண்ட் ஆள் வைத்த டயம் பாம் வெடிக்கப் போகிறதாக. எழுந்து வாங்க போய் விடலாம்."

எல்லோரும் அவசரமாக படி இறங்கும் போது, தயாரிப்பாளர் அம்மாள் படி ஏறி வந்தாள். "என்ன அது? ஏதோ பெரிசா வெடி சத்தம் கேட்டது? பார்த்துட்டுப் போகலாம்னு வந்தேன். எங்கே எல்லோரும் இப்படி ஓடி வர்றீங்க?"

"என் தங்கை வினிதாவோட ஆள் இந்த வீட்டில் டயம் பாம் வைத்திருக்கிறதாகச் சொன்னாள்."

"யார் அந்த பாண்டியனா? பயப்படாமே உள்ளே போங்க. அவனை மதியமே போலீஸ் விலங்கு மாட்டி தள்ளிகிட்டுப் போயாச்சு."

புரியாமல் பார்த்தார்கள்.

"காலையில் மெட்ராஸுக்கு கால் போட்டு புரொடக்ஷன் மானேஜர் கிட்டே பேசினேனில் லையா? அப்பவே அவர் மூலமாக அங்கே போலீஸ் தேடற தீவிரவாதி பாண்டி இங்கே இருக்கிறதாகத் தகவல் சொல்லச் சொல்லிட் டேன். அவங்க நாகர்கோயில் போலீஸை அலர்ட் பண்ணி இவனை மதியமே இழுத்து கிட்டுப் போயிட்டாங்க. அப்புறம் வெடியாவது; வைக்கிறதாவது?வாங்க. தைரியமாக உள்ளே போகலாம் வாங்க."

போலீஸ் வந்தது.

அந்த வினிதாவைச் சுற்றிலும் பிளாஷ்கள் மின்னின. போலீஸ் சடங்குகள் நடக்கும்போதே இன்ஸ்பெக்டர் கேட்டார், "கொலையாளியைப் பற்றி உங்களுக்கு ஏதும் ஊகமிருக்கிறதா அம்மா?"

"ஊகமில்லை. உறுதியாகவே தெரியும். சுட்டது எங்கள் காவல் ஆள்" அனாமிகா சொன் னாள், "அதுக்காக அவன்மேல் நடவடிக்கை எடுக்க முடியாது. காட்டேஜில் அதுவும் ஒரு பயங்கரமான ஆளோட தங்கி இருந்த பெண் இருட்டினப்புறம் பங்களா மாடி வராண்டாவில் ஓடறதைப் பார்த்து சந்தேகப்பட்டு அவன் சுட்டுத் தள்ளி இருக்கணும். குற்றம் சொல்ல முடியாது. அது அவன் கடமை."

"அப்ப புகார் தரப் போகிறதில்லையா நீங்க?"

"தேவையில்லை. ஸ்டேட்மெண்ட் வேணு மானாலும் எழுதித் தரேன்."

"சவப் பரிசோதனைக்காவது அனுமதிப் பீங்களா?"

"அவசியம் கொண்டு போங்க. அதுவும் நல்லதுக்குத்தான். நாளை உங்களுக்கும் ஒரு பிரச்னை வரக்கூடாது. ஆனால் சீக்கிரமாகப் பாடியைக் கொண்டு வந்து கொடுக்கப் பாருங்க. கொள்ளிவைக்க வேண்டிய மகன் கிளம்பி ஸ்டேட்ஸுக்குப் போயிட்டா அநாதைப் பிணமா ஆயிடுவாள்."

"சரிம்மா" என்ற இன்ஸ்பெக்டர் ஒரு நீளமான கவரை எடுத்து நீட்டினார். "அந்தப் பொண்ணோட கைப்பையில் இருந்தது. உங்க நேரடிப் பார்வைக்குன்னு போட்டிருந்ததனால் எடுத்து வந்தேன். இந்தாங்க."

புரியாத நிலையிலேயே வாங்கி உள்ளே இருந்ததை உருவி பார்த்தாள்.

காசோலை.

என்றோ அப்பா கையெழுத்து மட்டும் போட் டுக் கொடுத்த பிளாங்க் செக். பார்த்தாள்.

தொகை எழுத வேண்டிய இடத்தில் பெரிய தாக எழுதி இருந்தது. 'அனாமிகா.'

பார்த்தாள். பார்த்துக் கொண்டே நின்றாள்.

சஞ்சீவியை நினைத்துப் பார்த்த அவள் பார்வையில் இப்போது மரியாதை வந்தது. பெருமிதம் தெரிந்தது.

"அப்பா" இனியா கேட்டாள், "ஓர் அதிகப் பிரசங்கித்தனமான கேள்வி கேட்டால் கோவிச் சுக்க மாட்டிங்களே."

பைப்பை உறிஞ்சியபடி சொன்னார்; "உன்மேல் எப்பவும் எனக்குக் கோபம் வராது. சொல்லும்மா."

"அம்மா அனாமிகாவுக்கு நாம எதுவுமே செய்யாமலேயே இருக்கோம் அப்பா."

"என்ன செய்யணும்னு எதிர்பார்க்கிறே?"

"அவங்களை எங்க அம்மாவாக ஆக்கிக்க ஆசைப்படறேன்."

"அதான் 'அம்மா'ன்னு கூப்பிட்டுட்டுதானே இருக்கே?"

"அது ஆசைக்கு. உண்மையிலேயே சட்டப் படி அம்மாவாக்கிவிட்டால் என்ன? தவறில்



லேப்பா. விதவா விவாகம் இப்பெல்லாம் வரவேற்கப்படுது."

"அதுக்காக என்னை அவளைக் கல்யா ணமே பண்ணிக்கச் சொல்றியா?" சிரித்தார், "என் வயசு தெரியுமா உனக்கு?"

"தெரியும். ஆண்கள் வயது ஒரு பொருட்டில லேப்பா. என் சிநேகிதி வசந்தியோட அப்பா எழுபதாவது வயசில மூணாவதாக ஒரு பெண் ணைக் கல்யாணமே பண்ணி இருக்கார்."

"உன் உளறலை நிறுத்தறியா? அவங்க காதிலே விழுந்தா வருத்தப்படுவாங்க. உடம்பு ஆசைக்கு அலையறவளாயிருந்தா சம்மதிச் சிருப்பா. ஆனா இவ அப்படியில்லேம்மா. வாழ்க்கையில் நிறைய கசப்பைத் தின்று தின்று பழகிப் போனவள். விரும்ப மாட்டா."

"நான் பேசிப் பார்க்கறேம்ப்பா."

"வேண்டாம். இப்பத்தான் மகளைப் பறி கொடுத்திருக்காங்க. மகனோட குடும்பத்தோட கொஞ்சமா சந்தோஷத்தை அனுபவிச்சிட்டு இருக்கிறாங்க. நீ வேற போய் குழப்பாதே."

"ஆனாலும் என் ஆசை நியாயமானது. உங்க ரெண்டு பேரையும் சம்மதிக்க வைக்க முடியும் என்கிற நம்பிக்கை எனக்கிருக்கு."

"அந்த நினைப்பை அழிச்சிடு இனியா" என்ற குரலுக்குத் திரும்பிப் பார்த்தாள். "என்னை நானே அழிச்சிட்டாலும் அழிச்சிப் பேனே தவிர, நீ நினைச்சதுக்கு சம்மதிக்க மாட்டேன். காரணத்தை உன் அப்பாவே பூடக மாகச் சொல்லிட்டார்."

அவள் நீட்டிய காசோலையைப் பார்த்தாள் இனியா.

"உங்கள் பேரை எழுதி நீங்கள்தான் வேணும்னு நிதர்சனமாகச் சொல்லி இருக் காரே. அதிலேர்ந்தே புரியல்லையா, அவர் உங்க மேலே வைச்சிருக்கிற ஆழ்ந்த அன்பு?"

"அந்த அன்பைக் கால தாமதமாகக் காட்டியிருக்கிறார். உன் தேவையை எழுதிக்க. அது உனக்கேன்னு சொல்லி என் அப்பா கையெழுத்தே போட்டுக் கொடுத்த செக். இதை அப்பவே அவர்கிட்டே காட்டியிருந்தால் அவர் மறுப்புச் சொல்ல வாய்ப்பே இருந் திருக்காது. என் பெயரில்லாமல் பணத்தை எழுதி இருந்தால்கூட இப்ப கொடுத்திருக்க மாட்டார்கள். செக்குக்கு வாழ்வு ஆறு மாசம் தான். இது எப்பவோ இறந்து போன செக். அதே மாதிரி என் உணர்ச்சிகளும் எப்பவோ மரத்துப் போயிடுச்சு. ஆக – மறந்துடு. நாம

நல்ல நண்பர்களாகவே இருப்போம். இப்ப மாதிரியே ஒரு நட்போட. 'நீ நலமா? நான் நல்லாயிருக்கேன். நீ சுகமா? நான் சுகமாயிருக்கேன்.' அது போதும். அதை விட்டு உறவு முறைன்னு வந்து நாளைக்கு ஒரு மன சங்கடம்னு வந்தால் அதைத் தாங்க என்னாலும் முடியாது. அந்தத் தெம்பும் எனக்கு இல்லை."

அழுத்தமாக, "பை, குட்பை" என்றவள் போவதை சஞ்சீவியும் இனியாவும் பார்த்துக் கொண்டே நின்றார்கள் - வேதனையாக நெடு நேரம்.

பதினெட்டு நாள்கள் போன விதமே தெரியவில்லை.

உற்சாகமாக - மிக உற்சாகமாகத் தெரிந்தாள் அனாமிகா.

குழந்தைகளோடு குழந்தையாக விளையாடினாள். இவன் சொன்ன காக்கை நரி வடை கதை அந்த அமெரிக்க மனங்களுக்குப் புதுமையாக இருந்தன. ரசித்து சிரித்தார்கள்.

"பாத்தீ... எனக்கு பவுடர் பூசி விடு."

"பாட்டி வேலையாயிருக்கேன். மம்மி கிட்டே போட்டுக்க."

"வேணாம். பாத்தீதான் போடணும்" கெஞ்சினான் பேரன். "ப்ளீஸ் பாத்தீமா. ப்ளீஸ்."

"சரி வா."

"ராத்திரி குழந்தைங்க தூங்க வரல்லே?"

"நோ மகேஷ். பாட்டி.: கூடவே பக்கத்துக் கொருவர் கால் போட்டுத் தூங்கிட்டாங்க. பகல் பூராவும் என்னதான் அப்படி பேசுவாங்களோ. அப்படி பேசறாங்களோ. இவங்க கேட்கிற கேள்விக்கு அவங்க சளைக்காமல் பதில் சொல்றாங்க. நான் செய்யற சமையலை விட்டுட்டு பாட்டி சாப்பிடற மிளகு ரசத்தையும் அப்பளத்தையும் ரசிச்சுச் சாப்பிடறாங்க."

மகேஷ் யோசனையில் ஆழ்ந்தான்.

"என்ன டார்லிங் யோசனை?"

"எனக்கொரு யோசனை. சொன்னால் தப்பாக எடுத்துக்க மாட்டாயே?"

"உன் யோசனையும் முடிவும் எப்பவும் சரியாகத்தான் இருக்கும். ,, அந்த நம்பிக்கை இருக்கிற வரை என் சம்மதம் உனக்கு எப்போதும் உண்டு. ஆமாம். பதினாறாம் தேதியோட உன் லீவு முடிகிறதில்லே?"

"எக்ஸ்டென்ஷன் கேட்டிருக்கேன். இங்கே கட்டட வேலைகளை முடிச்சிட்டே. கிளம்புவோம்."

நிறைய ஆட்களைக் கொண்டு அனைத்துக் கட்டடங்களும் வேகம் வேகமாக எழுந்து கொண்டிருந்தன.

சஞ்சீவியின் உதவியால் புதிய ஆசிரியர்களையும் விரிவுரையாளர்களையும் பேராசிரியர்களையும் தேர்வு நடத்தி முடிவு செய்தான மகேஷ்.

காலையிலேயே வங்கிக்குச் சென்று நூறு, பத்து, ஐந்து என்று பட்டியல் போட்டு பணம் வாங்கி வந்து மாலையில் கூலியைப் பட்டுவாடா செய்தான்.

"போன வாரம் வாங்கின அட்வான்ஸ் அஞ்சு ரூபாயைக் கழிச்சிருக்கேன் அஞ்சலை!"

"ஆவட்டும் துரை!"

"குழந்தைக்கு ஊசி போட்டு விட்டேனே. ஜுரம் வருதா பரமு?"

"இல்லைங்க எஜமானே! சமயத்தில காப் பாத்திட்டீங்க. அதுக்கான ரூபாயைக் கழிச்சுக் குங்க ராசாவே."

"அதுக்கெல்லாம் பணம் வேணாம். குழந்தை குணமானால் போதும். என்ன ருக்மிணி! உன் புருஷன் இன்னமும் ராத்திரியானால் குடிச்சிட்டு வரானா?"

"அய இல்லை எசமானே! நீங்க திட்டின திட்ல மாறிட்டார். உடம்பும் இப்ப நல்லாத் தேறிகிட்டு வருது."

"தேறிடுச்சா?" கண்ணடித்தான். "ஜமாய்" என்றவன் அந்த ருக்மிணி வெட்கப்படுவதை ரசித்தான். இவன் காட்டிய அன்புக்கும் நெருக்கத்துக்கும் -

குறிப்பிட்ட காலத்துக்கு முன்பே கட்டடங்கள் தயாராகி விட்டன.

ஆரம்ப நாள் தேதி குறிக்கப்பட்டதும் அனாமிகா சொன்னாள். "ரிப்பன் வெட்டறதை என் இரண்டு பேரப் பிள்ளைகளும் வெட்டு வாங்க. அப்புறம் பெரிய இடத்துப் பிள்ளைகள் யாரையும் அனுமதிக்க வேணாம். அநாதைகள், படிக்க பணமில்லாத வசதி இல்லா ஏழைகளை மட்டுமே அட்மிட் பண்ணுங்க. ஹாஸ்டல், கல்லூரி எல்லாமே இலவசச் சேவையாக இருக்கட்டும்."

"அம்மா!.. ஏன் அப்படிச் சொல்றீங்க?"

"இதை மாதிரி 'ஏன்?'ன்னு கேட்க ஆளிருந்திருந்தால் இன்றைக்கு அன்னை தெரஸாவை அடையாளம் தெரியாமல் போயிருக்கும். அவங்க அளவுக்கு சேவை மனப்பான்மை இல்லைன்னாலும் அவங்க வழியிலாவது போகணும்னு ஆசை. பணத்துக்கு என்ன பஞ்சம்?

வருஷம் ஒரு தடவை நீ ஏதாவது உதவ மாட்டாயா?"

"பாராட்டறேன்ம்மா. உன்னைப் பாராட்ட றேன். இதுக்காக உனக்கொரு பரிசு தர ஆசைப்படறேன். மறுக்காமல் வாங்குவாய் தானே?"

"என்ன பரிசு?"

"சொல்றேன். ஆனா இப்ப இல்லே."

"மம்மீ..." மகேஷ் சொன்னான். "லீவ் முடிஞ் சுடுத்து. உடனே திரும்பி வரச் சொல்லி தகவல் வந்திருக்கு. நாளைக்கே.. கிளம்ப றோம்."

"சரி. ஏற்பாடு செய்யறேன். பாஸ்போர்ட்டு களை மானேஜர் கிட்டதானே கொடுத்திருக்கே? டிக்கெட்டுக்கு ஆன ஏற்பாட்டை நானே செய்ய றேன்."

"மம்மீ! கிளம்பறதுக்கு முன்னால உனக்குப் பரிசு தரணும்னு ஆசைப்படறேன்."

"அப்புறம். இன்னைக்கு பௌர்ணமி. குழந்தைகளையும் என் மருமகளையும் கன்னியா குமரிக்குக் கூட்டிட்டுப் போறேன். குமரிக் கோயில், விவேகானந்தா பாறை எல்லாம் பார்த்து சாயங்காலம் சூரியன் விழறதையும் - அதே சமயம் மறுபக்கம் சந்திரன் எழறதையும் பார்த்துட்டு வந்துடறோம். நீ ஆரம்ப விழா வுக்கான ஏற்பாடுகளைச் செய்" என்றவள் பேரக் குழந்தைகளின் கும்மாளத்துடன் கார் ஏறிப் போய் விட்டாள்.

மறுநாள் மாலை அதிக ஆர்ப்பாட்டமின்றி விழா நடந்து முடிந்ததும் - காட்டேஜுகள் ஒன்று ஒன்றாகக் காலியாகின.

பேரணி போல கார்களின் வரிசையில் முதல் காரிலிருந்து இறங்கி வந்த தயாரிப் பாளர் அம்மா, "கவலைப்படாதே. மகளே! உன் அம்மா இருக்கேன். எப்ப வேணுமானாலும் கூப்பிடு, வரேன். ரிகார்டிங்குக்குன்னு வந்து முழு பட ஷூட்டிங்கையும் முடிச்சிட்டோம். விட்டுப் பிரிய மனசே இல்லே. மறுபடியும் வரேன், அடுத்த படத்துக்கு."

சஞ்சீவியும் இனியாவும் வர - இனியாவைக் கட்டிப் பிடித்து முத்தமிட்டுச் சொன்னாள், "கவலைப்படாதே. உன் கல்யாணத்துக்கு உன் அம்மா ஸ்தானத்தில் இருந்து தாரை வார்த்துக் கொடுப்பேன். ஊருக்குப் பயப்படமாட்டேன். போய் வா மகளே" - கண்ணீருடன் கதவைத் திறந்து அவளை அமர்த்தியவள் சஞ்சீவியைப் பார்த்து கையசைத்தாள். இரும்புக் கேட்டுக்கு மேல் புதியதாக இருந்த வளையத்தில் நுழைந்து மறையும் வரை கண்ணீருடன் பார்த்தாள்.

"என் காரிலேயே திருவனந்தபுரம் ஏர்போர்ட்டில் மானேஜர் விட்டுட்டு வருவார். கிளம்பு மகேஷ்!"

"அதுக்கு முன்னால் நான் தர வேண்டிய பரிசைத் தந்துட்டுப் போறேனே. அம்மா, அப்பா, கணவன்; குழந்தைகள் எல்லாரு மிருந்தும் நீ தனிமையில் பட்ட கஷ்டம் எல்லாம் போதும். என் குழந்தைகளை உனக்குத் தரேன். நீ அவங்களை ஆசை தீர வளர்த்துக்க."

பார்த்தாள், "உன் அன்புக்கு வந்தனம் மகேஷ்! ஆனா பெற்ற பிள்ளைகளை விட்டு வாழறது எப்படிப்பட்ட கொடுமை என்கிறது எனக்குத் தெரியும். நான் அனுபவித்த அந்த வேதனை என் மருமகளும் அனுபவிக்க வேண் டாம். அதனால்தான் அவங்களுக்கும் டிக்கெட் வாங்கச் சொல்லிட்டேன். அவங்களோட இருந்த கொஞ்ச நாள் சந்தோஷமே. என் வாழ்நாள் முழுக்க நினைவில் இருக்கும். அது போதும். தவிர, இனிமே எனக்கேது தனிமை? என்னைச் சுற்றி என்னையே நம்பி ஆயிரமாயிரம் அநா தைக் குழந்தைகள் இருக்கப் போகிறார்களே!- அப்புறமென்ன? நீ கிளம்பு. இப்ப கிளம்பினால் தான் ரிப்போர்ட்டிங் நேரத்துக்குப் போய்ச் சேர முடியும்."

சரிந்து மண்டியிட்டு இரண்டு குழந்தைகளை யும் அணைத்துக் கொண்டாள்.

"நாங்க போக மாட்டோம். பாத்தீ, அழா தீங்க. அவங்கதான் போறாங்க. நாங்க உன் னோடதான் இருப்போம்" முத்தமிட்டார்கள்.

கதறி விட்டாள்.

"பாட்டிக்கு அமெரிக்கா பார்க்க வேணாமா? நீங்க போங்க. நான் வரேன். நயாகரா காட்டு வீங்களா?"

"ஓ! டிஸ்னிலாண்ட்கூட காட்டுவோம்."

"அப்ப போய்க் காரில் ஏறுங்க" என்றவாறு காரில் ஏற்றி விட்டாள்.

கார் நகர்ந்ததும் கையசைத்து குழந்தைகளுக் காக கையை அசைத்தவாறு நடந்தாள். சாலை வரை சென்றவள் கார் கண்ணிலிருந்து மறையும் மட்டும் நின்று விட்டு, கண்ணீருடன் திரும்பிய போது புதியதான வளையம் கண்ணில் பட்டது.

'தனி மரத் தோப்பு கல்வி வளாகம்' என்று எழுதி இருந்தது.

கண்ணீருடன் நினைத்துக் கொண்டாள் -

"பொருத்தமான பெயர்தான்."

உள்நோக்கி நடந்தாள்.

முற்றும்.



வேறு நதியில் அந்த ஓடம்

-ஸ்ரீவத்ஸன்

'தாத்தா! ஒன் சங்காத்தமே வேணாம் எனக்கு. ஆள விடு. கொஞ்சம் முழிப்பா இல்லேன்னா கடைக்கு வர்றவன் தொங்கற கயித்துலே ரெண்டு உருவிட்டுப் போயிடறான். இல்லேன்னா வேலை பாக்கற களவாணிப் பயலே ரெண்டு முந்திரியைக் கடை வாயிலே அதக்கறான். இதுல ஒன்ன ஒக்காரவச்சு நான் வேலை வாங்கினாப்பலதான்..'

'தம்பி..! கொஞ்சம் பெரிய மனசு செய்யுங்க. நான் வயசானவன். எம்புள்ளகிட்டே கேக்கற மாதிரி கேட்டுக்கறேன்..'.

'தாத்தா..! இந்தா ஒரு ரூவா. டீயை ஊத்திக்கிட்டு வீடு போய்ச் சேரு. வெளிச்சம் இருக்கறப்பவே. மோட்டார்காரன் சர்ர்னு ராக்கெட் மாதிரி போறான். அந்தி வேளை வேறு..'

பலகையில் அவன் வைத்த நாணயம் கண் சிமிட்டியது. அவன் கடையைக் கவனிக்கப் போய் விட்டான். கூட்டம் கிழவரை ஓர் ஓரமாய்த் தள்ளியது. ஒன்றும் செய்யத் தோன்றாமல் கிழவர் பரிதாபமாக அவனையே பார்த்தார், எப்போதாவது அவன் முகம் திரும்பாதா, தன்னைக் கவனிக்க மாட்டானா என்னும் ஏக்கத்துடன்.

"சிவசு! லாரி வந்திடுச்சா. ஏத்தி அனுப்பிட்டேன்னு ஃபோன்ல சொன்னான். இன்னுமா வருது..?" என்றபடி பெரியவன் கடைக்குள் ஐக்கியமானான். அவனுடைய பார்வையில் கிழவர் பட்டார்.

"தாத்தாவுக்கு என்ன வேணும்..?"

"இன்னும் போவலையா நீ? அதான் டீ குடிக்கத் துட்டு தந்தாச்சே, அப்புறம் என்ன..?" சின்னவன் குரல் ஏற்றம் பெற்றது.

"அதில்லை தம்பி..! ஒரு வேலை..." கிழவர் தட்டுத் தடுமாறி தயங்கிக் கேட்டார். அந்த ரூபாய் நாணயத்தை அவர் தொடவே இல்லை.

"சரிதான் போ. இங்க உள்ளவனுக்கே ஒண்ணையும் காணோம். இதுல நீ வேற முண்டியடிக்கணுமா? வியாபார நேரத்துல பஞ்சாயத்து செய்யாதே. எவனாவது தள்ளிட்டுப் போனான்னா வைத்தியம் வேற செய்யணும். நாங்கதான் ஒன்ன தள்ளினோம்னு பத்து பேரு கூடிடுவான்..." சின்னவன் சிடுசிடுத்தான்.

பெரியவன் கிழவரைப் பார்த்தான். அவரோ நிற்க முடியாமல், உட்கார வழியும் தெரியாமல் தடுமாறினார். கால்கள் பிடிப்பின்றி கிடுகிடுவென சாரியப் போகும் மரத்தைப் போல ஆடின.

பக்கத்துக் கடைக்கு அன்று விடுமுறை. அந்தத் திண்ணையில் அமர்ந்து முட்டியைத் தடவிக் கொடுத்தார். ஏதோ ஒரு பிடிவாதத்திற்காக அவர் இறுகி இருந்தது போல இருந்தார்.

கூட்டமெல்லாம் போய் ஒவ்வொரு பலகையாய் அடுக்கி சூடம் கொளுத்திய பின்பு கிழவர் அவர்களை நெருங்கினார்.

"தாத்தா! வீட்டுலே தேட மாட்டாங்களா? அப்போ புடிச்சு இங்கியேவா இருக்கீங்க..?" பெரியவனுக்கு இரக்கம் சுரந்து கேட்டான்.


கிழவர் விரக்தியாய்ச் சிரித்தார். சொல்லாத பல கதைகளைச் சொல்லும் சிரிப்பு அது.

"அண்ணே..! அப்போலேந்து பச்சப்புள்ள மாதிரி ஒரு வேலை குடு, வேலை குடுன்னு ஒரே பாட்டைப் பாடறாரு. அக்கடான்னு வீட்டுல இருக்கலாமில்ல? நமக்கே வேலை காணாது. ஏதோ ஒண்ணு ரெண்டு குடுத்தா வாங்கிட்டுப் போவாம. நம்ம வேலையுமில்ல கெடுது?"

அமரர் சின்னிகிருஷ்ணன் நினைவுச் சிறுகதைப் போட்டி'94– மூன்றாம் பரிசு ரூ. 750 பெற்ற சிறுகதை

"ஏன் தாத்தா. ஒங்க குடும்பம்லாம் எங்க இருக்கு? கொளந்தை, குட்டி யாரும் இல்லையா? பெரியவன் கேட்கக் கேட்க சின்னவன் நெளிந்தான். இப்போதே நேரமாகி விட்டது. 'பாதி ராத்திரியில் திடீரென்று லாரிக்காரன் வருவான் அவன் வந்தால் சிவராத்திரிதான். வரும் வரை கண்ணயர்ந்தால் உண்டு. காலையில் கடையும் திறக்க வேண்டும். இருக்கும் குட்டிற்கு அக்கடாவென்று ஒரு கை எண்ணெய் வைக்கக்கூட ஒழிவில்லை. அண்ணன் குசலம் விசாரிக்கும் நேரத்தைப் பார்'.

"அதை ஏன் கேக்கறீங்க? வக்கீல் குமாஸ்தாவா ஒரு பெரிய வக்கீல்கிட்ட இருந்தேன். செமத்தியான சில்லறை புரண்டுச்சு. ஒரு வீட்டைக் கட்டினேன். பொல்லாத நேரம் வக்கீலய்யா போய்ச் சேந்துட்டாரு.. மத்தவங்க யாரும் வச்சுக்கவும் இல்லே. வயசாச்சுன்னு யோசிச்சாங்க. ஏதாவது ஆகிறதுக்குள்ளே ஒழுங்கான வழி செய்யணுங்கறதுக்காக வீட்டைப் பையன் பேர்ல எழுதி வச்சேன். மடத்தனம். நான் செஞ்ச பெரிய மடத்தனம். கையில காசு இல்லேன்னதும் ஒரு துரும்புகூட என்னை மதிக்க மாட்டேன்னுடிச்சு. எஞ்செலவுக்குன்னு பத்து பைசா





வேணுங்கற ஞானம் வந்தது. சாவற நேரத்துல சங்கரா. பிச்சை எடுக்கற அளவுக்கு எறங்க மனசு ஒப்பலே.' குரல் உடைந்து வந்தது.

சகோதரர்கள் இருவரும் சூள் கொட்டினர். பெரியவன் பரி தாபப்பட்டு... சின்னவன் நேரமா வதைக் கண்டு சிணுங்க...

"சரி தாத்தா! காலைல வாங்க. பாப்போம்".

"அது போதும் தம்பி..." கையை உயர்த்திக் கும்பிட்டு விட்டு மெல்ல நடக்க ஆரம்பித்தார்.

★ ★ ★

சின்னவனின் முணு முணுப்பை மீறிக் கிழவர் கடையில் அமர்த்தப்பட்டார். கணக்குப் புத்தகம், தபால் போன்ற காகித வேலைகள் கொடுக்கப்பட்டன.

"என்ன தாத்தா! இன்னிக்கு தடபுடலா சாப்பாடா? கோியர் கனமா இருக்கு.'' மாரியப்பனுக்குத் தாத்தாவைச் சீண்டுவதில் தனிக் குஷி. இரவு அவரை சைக்கிளில் வீட்டிற்கு அழைத்துப் போகும் டிரைவர் அவன்.

"ஹூம், மாரியப்பா! கடைக்கு வந்தப்பறந்தான் கட்டியா சோறே, அதுவும் மத்யான வேளைல வருது. பாதி நாள் கஞ்சி, கூழ்னு புண்ணியவதி குடுப்பா.'

பெரியவன் பணத்தை எடுத் எண்ணிக் கொண்டிருந்தவ ஒருமுறை நிமிர்ந்து பார்த்து விட் வேலை யைத் தொடர்ந்தான்.

மாரியப்பன் சாப்பிட வீட் குப் போனான்.

கையில் ரிஜிஸ்தருடன் ஆபீசர் வந்தார்.

பெரியவன், சின்னவன் இ வரும் பரக்கப் பரக்க எழுந் நின்றனர். அவருக்கு இருக் அளித்தனர். வந்தவர் 'உ என்று காற்றைச் சட்டைக்கு விட்டார்.

'டே மாரியப்பா! ஒரு கூல்ட் வாங்கிட்டு வா' என்ற சின்னவ

பிறகுதான் மாரியப்பன் போனதை உணர்ந்து, விழித்தான்.

கிழவர் சட்டென்று கை வேலையை வைத்தார். விடுவிடு வென்று படியைவிட்டு இறங்கி நிமிடங்களில் குளிர்பான பாட்டி லுடன் வந்து பாட்டிலை வந்தவ ருக்கு நீட்டினார்.

வந்தவர் எல்லாம் முடிந்து சிறிது நேரத்தில் கிளம்பினார்.

"என்ன தாத்தா இது? வெயில்ல எறங்கிப் போய் நீங்க வாங்கிட்டு வர்றீங்க. எதைத்தான் செய்யற துன்னு கெடையாதா?" பெரியவன் கடிந்து கொண்டான்.

"என்னாச்சுன்னு கோவிக் கிறீங்க தம்பி? சும்மாத்தானே இருக்கேன். இது கூடச் செய்யாம அப்புறம் என்ன இருக்கு? மாரி யப்பன் வர்றவரைக்கும் ஆபீஸர் காத்துக்கிட்டிருப்பாரா? இன்னும் ரெண்டு விஷயம் நோண்டுவார். அவங்களையெல்லாம் டக் டக்னு டிஸ்போஸ் செய்துடணும்..."

"பெரிய ஆளு தாத்தா நீங்க..." பெருமிதத்துடன் பெரியவன் கூறினான்.

"மெடல்தான் குடுக்கணும். என்ன சாதனைன்னு, அண்ணன் இப்படித் தூக்கறாரு?" சின்னவன் உள்ளுக்குள் பேசிக் கொண்டான். அவனுக்குக் கிழவரின் இருப்பு அவ்வளவாக ரசிக்கவில்லை.

"தம்பி! கொஞ்சம் வெளியில தோலி இருக்கு. இதோ வந்துட றேன்" பதிலை எதிர்பாராமல் இறங்கிப் போனார்.

★ ★ ★

"ஏண்ணே! நாம சத்திரமா நடத்தறோம்? ஏதோ வயசான வர்னு ஓர் எடத்துல ஒக்கார வச்சு மாசம் இருநூறு ரூபாயும் குடுத்தா அவர் பாட்டுக்கு வர்றாரு. திடு திப்புன்னு போறாரு. இந்த வாரத்துல இது மூணாவது தடவை. திரும்பி வர்ற வரைக்கும் வயிறு பகீங்குது. பொட்டுன்னு வழில போனார்னா, நாமதான் கொன்னுட்டோம்னு குய்யோ முறையோன்னு கூட்டம் வந்துடும் கடை வாசல்லே".

பெரியவனுக்கும் சங்கடமாகத் தான் இருந்தது. 'அப்படி என்ன வலி இவருக்கு? வீட்டில் அநாதையாக்கப்பட்டாரே என்று இரக்கப்பட்டது தவறா? அவர் சம்பளத்திற்காகவாவது அவர் வீட்டில் அவருக்கு அங்கீகாரம் கிடைத்திருக்கிறதே என்று சந் தோசப்பட்டது பிசகா? வயதான வர் ஒருவரின் இழந்துபோன பிடிப்பை நிலைநாட்டக் காரண மானது தவறா? அல்லது பெரி யவர் தன்னுடைய இரக்கத்தைத் தவறாகப் பயன்படுத்த நினைக் கிறாரா?'

இரண்டு மணி நேரமாகியது. பெரியவன் பொறுமை இழந்தான். இன்று இரண்டில் ஒன்று பார்த்து விடுவது. போதும் பரோபகாரம் எல்லாம்.

"கொஞ்சம் லேட்டாயிடுச்சு தம்பி!" கிழவர் களைப்புடன் வந்து அமர்ந்த போது பெரியவனுக்கு பாவமாய்த்தானிருந்தது. அவரைக் கேட்க எழுந்த வேகமும் மட்டுப் பட்டது.

பெரியவர் பையிலிருந்து கையை எடுத்தார். கையில் சுருட் டப்பட்ட ரூபாய் நோட்டுகள் நூறும், ஐம்பதும், பத்தும், ஐந்தும். ஏது இவ்வளவு பணம்? மலைப் பாய் இருந்தது இருவருக்கும்.

"முக்காவாசி தேறிப் போச்சு தம்பி! அவனவன் கோர்ட் கேசுன் னாத்தான் வழிக்கு வருகிறான். அதிலேயும் ரெண்டு தடவை இழுத்தடிக்கிறான். போகாம விட் டோம்னா போயிடும். அலைச் சலைப் பார்த்தா முடியுமா?

"என்ன தாத்தா. ஒங்களுக்கு இவ்வளவு பணம் வரணுமா? கொஞ்சம் கடைக்குக் குடுங்களேன் கடனா.." சின்னவன் கோபத்தைக் கிண்டலாக மாற்றினான். நேரம் கழித்து வந்துவிட்டு பிரதாபம் வேறு கிழவனுக்கு.

"சொன்னாலும் சொல்லாட் டியும் இது கடைக்குத் தர்ற பணம்தான். ஒங்க பணந்தான். எனக்கேது இவ்வளவு பணமும் காசும்? இந்த லிஸ்ட்படி வரவு வைங்க பார்ப்போம்.." ஜாபிதாவை நீட்டினார். அதில் பெயர்களும் தொகையும் எழுதப்பட்டிருந்தன. சில பெயர்கள் பரிச்சயமானதைப் போல... அட, இவர்கள் நம் கடையில் கணக்கு வைத்து நீண்ட நாளாய்ப் பணம் தராதவர்கள். வசூல் செய்ய நேரமில்லாமல் கிட்டத்தட்ட மறந்துபோன நிலை யில்... அவர்களும் அதிகம் வராமல் இருக்கின்றனர். எப்படி இவர் வசூல் செய்தார்? அவர்கள் கொடாக் கண்டர்கள் ஆயிற்றே!

சின்னவன் அதிசயித்தான்.

"எப்படி தாத்தா? இது எப் படி..?" வாயை விட்டே கேட்டான். அவனுக்குப் பிரமிப்பு அடங்க வில்லை.

பெரியவன் பேசாமல் பார்த் தான். ஆனால் அவனுக்கும் ஆவல் இருந்தது.

'ஒண்ணுமில்லே தம்பி! புது ரிஜிஸ்தர் போட்டேனா? போட றச்சே சில பேர்வழிகள் நாலஞ்சு மாசமா வரவு செலவே செய்யாம வச்சிருந்தாங்க. ஆனா நானூறு ஐநூறுன்னு சின்னத் தொகையா இருந்ததாலே நீங்களும் சும்மா விட்டிருக்கீங்க. மொத்தமாக் கூட்டிப் பாத்தா பெருந்தொகை.

அத்தனைப் பேருக்கும் வக்கீல் நோட்டீஸ் விடற மாதிரி, நானே வீட்டுல பத்து நோட்டீஸ் தயார் செய்தேன். நேரா ஒவ்வொருத் தனையும் பார்த்தேன். லேசுல அகப்படலே. விடுவேனா. புடிச் சேன் ஒரு தினுசா. 'அய்யா, மொதலாளி வக்கீல்கிட்ட குடுக்கச் சொல்லி குடுத்திருக்காரு. நீ கௌரவமான மனுஷன். கோர்ட் படி ஏறினா என்னவாகும்? என் மனசு கேக்காம வந்தேன்'னு அடிச்சேன். ரெண்டு மூணு பேரு ஆ ஊ ன்னான். சட்டப்படி இன் னின்ன வழில மாட்டுவேன்னு அடுத்த பிடி. மசியாம எங்கு போயிடப் போறாங்க? கறந்துட் டேன். இது அவுங்க நோட்டு. வரவு வைச்சுக்குடுங்க. நாளைக் குக் குடுத்துட்டு வந்துடறேன்.

"தம்பி! ஒங்களக் கேக்காம செஞ்சுட்டேன். அதிகப் பிரசங்கித் தனம்னாலும் எனக்கு ஒரு நிழலைக் குடுத்திருக்கீங்க. ஒங்க பணம் நஷ்டப்படாம பாத்துக்க வேண்டியது என் கடமைன்னு பட்டுச்சு..'

"தாத்தா! இது ஒங்க கடை. நீங்க எது செஞ்சாலும் சரி" என் றான் துருதுருப்புடன் சின்னவன்.

பெரியவனுக்கு சிறிது வெட்கம் வந்தது. தானும் அவசரப்பட்டு விட்டோம் என்று.

★ ★ ★

கிழவர் அதற்குப் பிறகு ரொம்பச் சுறுசுறுப்பாய்ச் செயல் பட்ட மாதிரி இருந்தது. இத்தனை காலம் அவருக்குக் கண்ணாமூச்சி காட்டிய இளமை அகப்பட்டது போல இயங்கினார்.

சின்னவனும், பெரியவனும் அவர் வரவால் ஏதோ ஓர் உன்னத நிலைக்குப் போய்விட்டதாகக் களிப்புற்றனர். கடைப் பையன்கள் சகோதரர் இருவருக்கும் அடுத்த முதலாளியாய், அவரைக் கேட்டே எல்லாமும் செய்தார்கள்.

இப்போதெல்லாம் பெரியவர் போய்ச் சேர மிகவும் நாழியாகி விடுகிறது. பகலில் பாங்க், தாலுகா ஆபீஸ், கடன்காரர்கள் என்று அலைவதால் கணக்கு வழக்குகளை ஆற அமரத்தான் செய்ய முடிகிறது. மறுநாள் செய்யலாம் என்று முதலாளி சொன்னாலும் அவர் வேலையை முடித்த பின்பு தான் கடைக்கதவு மூடி சூடம் கொளுத்தப்படும். சமயங்களில் அவர் முடிக்கட்டும் என்று இவர்கள் காத்திருக்கும் படியும் நேர்கிறது. கிழவர் பிடி வாதக்காரர். அவர் வேலைக்குச் சேரவே எப்படி பொறுமை காத்தார் என்பது சகோதரர்களின் அசை போடும் நினைவு...

★ ★ ★

யாரோ ஒரு நடுத்தர வயது ஆளுடன் கிழவர் கையை ஆட்டிப் பேசிக் கொண்டிருந்தார். கடையில் வியாபாரம் சுறுசுறுப்பாய் இருந்தால், அவர்களிருவரையும் தொடர்ந்து கவனிக்காமல் முதலாளிகள் வியாபாரத்தைப் பார்த்தனர்.

வந்தவன், ஏதோ சவால் விட்டுப் போன மாதிரி விடைத்துக் கொண்டு சென்றான். கிழவரும் சுருங்கிய முகத்துடன் கடைக்குள் வந்தார்.

தன் இடத்தில் அமர்ந்து கொண்டு திட்டிக் கொண்டேஇருந்தார். பையன்கள் விநோதமாய் அவரைப் பார்த்தாலும் வேலை மும்முரத்தில் அவரை ஒன்றும் கேட்க முடியாமல் அலைந்தார்கள்.

அன்றைய கணக்கு முடிந்து வங்கி சலானைப் பூர்த்தி செய்து விட்டு, சலான், அதற்குண்டான பணம் இரண்டையும் தனியே கட்டி ட்ராயரில் வைத்துப் பூட்டி சாவியைப் பெரியவனிடம் ஒப்படைத்தார்.

"என்ன தாத்தா! சாயந்தரம் யார் கிட்டேயோ வாக்குவாதம் போல..?" சின்னவனுக்குப் பொறுக்கவில்லை.

"தாத்தா ரொம்ப சூடா இருந்தாரு. கிட்ட போவ எனக்கே பயமா இருந்துச்சு" மாரியப்பன் போலியாய்ப் பயம் காட்டினான்.

"களவாணிப்பய, எம் மீவந்தான் அது. ராத்திரி நேரங்கழிச்சு வர்றதாலே அவனுக்குத் தூக்கம் கெடுதாம். கதவைத் திறக்க சங்கடப்படறானாம். சீக்கிரமே வீடு திரும்பனும்னு ஆர்டர். இவன் கொழந்தையா இருக்கும்போது

த்தனை ராத்திரி நான் தூங்காம வைத்தியம் பாத்திருக்கேன்? அந்தப் பிடாரி சொல்லியிருப்பா. மாசா மாசம் பணம் வாங்கறச்சே ட்டும் எல்லாம் மறந்துடும் ஜூதைகளுக்கு..."

"நாங்க எவ்ளோ சொல்லியும் நீங்க கேக்க மாட்டேங்கறிங்க. இப்பத்தான் ஒங்களோடகொஞ்சம் ஒட்டி வர்றாங்க. நீங்க ஆனாலும் பிடிவாதம் தாத்தா..!"

"போய் கொட்டு கொட்டுன்னு மாட்டுவளையைப் பார்த்துக்கிட் டிருக்கறதில என்ன இருக்கு? வய ாச்சா. சரியாத் தூக்கமும் வர்ற இல்லே. தனியா விட்டா என் னென்னவோ நெனப்பு. செத்துப் போன பொண்டாட்டியிருந்தா இப்பிடி நடக்குமா? அப்பிடின்னு ஒரு கேள்வி. நல்ல வேளை, அவ ளும் கஷ்டப்படாம, போய்ச் சேந் தாளேங்கற நிம்மதி ஒரு பக்கம். இங்க ஒக்கார்ற நேரம் ரொம்பத் தெம்பா இருக்கு... தனியாளா இல்லாம நாலு மனுஷா அதுவும் நம்ம மனுஷங்கன்றாப்பல ஒரு தைரியம். போற காலமில்லையா? இனிமே மனசுல தெம்பு இருக் றதுதான் எனக்கு ஆகாரம் மாதிரி. ஒடம்பு படுத்துதே தன் னாலமலங்கறதுகூட மறந்து போவுது இங்க. அதுவும் பொறுக் கலே அந்தப் பயலுக்கு. தூக்கம் கெடுதாம். தூக்கம்! சே!" காறி உமிழ்ந்தார்.

★ ★ ★

"நேத்திக்கு அவ்வளவு சொல்லியும் வேணாம்னே லேட்டா வந்தா என்ன அர்த்தம்? குடும்பம் இருக்குன்னு மொதலாளிகிட்டே சொல்ல வேண்டியதுதானே..? பெரிய கவர்னர் உத்தியோகம், மாறாப் போவுது!"

கிழவரின் மகன் பொத்தாம் பொதுவில் சத்தம் போட்டான்...

கிழவர் தடதடக்க எழுந்து அவ னுக்குப் பதில் சொல்ல வந்ததை அவன் லட்சியம் செய்யாமல் மொதலாளிகளிடம் மேற்கொண்டு த்தினான்.

"ஏதுடா வயசானவராச்சேன்னு கொஞ்சமாவது இருக்க வேண் டாமா? சசக்கிப் பிழிஞ்சி அனுப்ப னே. குடுக்கற நூத்தம்பது க் காசுக்கு அவர் கடையையே

பயங்கர வாதம்

பின்னலூர்
மு. விவேகானந்தன்

கொள்கை வேட்கை
ஒரு பக்க வாதம்! – அதை
அதிகார பலத்தால்
அழிக்க முயல்வது
முடக்கு வாதம்!
திண்ணைப் பேசிகளின்
விதண்டா வாதம்!
தெருக்கள் தோறும் நடக்கும்
வரட்டு (வி)வாதம்!
பதவி வெறியர்களின்
பித்த வாதம்!
நாடிபிடித்து எச்சரித்தால்
நமக்குள் குரோதம்!
தீவிரவாதிகளின் பிடிவாதம்
தீர்க்க முடியாததால்
தேசமெங்கும் பரவுவது
பயங்கர வாதம்!
நேசம் மறைந்து உலகெங்கும்
வேகமாய் வளருது
இன விரோதம்!



ஸ்ரீ வத்ஸனின் இயற்பெயர் என். சுப்பிர மணியன். வயது 70. ஓய்வு பெற்ற மாநில அரசு ஊழியர். இதுவரை எழுதிய சிறு கதைகள் 500-க்கும் மேல்!

கட்டி அழணும்னு பேராசை பிடிச்சு அலையறீங்களே. அவர் என்ன அநாதையா? அவருக்குக் கல்லு மாதிரி பிள்ளை இருக்கேன். அவர் ஒவ்வொரு நாளும் நல்ல படியா வீடு வர, நான் வேண்டாத தெய்வமில்லை. தேவையா இது? ராஜா மாதிரி வீட்டுல சாப்பிட்டுப் படுக்கற காலத்துல ஒங்களுக்கு சேவகம் செய்யவா தலையில எழுதியிருக்கு?"

சின்னவன் உதடு துடிக்க எழுந்தான். இருநூறிலிருந்து முன் னூறு ரூபாய் சம்பளம் தருகி றோம். நூற்றைம்பது என்கிறான்.

ஆனால் சின்னவனைப் பேச விடாமல் கிழவர் முந்திக் கொண் டார்...

"டேய் கருணாகரா..! நிறுத்து... இங்க வர்றத்துக்கு முன்னாடி, எப்போ எப்போன்னு சோத்துக்கு என்னைப் பறக்க வச்ச நீயா பேசறே..." நீ சொன்னாலும் சொல்லாட்டாலும் வீட்டுல நான் அநாதையாத் தான்டா இருக் கேன். என் சம்பளம் எவ்வளவு தெரியுமா முன்னூறு ரூவா. ஒங்கிட்டே நூத்தம்பதுதான் குடுத் தேன். பாக்கியை ஒரு முக்கியமான செலவுக்காக காப்பாத்திட்டு வர் றேன். என்னோட கடைசி ஊர் வலத்துக்குத்தான். ஒன்ன நம்பிச் சாகவும் முடியாதுடா. இனிமே கெழவனால பிரயோசனம் இல்லைன்னு காசைச் செலவு செய்து காரியம் கூடச் செய்ய மாட்டே நீ. இருக்கறப்பவே இந்த லட்சணம். வயித்துல பொறந்தும் நீ மகனா நடந்துக்கல. என் மொத லாளிங்க, இதோ இருக்காங்களே, என்ன இருக்க வெச்சு வேலை வாங்கறவங்க தான், ஆனாலும் தகப்பன் மாதிரி ஒர் அந்யோந்யம் இருக்குடா. ஒன்ன நம்பி எப்பிடி சாகறதுன்னு பயந்தேன். இவங்க சிறப்பாவே எனக்குச் செய்வாங் கன்னு நம்பிக்கை வந்திருச்சு. லேட்டா வராதேன்னுதான் சொன்னே... இனிமே ஒன் வீட்டுப் பக்கமே வரலே. நமக்குள்ள அறுந்து போச்சு. எம் மகனுங்க கூடவே நான் இருப்பேன் ராஜா மாதிரி. போடா நீயுமாச்சு உன் வீடுமாச்சு.." பெருமூச்சு விட்டார். அவர் கோபத்தில் கத்திய வார்த் தைகள் அல்ல. அவை ஆத்மார்த்த மானவை.

'ஒரே ஓர் ஆசை'

ரிஷபன்

"சங்கரன் 'லெட்டர் போட்டிருக்கார்".

இன்லண்டு கடிதமும் சூடான காபியும் சம நேரத்தில் எதிரில் வைக்கப்பட்டன. ராஜி திரும்பிப் போனாள், வந்த வேலை முடிந்த மாதிரி.

பஸ்ஸில் நின்று வந்த அலுப்பு... பகல் முழுவதும் அலுவலக வேலையின் டென்ஷன், என்னை முதலில் காபியை ருசிக்கத் தூண்டியது.

"வீட்டை மறுபடியும் கட்டலாம் என்று அபிப்பிராயப் படுகிறேன். எதற்கும் ஒருமுறை நேரில் நீ வந்து போனால் நல்லது. பெரியம்மா தனது ஆசியை உனக்கும் குழந்தைகளுக்கும் சொல்லச் சொன்னாள். எப்போது வருகிறாய் என்பதற்குப் பதில் எழுது".

வீடு. மறுபடி கட்டப் போகிறேன். ராஜி நின்று பேசாமல் திரும்பிப் போனதன் அர்த்தம் புரிந்தது. கணவனின் 'புத்தி சாலித்'தனத்தின் மேல் மறைமுக விமர்சனம். வெளிநடப்பு போல.

இன்லண்டுடன் உடை மாற்றக் கூடத் தோன்றாமல் எழுந்து சமையலறைக்குள் போனேன்.

"லெட்டரைப் படிச்சியா?"

"ம்..."

"என்ன எழுதறது?"

திரும்பி என்னைக் கேலியாகப் பார்த்தாள்.

"என்னக் கேட்டுத்தான் எல்லாம் செய்யற மாதிரி?" பார்வை மட்டும் பேசியது.

"எப்படியும் போயிட்டுத்தான் வரணும்".

"............"

"பேசாம இருந்தா என்ன அர்த்தம்..? வாயைத் திறந்து வேணும், வேணாம்னு ஏதாவது சொல்லேன்".

நிதானமாய்த் திரும்பினாள்.

"உங்க இஷ்டம். என்ன வேணா செய்யுங்கோ. என்னைக் கேட்க வேண்டிய அவசியமே இல்லை".

"ப்ச்... இதான் உன்கிட்டே பிரச்னை. அப்புறம் குறை கண்டு பிடிக்கறது".

"அப்புறம் பைப்புல தண்ணி நின்னுடும்".

குடத்துடன் நகர்ந்து போனாள். எனக்குள் குழப்ப அலைகள். என்ன செய்வது?

வீடு எங்கள் இரு குடும்பத்துக்கும் பொது. சங்கரன் பெரியப்பா மகன். கிராமத்து வீட்டைப் பெரியப்பா பொறுப்பில்தான் விட்டிருந்தோம். அதைத் தவிர, தனியாகவும் அவருக்கு ஒரு வீடு இருந்தது. அதில்தான் வசித்து வந்தார்.

அப்பாவுக்கு எப்படி தனது கடைசி நாள்கள் புலப்பட்டதோ... திடுமென கிராமத்து வீட்டில் போய்த் தங்கிவிட்டார். பெரியப்பா வீட்டில் சாப்பாடு. திடீரென ஒரு நாள் தந்தி வந்தது.

'உடனே கிளம்பவும். சீரியஸ்' என்று.

போனோம். அப்பா மிகவும் இளைத்து... கண்களில் உயிரை வைத்திருந்தார். எங்களைப் பார்த்ததும் பேசக்கூட முடியவிலலை. எங்களுக்காகக் காத்திருந்த மாதிரி மறுநாள் கண்ணை மூடிவிட்டார்.

இறுதிக் காரியங்கள் முடி-
ந்ததும் கிளம்பி வந்தோம். வீட்டை
பற்றி அப்போது ஏதும் பே-
சில்லை. எனக்கும் இங்கே
சொந்த வீடு இருந்தது. சாரி
கிராமத்திலும் ஒன்று இருந்-
விட்டுப் போகிறது என்றிருந்தேன்

பெரியப்பாவின் சுபாவ-
பின்னர்தான் வெளிச்சமானது.

மறுவருஷம்... அந்தத் தகவ-
கிடைத்தது.

வீட்டைப் பிரித்து எல்ல-
வற்றையும் விற்று விட்டாராம்.


'நிஜம்மாவா...' என்றேன் நம்-
முடியாமல்.

'அட... நிஜம்மாத்தான்
போய்ப் பாருங்க...' என்றா-
வந்தவர்.

போனேன். சின்ன வயசி-
அங்கேதான் வளர்ந்தோம். ஒ-
வொரு மூலையும் பரிச்சய-
சுவரின் விரிசல்... காரை பெயர்ந்-
இடம்... இரண்டு கட்டு வீ-
பின்னால் கிணறு. எப்போதே-
மாடு கட்டிய தொழுவம். கழு-
ஊற்றத் தொட்டி. வேலிப் பட-
வாசல் திண்ணை. ஓடிவந்-
இடித்துக் கொண்ட நிலைப்படி.

ஊஹூம். இப்போது எதுவு-
இல்லை. மூளியாய்... எல்லா-
தொலைந்து... அடையாள-
மட்டும் சாட்சியாய்... மொட்டை-
யாய் காரைச் சுவர்... மழையி-
கரைந்து நின்றது.

அப்பா காலமானபோது வரா-
அழுகை இப்போது சுலபமா-
வந்தது.



200-க்கும் மேற்பட்ட சிறுகதைகளும், ... குறுநாவல்களும் எழுதியுள்ள ரிஷப- வயது 36. இயற்பெயர் ஆர்.ஸ்ரீநிவா-

அமரர் சின்னிகிருஷ்ணன் நினைவுச் சிறுகதைப் போட்டி'94- மூன்றாம் பரிசு ரூ. 750 பெற்ற சிறுக-

பெரியப்பா அலட்சியமாய் பதில் சொன்னார்.

"உனக்கு என்னடா. நீ இங்கே வந்து இருக்கப் போறியா?"

'ஒரு வார்த்தை கேட்டுட்டு....?

"போடா... அவ்வளவு பெரிய மனுஷனா நீ? என்ன செய்யணும்னு எனக்குத் தெரியும்".

சங்கரனும் நானும் மூன்று வயசு வித்தியாசம். பேசாமல் தான் நின்றான்.

'நல்லா இல்லை.. பெரியப்பா!"

'நல்லது கெட்டது ரொம்பத் தெரிஞ்சவன்... போடா".

மனசுக்குள் அழுதேன். ஒரு டம்ளர் நீர் அருந்தவில்லை. திரும்பக் கூட இல்லை. பட்டினி. வீடு திரும்பும் வரை நான் நானாக இல்லை. அடுத்த இரண்டு நாள்கள் பிரமை பிடித்த மாதிரி வீட்டிலேயே கிடந்தேன். இயல்புக்கு வர நாளானது.

இன்றும் நினைத்துக் கொண்டால் மனசுக்குள் விம்மும். என் கடைசிக் காலமும் அதில்தான் என்ற ஆசையை நிராசையாக்கிய பெரியப்பா செத்துப் போன செய்தி கிடைத்தபோது முதலில் போகக்கூடத் தோன்றவில்லை.

ராஜிதான் வற்புறுத்தினாள். 'நல்லா இருக்காது. போயிட்டு வாங்க'. போனேன்.

மூலையில் சம்பந்தமில்லாத மாதிரி நின்றேன். ஆற்றில் மூழ்கி... எல்லாரும் வீடு திரும்ப... அப்படியே ஊர் திரும்பினேன்.

இருபது வருஷங்கள். இதற்கு முன் சங்கரன் எழுதிய கடிதத்திற்குப் பதில் கூட எழுதவில்லை. இதோ மறுபடி இன்னொரு கடிதம்.

சங்கரன் பஸ் ஸ்டாப்பில் காத்திருந்தான். பையை வாங்கிக் கொள்ளக் கை நீட்டினான். மறுத்து விட்டு நடந்தேன்.

"ராஜி! குழந்தைகள் சௌக்கியமா?"

"ம்..."

எங்கள் வீட்டைக் கடந்துதான் சங்கரன் வீடு. குபுக்கென்று கண்ணீர் இந்த வயசிலும் வந்தது. பார்க்காத மாதிரி நடந்தேன்.

"அம்மா! இங்கே பாரு... யாரு வந்திருக்கான்னு".

"என்னாலதான் எதுவும் முடியவில்லை. பெரியப்பா செய்தது துரோகம். இனி இவர்களோடு எனக்கு என்ன பேச்சு?"

"கை, கால் அலம்பிண்டு வா".

பெரியம்மா மூலையில் சுருண்டிருந்தாள். என்னைப் பார்த்ததும் எழுந்து கொள்ள முயன்றாள்.

"வே... ணாம்".

"நன்னா இருக்கியா..? குழந்தைகளை அழைச்சிண்டு வரலையா?"

பேச்சுத் திணறலாய் வந்தது.

"அப்புறம் அழைச்சிண்டு வருவான்" என்றான் சங்கரன்.

சாப்பிட வாய் கசந்தது. விழுங்கினேன், சுவை அறியாமல்.

"எங்க மேல உனக்குக் கோபம் இருக்கும். அது நியாயம்தான். அப்ப... எனக்கும் தீர்மானம் எடுக்க முடியாத வயசு. சூழ்நிலை. அப்பாவை மீறி எதுவும் செய்ய முடியாது".

திண்ணையில் அமர்ந்திருந்தோம். கோயிலுக்குப் போயிருந்த சங்கரனின் பெண்கள் திரும்பி வந்தனர். என்னைப் பார்த்ததும் மரியாதையாய்ச் சிரித்தனர். விபூதிக் கையை அப்பாவிடம் நீட்டினாள் பெரிய பெண்.

"சித்தப்பாவுக்கும் கொடும்மா".

சின்னவள் என்னிடம் வந்து தயக்கத்துடன் கையை நீட்டினாள். பேரென்ன... நந்தினியா... ரேவதியா... நினைவில் வராமல் தடுமாறினேன்.

"பெரியவ நந்தினி காலேஜ் முடிச்சதும் இங்கேயே வச்சுட்டேன். ரேவதிதான் இந்த வருஷம் ரிஸல்ட் வரணும். வேலைக்குப் போகணும்னு சொல்றா" என்றான் என் குழப்பம் தீர்கிற மாதிரி.

ரேவதி அப்படியே சங்கரன் ஜாடை. செதுக்கிய மாதிரி முகவாய். தீர்க்கமான பார்வை.

எனக்குத் தொண்டை கமறியது. இருமினேன்.

"வெந்நீர் கொண்டு வரேன்".

வேகமாய் உள்ளே ஓடிப் போனாள்.

"இந்த வருஷம் வாலண்டரி ரிட்டையர்மெண்ட் வாங்கிடலாம்னு நினைச்சேன். என்னாலயும் முடியலை. என்னோட ஒரே ஓர் ஆசை... பிராயச்சித்தம் மாதிரி. அந்த இடத்துல ஒரு வீட்டைக் கட்டி உனக்குத் தரணும்னு. உன்னோட கலந்து பேசி, நீ விருப்பப்படற மாதிரி அமைப்புல கட்டணும்னு. சின்னவ வேலைக்குப் போயிடுவா. பெரியவளும் வேலைக்குப் போகணும். என்னோட வேலையை வாங்கித் தந்துட முடியும். கல்யாணத்துக்கு இப்ப என்ன அவசரம்? அம்மா தான் தொண்ணூறு வயசாச்சு... நகர முடியாமே... அவஸ்தைப் படறா... அவ காலமும் முடிஞ்சுடும்".

பாதி தொடர்பில்லாமல் பேசினாலும், 'வீட்டைக் கட்டித் தரணும்' என்று அவன் சொல்ல விரும்பியதைச் சொல்லிவிட்டான்.

வெந்நீர்ச் செம்பும் டம்ளரும் என் எதிரில் வைக்கப்பட்டிருந்தன. பெண்கள் உள்ளே போய்விட்டார்கள். என்னுடைய அடுத்த தலைமுறை... என் மகன் பாபு... மகள் வித்யாவின் உணர்வுகளைச் சேர்ந்தவர்கள்.

"என்னமோ இது தீர்மானம் ஆகிற வரை உன்னோட முகத்துல விழிக்க முடியாதுங்கிற மாதிரி ஒரு பிரமை. அசட்டுத்தனம்னு வேணும்னா வச்சுக்க".

அவன் குரல் அடைத்துக் கொண்டது. டம்ளரில் நீர் நிரப்பி நீட்டினேன்.

"சொல்லு... எப்படிக் கட்டணும்னு. இடிச்சப்போ உன்னோட அபிப்பிராயம் கேட்கலே. இப்போ கட்டணும்னு ஆசைப் படும்போது உன்னோட விருப்பப் படிதான் கட்டணும்னு. அம்மாவும் சொன்னா. நீயும் இந்த ஊரோட வந்துட்டா ரொம்ப நல்லதுன்னு. ரேவதியும் நந்தினியும் ஆசைப்படறா. அவங்க காலமாவது உறவுகளோட இனிமை புரிஞ்சதா இருக்கட்டுமே".

"பணம் கையில வச்சிருக்கியா?" என்றேன்.

"இல்லே. பேங்க்லதான் இருக்கு" என்று தடுமாறினான்.

"பாஸ்புக்கைக் கொண்டா".



உள்ளே போய் எடுத்து வந்தான். முகத்தில் குழப்பம். சொல்வதை நம்பவில்லையா... உறுதிப்படுத்திக் கொள்ளவா..?

நானும் எழுந்து உள்ளே போனேன்.

நந்தினி... ரேவதி என்னைக் கண்டதும் பதறி எழுந்து நின்றார்கள்.

இருவரின் கைகளையும் இணைத்து பாஸ்புக்கைத் திணித்தேன்.

"எதுவும் பேசக் கூடாது. என்னோட ஆசீர்வாதம். உங்க கல்யாணத்துக்கு... இப்ப இது என்னோடது... என் இஷ்டப்படிதான் செய்யறேன். புரிஞ்சுதா..?" என்றேன் அழுத்தமாக.

இரவு உணவு எனக்குச் சுவைத்தது. மறுநாள் விடைபெற்ற போது... இடிந்து கிடந்த வீடு இன்னும் தரைமட்டமாகி... வெட்ட வெளியாய் நின்றிருந்ததை மனசு தளும்பாமல் பார்த்தேன், எனக்கு சம்பந்தமில்லாதது போல.

ஏனோ அழுகை வரவில்லை.

தமிழகத்தில் பதிப்புத்துறை

பிரச்னைகளின் நடுவே வளர்ச்சி

அகிலன் கண்ணன்

செயலர்: தென்னிந்தியப் புத்தக விற்பனையாளர் மற்றும் பதிப்பாளர் சங்கம்.

உலக அளவில் ஆங்கில நூல்களின் விற்பனையில் ஐந்தாவது இடத்தையும், அகில இந்திய அளவில் மொழிவாரி புத்தகப் பதிப்புத்துறையில் தமிழகம் ஆறாவது இடத்தையும் பெறுகிறது.

தமிழ்ப் பதிப்புத்துறையில் நூறாண்டு காணும் 'அலையன்ஸ் கம்பெனி'யும் புத்தக விற்பனைத் துறையில் நூற்றைம்பதாவது ஆண்டுவிழாக் காணும் 'ஹிக்கின் பாதம்ஸ்' நிறுவனமும் தமிழகத்தின் பதிப்பு- வாசிப்பு நிலைகளின் நிகழ்கால நிதர்சனங்களாகும்.

ஆங்கில- தமிழ்ப் பதிப்பாளர்கள் மற்றும் விற்பனையாளர்களின் பிரச்னைகள் நாள்தோறும் நாங்கள் எதிர்கொள்ள வேண்டியவையே. 'தாள்விலை ஏற்றம்' முதல் போதிய நிதி ஒதுக்கீடு இல்லாமை வரை பிரச்னைகள் பன்முகப்பட்டவை.

ஆனாலும் இந்தப் பிரச்னைகளின் நடுவேதான் தமிழகத்தில் பதிப்புத்துறை எதிர்நீச்சலடித்து மேலோங்கி வளர்ந்து வருகிறது.

மின்அணுச் சாதனங்களின் ஆக்கிரமிப்பை மீறி நாம் வாசகர்களை அணுகவேண்டியுள்ளது.

ஆங்கிலப் புத்தக உருவாக்கத்தில் நாம் மற்ற வெளிநாடுகளுடன் போட்டியிடும் அளவிற்குத் தரத்தில் உயர்ந்து வருகிறோம். இந்தியாவில் ஆங்கில நூல்களின் விற்பனை அதிகரித்து வருவதால் ஆகஸ்போர்டு, மாக்மில்லன், ஓரியண்ட் லாங்மேன், போன்ற பல வெளிநாட்டுப் பதிப்பாளர்கள் இந்தியாவில் இந்தியப்பதிப்புகளை வெளியிட அதிக ஆர்வத்துடன் முன்வந்துள்ளனர்.

வெளிநாடுகளில் கணினியின் செல்வாக்கு அதிகரித்து வருகிறது. அறிவியல் வளர்ச்சியின் காரணமாக இந்தியாவில் கூட கலைக்களஞ்சியங்கள், அகராதிகள் போன்றவை காம்பாக்ட்டிஸ்க்கில் (Compact disk) வரஆரம்பித்து விட்டன. நாம் கூட காம்பாக்ட் டிஸ்க்கில் இளையராஜா- ரகுமானின் இசையை லயிப்பதோடு விரைவில் 'கம்ப்யூட்டரே கதை சொல்லு!ம்!' என்று ஆணையிடும் காலம் வந்துவிடும்.

கமலாம்பாள் சரித்திரத்திலிருந்து தேவன் வரை பல அரிய நூல்களை மீண்டும் மறுபதிப்பு செய்து படிக்கத் தரக்கூடிய சூழல் மலர்ந்து வருகிறது.

காலத்தால் அழியாத அமர காவியங்களான கல்கியின்



போட்டோ : யோகா

பொன்னியின் செல்வனும்' அகில ரின் 'வேங்கையின் மைந்தனும்' ா.பா.வின் 'பொன்விலங்கும்' ண்ணதாசனின் 'அர்த்தமுள்ள இந்துமதம், விக்கிரமனின் 'நந்தி ரத்து நாயகி'யும் சாண்டில்யனின் ாவல்களும் இன்றும் பலபதிப் களைக் கண்டு மக்கள் மனத்தில் ங்கா இடம் பெற்று வருகின்றன.

குழந்தைகளுக்குப் பெயர் ூட்டப் புத்தகம் வாங்க ஆரம்பித் ுள்ளனர் தமிழர்கள். இந்த விற்பனை வேகத்தைப் பார்த்து ஆங்கிலத்திலும் பெயர் சூட்டப் புத்தகங்கள்! தமிழ்நாட்டில் அதிக விற்பனையாகும் புத்தகம் பிரபல ானவர்களின் முகவரிகள். காப் மயர் புத்தகத்தை அழகிய டிவில் அச்சிட்டு மனிதனை யர்த்தும் ஏணிப்படி அமைத்துத் ருகிறார் காந்தி கண்ணதாசன்.

வைரமுத்துவின் 'இதுவரை ான்', 'கவிராசன் கதை' ஆகியன ரவலான வரவேற்பைப் பெற்ற ம் ரமணி சந்திரன் ஆரவாரமற்ற சல்வாக்கு செலுத்துவதும் ங்கே தான்.

அரசியல் தத்துவங்களை, ாழ்வியல் அணுகுமுறைகளை ிளக்கும் புத்தகங்களும் பரவலாக ரவேற்கப்படுகின்றன.

தமிழகத்தில்தான் பதிப்பா ர்கள் அதிகம் என்கிற நிலை. ுனால் தமிழில் ஒரு பதிப்பின் ண்ணிக்கை பொதுவாக ஆயிரம் ரதிகளைத் தாண்டாத நிதர்சன ம் இங்கேதான் நிகழ்கிறது.

திருமணங்கள், பிறந்தநாள், ுமனை புகுவிழா, விழாக்கா ங்கள் என்று அனைத்து மகிழ்ச் ச் சூழலிலும் புத்தகங்களைப் ரிசளிக்கும் பழக்கம் மீண்டும் ழு உத்வேகத்துடன் தமிழகத்தில் சயல்படத் தொடங்கினால் டிப்பு ஆர்வம் வேகமாக ளரும்.

இங்கு ஒலி நாடாவில் பிரபல டைப்பாளிகள் கதை சொல்லிப் ார்த்தார்கள். ஆனால் நாம் சையை இதயத்தால், ரசிக்கப் ழகியது போல், இலக்கியத்தைப் த்தகம் மூலம் படித்து ரசிக்கவே ழகியுள்ளதால் படிப்பார்வம் ளரும்.

வாங்கும் சக்தி குறைவாக ள்ள வாசகர்கள் பொது நூல கத்தின் கிளை நூலகங்களைப் பெரும் அளவில் எதிர்பார்க் கிறார்கள். சொத்துவரியில் 10சத விகிதம் நூலகவரியாக வசூலிக்கப் பெறுகிறது.

இவ்வாறு வசூலாகும் தொகை உடனுக்குடன் நூலகத்துறைக்குக் கிடைக்காமல் மிகக் காலங்கடந்தே அதுவும் சிறு சிறு பகுதியாகவே கிட்டுகிறது.

இதனால் வாசகர்களின் தேவையை முழுமையாகப் பூர்த்தி செய்ய இயலாமல் பொதுநூலகத் துறை தவிக்கிறது.

தமிழகத்தில் 1543 நூலகங்கள் உள்ளன. இவற்றில் பெரும் பாலான நூலகங்கட்குச் சொந்தக் கட்டடங்கள் இல்லை. மிகச் சிறிய இடத்தில்தான் அமைந்துள்ளன. புத்தகங்கள் வைக்கப் போதிய அலமாரிகள் இல்லை.

கணினியைப் பயன்படுத்திக் கொள்ள வசதியில்லை.

தமிழில் வெளியாகும் புத்த கங்கள் இன்னும் 500 படிகள் மட்டுமே வாங்கப் பெற்று 1500க் கும் மேற்பட்ட நூலகங்கட்கு சுழல் முறையில் அனுப்பப் பெறு கின்றன.

இவற்றையெல்லாம் சீர்செய்து நூலகத்துறையை நவீனப்படுத்தி அதிக அளவில் பொதுமக்க ளுக்குப் பயன்தரச் செய்ய ஒரே வழி!

சொத்துவரி வசூலிக்கப்பெறும் போது நூலக வரியைத் தனியே வசூலித்து, உடனுக்குடன் நூலகத் துறைக்குக் கிடைக்கச் செய்ய தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் போல் பொது நூலக வாரியம் அமைத்து, நூலக வரி யைப் பயன்படுத்தி மக்களுக்குப் புத்தகங்கள் சஞ்சிகைகள் படிக்கக் கிடைக்க மாநில அரசு ஆவன செய்து உதவ வேண்டும் என வேண்டுகோள் விடுக்கின்றோம். இதற்காகப் பொது நூலகச் சட்டத்தை மாற்ற வேண்டும் எனில் அதற்கு உரிய நடவடிக் கைகள் எடுத்து உதவிட வேண்டு கிறோம்.

விஷம்போல் தாள் விலை நாளும் உயர்கிறது. இந்நிலையில் பொது நூலகத்துறைக்கு ஏற்பு விலை நிர்ணயித்தபின் அரசு அதிலும் கழிவு கோருகிறது. இக்கழிவு கோருதலைத் தவிர்க்க வேண்டும் எனத் தொடர்ந்து கோரிவருகிறோம். அரசும் கனி வுடன் கவனித்துக் கழிவை நீக்கும் என எதிர்பார்க்கிறோம்.

மைய அரசும் பல்கலைக்கழக மானியக் குழுவின் நிதி ஒதுக் கீட்டைக் கூடுதலாக்க வேண்டும். அதுவுமன்றி இந்த நிதி ஒதுக்கீடு வழக்கமாக நிதிஆண்டின் இறுதி யில் ஜனவரி, பிப்ரவரியில்தான் கிட்டுகிறது; ஆகவே அவசரமாகப் புத்தகங்கள் தேர்வு செய்ய வேண்டிய சூழலைத் தவிர்த்து ஆகஸ்டு, செப்டம்பரிலாவது நிதி ஒதுக்கீட்டைக் கிடைக்கச் செய்ய வேண்டும்.

அரும் பெரும் அறிவுச் செல் வங்கள் அக்னிக்கு இரையாகி மீண்டும் இன்று இப்படிப் பதிப்புத்துறை பற்றி சிந்தித்துச் செயல்படத் துணை செய்தது தமிழக அரசு; ஆம்; தமிழக முதல்வர் மாண்புமிகு ஜெயலலிதா அவர்கள் கருணை உள்ளத்தோடு நிதி உதவி அளித்தார்கள்.

புத்தகங்கட்கு விற்பனை வரி என்கிற புயல் பனிபோல் விலகத் தன் கருணைக் கரங்களால் உதவினார்கள் தமிழக முதல்வர் அவர்கள்.

தென்னிந்திய புத்தக விற்பனை யாளர் மற்றும் பதிப்பாளர் சங்கம் நெடுநாள்களாகக் கோரி வரும் நிரந்தர புத்தகக் காட்சி அரங்கம் அமைத்துத்தர தமிழக முதல்வர் புரட்சித் தலைவி ஜெயலலிதா அவர்கள் கருணை உள்ளத்தோடு நிச்சயம் செவிசாய்த்து தமிழகத் தில் அறிவுப் பசிக்கு ஆக்க பூர்வமான உதவிசெய்வார்கள் என நம்புகிறோம்.

வாசகர்களின் தேவையை உணர்ந்து எமது சங்கம் வெளி மாவட்டங்களிலும் புத்தகக் காட்சி அமைக்கத் திட்டங்கள் வகுத் துள்ளது. மேலும் வருடத்திற்கு ஒருமுறை என்பதை மாற்றி வருடத்திற்கு இருமுறை சென்னை யில் புத்தகக் காட்சி நடத்தலாமா எனவும் ஆலோசனை செய்து வருகின்றோம். ☆

ஆங்கிலப் பதிப்புத்துறை

- ஒரு கண்ணோட்டம்

எம்.எஸ்.மணி

(அலைடு பப்ளிஷர்ஸ்)

பதிப்புத்துறையில் ஆங்கிலப் பதிப்பாளர்கள், மொத்த விற்பனையாளர்கள் மற்றும் விற்பனையாளர்கள் என்கிற மூன்று நிலையில் செயல்பட்டு வருகின்றனர். தமிழைப் பொறுத்த வரையில் பதிப்பாளர்களே விற்பனையாளராகவும் செயல்படுகின்றனர். சில மாவட்டத் தலை நகர்களிலும் குறிப்பிட்ட சில ஊர்களிலும் புத்தக விற்பனையாளர்களும் இயங்கி வருகின்றனர்.

ஆங்கில- தமிழகப் பதிப்பாளர்களின் போக்குகள், நோக்குகள், செயல்பாட்டு முறைகள் வேறுபட்டாலும் அவர்கள் எதிர்நோக்கும் பிரச்னைகள் வெவ்வேறு மாதிரியானவை. சில பொதுப் பிரச்னைகள் இருவகையினர்க்கும் உள்ளன.

முதலில் ஆங்கிலப் பதிப்பாளர்கள் விற்பனையாளர்கள் கண்ணோட்டத்தை அலைடு பப்ளிஷர்ஸ் மேலாளர் திரு எம்.எஸ். மணி அவர்களின் பார்வையில் இங்கே காண்போம்:

உலக அளவில் ஆங்கில நூல்களின் விற்பனையில் ஐந்தாவது இடத்தில் இந்தியா திகழ்கிறது. இங்கு ஆங்கில நூல்களின் விற்பனை அதிகமாக உள்ளதால் பல வெளி நாட்டுப் பதிப்பாளர்கள் இந்தியாவிலேயே தங்களது முதலீட்டைச் செலுத்தி இந்தியப் பதிப்புகளாகப் புத்தகங்களைப் பதிப்பிக்க அதிக ஆர்வத்துடன் ஈடுபடத் தொடங்கியுள்ளனர்.

புத்தக உருவாக்கத்தில் நாம் மற்ற வெளிநாடுகளுடன் போட்டியிடும் அளவில் தரத்தில் உயர்ந்துள்ளோம். அதே சமயம் நமது 'பைண்டிங்' மட்டும் அந்த அளவிற்கு வளரவில்லை.

என்றாலும் கூடப் பொதுவாகப் படிக்கும் பழக்கம் குறைந்து வருவது நிதர்சனம்.

மாணவர்கள் நேரடியாகப் பாடப் புத்தகங்களைப் படிப்பதை விடச் சந்தையில் விற்கும் கையேடு (நோட்ஸ்)களைப் படிப்பதிலேயே ஈடுபடுகின்றனர்.

பாடநூல்களையும், பாட சம்பந்தமான நூல்களையும் படிக்காததால் அறிவு அபிவிருத்தி என்பது போய் பட்டத்திற்குப் படிப்பது என்கிற நிலையாகி வருகிறது.

மாணவர்களை மட்டுமல்லாது பொது மக்களையும் படிக்கத் தூண்டும் வகையில் அரசாங்கம் ஓர் இயக்கத்தைத் தொடங்க வேண்டும். 'வீட்டிற்கொரு மரம் நடுவோம்' என்பது போல் 'ஒரு நாளைக்கு ஒரு மணி நேரமாவது பொதுநூல்களைப் படிப்போம்' என்கிற ரீதியில் இயக்கம் தொடங்கிச் செயல்படுத்தத் தூண்டும் வகையில் அரசுகள் உதவ முன்வரவேண்டும்.

நாடு முழுவதும் புத்தகக் கண்காட்சிகளை நடத்துகிறது. புத்தகத்தைப் பரலாக அளிக்கும் வழக்கத்தை வளர்க்கப் புத்தகப் பரிசுக் கூப்பன்களை அறிமுகப் படுத்தியுள்ளது. அண்மையில் சென்னையில் குழந்தைகள் புத்தகக் காட்சியைத் தெருவெங்கும் நடத்தியது.

பொதுவாக இந்தியாவில் கல்வி நிறுவனங்கள், மற்றும் பல்கலைக்கழகங்களைச் சார்ந்தே ஆங்கில நூல்களின் விற்பனை உள்ளது. இந்நிறுவனங்கட்கு அரசிடம் இருந்து போதிய நிதி ஒதுக்கீடு கிடைக்காததால் இந்த வழியிலான விற்பனையும் ஒரே சீராய் நடைபெறுவதில்லை.



ஆங்கிலப் புத்தகப் பதிப்புத் துறையில் போலிப் புத்தகங்கள் (Piracy) ஒரு பெரும் சவாலான பிரச்னையாக வளர்ந்து வருகிறது. எந்தப் புத்தகம் அதிகமாக விற்பனையாகிற எந்தப் புத்தகம் அதிகமாக விற்பனையாகிறதோ அதை அப்படியே அச்சிட்டுப் போலியான புத்தகங்கள் சந்தைக்கு வந்து இணையாக விற்பனை செய்யப்பட்டு வருகின்றன.

இதைத் தடுக்கச் சட்டங்கள் இருந்தாலும் சரியாகச் சட்டங்களைச் செயல்படுத்தித் தடுக்க இயலவில்லை.

தொழில் நுட்பப் பாடநூல்கள் ஜெராக்ஸ் நகலெடுக்கப்பெற்றுப் புத்தகங்களாக மாணவர்களிடம் விற்கப்படுகின்றன; இதனால் அந்தப் பாடநூல் விற்பனையாளர்கட்கும் பதிப்பாளர்கட்கும் பாதிப்பு ஏற்படுகிறது. ஓரளவு இந்த நகல் விற்பனையைத் தடுக்க முடிந்தாலும் அங்கங்கே அவ்வப்போது இது தொடரத்தான் செய்கிறது.

அடுத்த முக்கியப் பிரச்னை ரிமைண்டர் சேல்ஸ். அமெரிக்கா, இங்கிலாந்து போன்ற நாடுகளில் குறிப்பிட்ட ஆணடிற்குள் புத்தகங்களை விற்றுவிட வேண்டும் என்ற திட்டத்தில் புத்தகங்கள் வெளியிடுவது வழக்கம். இப் புத்தகங்களை ஒரு வியாபார ஒழுங்கோடு முழுப்பணம் செலுத்தி இறக்குமதி செய்து இங்கு வியாபாரம் செய்து வருவோர் ஒரு புறம். மற்றொரு புறம் அந்தப் புத்தகங்கள் குறிப்பிட்ட காலக்கெடுவிற்குள் விற்கப் படாத நிலையில் மிக அதிகக் கழிவுடன் (எடைக்குப் போடும் வகையில்?) அங்கு அந்தப் பதிப்பாளர்களால் விற்கப்படுகிறது. மிக மலிவான விலைக்கு அந்தப் புத்தகங்களை நமது வியாபாரிகள் வாங்கி மற்ற வியாபாரி விற்கும் விலைக்கே அதிக தள்ளுபடி தந்துவிற்க முன் வருகின்றனர். ஆதலால் ஒரே புத்தகம் ஒரே விலையுடன் ஆனால் இரு வேறு கழிவுடன் விற்கப்படுகிற பரிதாபம் நேர்கிறது இங்கே. →

அதிகக் கழிவுடன் பெறப்பெற்ற ரிமைண்டர் புத்தகங்கள் கல்வி நிறுவனங்கட்கும் நூலகங்கட்கும் விற்கப்படும்போது நிறுவன ரீதியாகச் செயல் பட்டு வரும் கட்டுக் கோப்பான பதிப்பாளர் மற்றும் விற்பனையாளர்கட்கு ஆரோக்யமற்ற சவாலாக இது அமைந்துவிடுகிறது.

விநியோகச் சிக்கல் மற்றொரு பிரச்னை. நீண்ட காலக் கடன் ஒரு பெரும் சுமை. 30 நாள், 60 நாள், 90 நாள் எனக் கெடு கொடுக்கப் பட்டிருப்பினும் அதைக் கடந்தும் நீண்ட நாள்கள் சென்றுவிடுவதால் உற்பத்திச் செலவுக்கும் நிர்வாகச் செலவுகட்கும் உரிய திட்டங்கள் செயல்படுத்தமுடியாமல் தள்ளிப் போகிறது.

பல நிறுவனங்களிலும் விற்பனை அல்லது திருப்பல் முறையில் (approval) அனுப்ப வேண்டிய சூழல் தவிர்க்க இயலாததாகிறது.

பலநாள்கள் வைத்திருந்து விட்டுத் திருப்பித் தரும் போது புத்தகங்கள் சிதைந்து மீண்டும் விற்கமுடியாத நிலைக்கும் உள்ளாகிவிடுகிறது.

வராக் கடன்களாகவும் நின்று போய்விடுகிற தொகையும் கணிசமான அளவு நேர்ந்துவிடுகிறது.

ஆக்க பூர்வமான தீவிரப் புத்தகங்கள் விற்பனை குறைவாகவும் பொழுது போக்கு லகுவான புத்தகங்களின் விற்பனை அதிகமாகி வருவதும் இன்றைய பொதுவான நிலை.

அச்சுத்தாள் விலை ஏற்றம் அவசர அசுர அச்சுறுத்தலாகப் பயமுறுத்துகிறது.

இவையெல்லாவற்றையும் மீறிக்கூட இந்தியாவில் ஆங்கில நூல்களின் பதிப்பும் விற்பனையும் இயங்கிக் கொண்டு வருகிறது.

அறிவியல் வளர்ச்சியின் காரணமாக இங்கும் கூட கலைக் களஞ்சியங்கள், அகராதிகள் போன்றவை Compact Diskல் கணினி உதவியுடன் பயன்படுத்தக் கூடிய அளவில் வெளிவரத் தொடங்கிவிட்டன.

இவையெல்லாம் வளர்ச்சிக்கான அறிகுறிகளே!



படிக்கும் பழக்கம் மக்களிடையே வளரவேண்டும்!

அமைதி தவழும் முகம், அடக்கமான தோற்றம், விசாலமான சிந்தனைகளைப் புலப்படுத்தும் அகன்ற நெற்றி- இவற்றுக்குரியவர் திரு.எஸ்.வைரவன். பரபரப்பான பாண்டிபஜாரின் குறுக்குத் தெருவான முத்துகிருஷ்ணன் தெருவிலுள்ள குமரன் பதிப்பகத்தின் அதிபர். பதிப்பகத்திற்குள் நுழைந்து நம்மைப் புன்முறுவலுடன் வரவேற்று பதிப்பகத்துறையில் அவர் நுழைந்தது பற்றியும் கூறுகிறார்:

"வட்டிக்குக் கடன் கொடுத்து வாங்கும் ஒரு நிறுவனத்தில் பணியாற்றிக் கொண்டிருந்த எனக்கு- புத்தகத் தொழிலில் நீண்ட காலமாகவே இருந்து வந்த ஈடுபாட்டின் காரணமாக- சொந்தமாக ஏன் ஒரு பதிப்பகத்தைத் தொடங்கக்கூடாது என்ற எண்ணம் எழுந்தது."

"இந்தப் பதிப்பகத்தை எந்த ஆண்டில் தொடங்கினீர்கள்?"

"நிதி நிறுவன வேலையிலிருந்து விலகி 1979ஆம் ஆண்டில் பதிப்பகத்தைத் தொடங்கினேன். வீட்டிலேயே வைத்துத்தான் முதலில் சில ஆண்டுகள் நடத்தி வந்தேன். 1983-இல் இந்தக் கட்டடத்திற்குக் கொண்டு வந்தேன்."

"இதுவரை எத்தனை புத்தகங்களை வெளியிட்டிருக்கிறீர்கள்? எந்த மாதிரி புத்தகம் வெளியிடுவது உங்கள் விருப்பம்?"

"இதுவரை 450 புத்தகங்களை வெளியிட்டிருக்கிறேன். இதில் என் விருப்பத்தை விட மக்களின் விருப்பம் முக்கியம். அதை முன்னிட்டு ஆன்மிகம், ஜோதிடம், புராணக் கதைகள், சிறுவர்களுக்கான கதைகள், சுய முன்னேற்ற நூல்கள், சமையல் கலை பற்றிய நூல்கள் போன்ற பல்வேறு தலைப்புகளில் வெளியிடுகிறேன். எல்லாரும் விரும்பும் தரமான வெளியீடுகளே எங்கள் நூல்கள். தமிழக அரசின் பரிசு, ஸ்டேட் பாங்க் ஆஃப் இந்தியா பரிசு ஆகியவற்றை எங்கள் வெளியீடுகள் பெற்றுள்ளன என்பது குறிப்பிடத் தக்கது."

"விற்பனை எப்படி?"

"அரசாங்க நூலகங்களுக்கு ஆண்டுதோறும் சப்ளை செய்தது போக, மீதியுள்ள பிரதிகளை விற்பனை செய்வதென்பது சிரமமாகத்தான் உள்ளது. இதற்காகத்தான் இன்னும் கூடுதலாகப் பிரதிகளை வாங்கும்படி அரசாங்கத்தைக் கேட்டுக் கொண்டிருக்கிறோம். ஆண்டுதோறும். சென்னையிலும் மற்றும் பல பெருநகரங்களிலும் நடைபெறும் புத்தகக் காட்சிகளில் ஸ்டால் அமைத்து விற்பனை செய்கிறோம். இவை தவிர எங்களுக்கு நாடெங்கும் உள்ள புத்தக விற்பனையாளர்களின் ஒத்துழைப்பை நம்பித்தான் இத்தொழிலில் நிலைத்து நிற்கிறோம்.

தனிப்பட்ட வாசகர்களும் புத்தகங்களை விலை கொடுத்து வாங்கிப் படிக்கும் பழக்கத்தை வளர்த்துக் கொள்ளவேண்டும். பல்வேறு பொழுதுபோக்குகளுக்குத் துணிந்து செலவிடும் மக்கள், புத்தகம் வாங்கிப் படிக்கும் பழக்கத்தையும் தங்கள் கட்டாயக் கடமைகளில் ஒன்றாக ஏற்கவேண்டும் என்பதை என்கோரிக்கையாக 'அமுதசுரபி' மூலமாக வைக்க விரும்புகிறேன்"

திரு. வைரவன் விடுத்த கோரிக்கை நடைமுறைக்கு வர வேண்டும்' என நெஞ்சார வாழ்த்தி விடைபெற்றோம்.

— கு.சண்முகசுந்தரம்

150 ஆண்டுகளாக முதன்மை...

1844 ஆம் ஆண்டு. இந்தியாவிற்குள் வரும் அவர் இராணுவ வீரர்களுக்கு பைபிள், சமய நூல்களை விற்பனை செய்து வாழ்க்கையை நடத்துகிறார். நூலகராகப் பணியாற்றுகிறார். சிறிய புத்தகக் கடை ஒன்றுக்கு அடிக்கல் நாட்டுகிறார். புத்தகக் கடையுடன் அவர் புகழும் வளர்கிறது. சென்னை நகர 'ஷெரீப்' பாகிறார். அவர் பெயர் 'ஏபெல் ஜோஷ்வா ஹிக்கின்பாதம்ஸ்'. அவர் அடிக்கல் நாட்டிய புத்தகக் கடைதான், இன்று இந்தியாவில் முதன்மை வாய்ந்த புத்தக நிறுவனமாக விளங்கும் சென்னை அண்ணா சாலையில் இருக்கும் ஹிக்கின் பாதம்ஸ்.

தற்போது ஹிக்கின்பாதம்ஸ் விற்பனை நலையம் 10,000 சதுர அடி நிலப்பரப்பில் காவியமாக விளங்கும் கட்டடத்தில் அமைந்துள்ளது. கட்டடத்தின் தரை இத்தாலிய மார்பிள்களால் ஆனது. கட்டடத்தின் கூரை தடையற்ற காற்றோட்டத்திற்கு வகை செய்யும் விதத்தில் அமைக்கப்பட்டுள்ளது. அண்ணாசாலை, மண் சாலையாக இருந்தபோது தூசியிலிருந்து நூல்களைப் பாதுகாக்க உயர்ந்த இடங்களில் ஜன்னல் கதவுகள் அமைக்கப்பட்டு, இன்றும் புழுதியிலிருந்து புத்தகங்கள் பாதுகாக்கப்படுகின்றன. ஜன்னல் கதவுகளில் பொருத்தப்பட்டுள்ள கண்ணாடிகள் ஐரோப்பாவிலிருந்து வரவழைக்கப்பட்ட உயர்ந்த ரகங்கள்.

இக்கட்டடத்தைப் பராமரிக்கும் செலவு, புதிதாகக் கட்டப்படும் கட்டடத்திற்கு ஆகும் செலவைவிடக் கூடுதலாகுமாம். எப்படி?

இன்று அண்ணாசாலையில் ஒரு சதுர அடிக்கு இருக்கும் அபார விலையில் 10,000 சதுர அடியைக் கொண்ட ஹிக்கின் பாதம்ஸ் இடத்தில் இன்னோர் எல்.ஐ.சி. கட்டடத்தை உருவாக்க இயலும். இதனால் பல மடங்கு லாபமும் கிடைக்கும். ஆனால் லாபத்தைவிடப் புத்தகங்களுக்கென்றே உருவாக்கப்பட்ட பாரம்பரியம் மிக்க கட்டடத்தை, கலாசார உணர்வுகளைப் பேணிக் காத்திட – அரும் பொருளாகத் திகழும் இக்கட்டடத்தைச் சிறிதும் மாற்றியமைக்காமல் அதன் தனித் தன்மை, பொலிவு இருக்குமாறு பாதுகாக்க வேண்டும் என்று விரும்புகிறார்கள் இதன் உரிமையாளர்கள்.

ஏபெல் ஜோஷ்வா ஹிக்கின் பாதம்ஸ் அவர்களால் தொடங்கப்பட்ட சில ஆண்டுகளிலேயே 'ஹிக்கின்பாதம்ஸ்' உள்ளூரில் புத்தகங்கள், ஸ்டேஷனரி பொருள்களுக்கு இருந்த தேவையை முழுமையாகப் பூர்த்தி செய்யும் அளவிற்குத் தொழில் ரீதியாக விரிவடைந்தது.

1891 ஆம் ஆண்டு ஏபெல் ஜோஷ்வா ஹிக்கின்பாதம்ஸின் மறைவிற்குப் பிறகு அவரது புதல்வர் சி.எச். ஹிக்கின் பாதம்ஸ் நிறுவனத்தின் பொறுப்புகளை ஏற்று, பெரிய அளவில் வியாபாரத்தை முன்னேற்றப் பாதையில் வழி நடத்திச் சென்றார்.

1949 ஆம் ஆண்டு இந்திய மயமாக்கப்பட்ட இந்நிறுவனம் 'அமால்கமேஷன்ஸ் குரூப்'பின் ஓர் உறுப்பு நிறுவனமாக ஆக்கப்பட்டது.

போட்டோ : யோகா



ஹிக்கின்பாதம்ஸ்ஸின் இன்றைய வளர்ச்சி நிலைக்கு அதன் முன்னாள் சேர்மன் திரு. எஸ். அனந்தராம கிருஷ்ணன், அவரது புதல்வர்கள், மூத்தவரும், இன்றைய சேர்மனுமான திரு. ஏ. சிவசைலம், இளையவரும், துணை சேர்மனுமான திரு. ஏ.கிருஷ்ண மூர்த்தி, நிறுவன இயக்குநர்களான திரு. எச். கிருஷ்ண மூர்த்தி, திரு. ஏ.கே. அர்ஜுன் ஆகியோரின் முன்னோக்குத் திறமையும், அயராத உழைப்புமே மூல காரணங்களாகும். இன்று ஹிக்கின்பாதம்ஸ் வேகமான முன்னேற்றமடைந்து தென் இந்தியாவில் பல கிளைகளை உருவாக்கியுள்ளது. இந்திய ரயில், விமான நிலையங்களில் ஹிக்கின்பாதம்ஸின் விற்பனை மையங்கள் உள்ளன.

பதிப்புத் துறையைவிட, புத்தக விற்பனை, விநியோகத்திற்கு அதிக முக்கியத்துவம் கொடுத்துவரும் இந்நிறுவனம் காலத்தால் அழிக்க முடியாத பல வெற்றிப் படைப்புகளைப் படைத்திருக்கிறது.

எங்குமே கிடைக்காத புத்தகம் கண்டிப்பாக ஹிக்கின் பாதம்ஸில் கிடைக்கும் என்ற நம்பிக்கையோடு வரும் வாடிக்கையாளர்கள் ஏராளம். வெளிநாடுகளில் இருந்து வரும் அன்பர்களின் எண்ணிக்கையும் அதிகம்.

ஹிக்கின்பாதம்ஸின் குறிப்பிடத்தக்க ஓர் அம்சம், எந்தப் புத்தகமானாலும், அது எந்தத் தேசத்தில் கிடைப்பதாக இருந்தாலும் அதை வரவழைத்துக் கொடுக்கும் கொள்கை, என்று கூறலாம்.

'இல்லை' என்ற சொல்லுக்கே இங்கு இடம் இருக்கக் கூடாது என்ற கொள்கையுடன் இருக்கிறார் இதன் எக்ஸிக்யூடிவ் டைரக்டர் (ஆபரேஷன்ஸ்) திரு. எஸ். சந்திரசேகர்.

சில்லறை வாணிபம் என்பது இந்நிறுவனத்தின் பல்வேறு சேவைகளில் ஒன்றாக உள்ளது. ஹிக்கின்பாதம்ஸை ஒரு புத்தகக்கடை மட்டுமே என்று கருதுவது தவறு. கல்லூரிகள், தொழில் நிறுவனங்கள், அரசுத் துறைகளுக்கும் மொத்த விற்பனை செய்யும் சேவையும் முக்கிய அங்கம் வகிக்கிறது.

ஹிக்கின்பாதம்ஸின் மற்றொரு வலுவான அம்சம் அதன் தொழில் நுட்பம், நுணுக்க ஆதாரப் புத்தகங்கள் (Reference) கொண்ட பிரிவுகளாகும்.

அமெரிக்காவின் என்.டி.ஐ.எஸ். (National Technical Information Service) நெதர்லாண்டின் ஐ.டி.சி, (Inter Documentation Company) ஆகிய நிறுவனங்களுக்கு கோ-ஆப்ரேட்டிவ் ஏஜண்ட்டாக விளங்குவதன் மூலம் NTIS, IDC நிறுவனங்களின் பல்வேறு தொழில்நுட்ப, ஆராய்ச்சி விரிவுரைகள், வணிகம், பொறியியல் விரிவுரைகள் அவரவர் தேவைக்கேற்ப பல நிறுவனங்களுக்கு, அரசுத் துறைகளுக்கு, கல்லூரிகளுக்குக் கிடைக்கச் செய்வதும் இதன் பணியாக உள்ளது.

மிகக் குறைந்த செலவில் சிறந்த விளம்பர சாதனமாக விளங்குவது 'ஹிக்கின்பாதம்ஸ் புக் நியூஸ்' என்ற செய்தி மடல். மாதத்திற்கு இருமுறை வெளிவரும் இம்மடல் வாசக உறுப்பினர்களுக்கு அனுப்பப்படுகிறது. இம்மடல் பல்வேறு துறைகளில் புதிதாக வெளிவந்துள்ள நூல்கள், அதன் விவரங்கள், விலை, விளக்க உரையுடன் வெளியீட்டாளர் பற்றிய குறிப்புகளையும் கொண்டதாக மலர்கிறது.

2500க்கு மேற்பட்ட வெளிநாட்டுப் பதிப்பாளர்களின் நூல்களின் விவரத்தை நம் நாட்டில் உடனுக்குடன் கிடைக்கச் செய்வதன் மூலம் மிகப் பெரிய தொண்டாற்றுகிறது என்று சொல்லலாம். பொதுவாக எல்லா நூல்களும் சிறந்த முறையில் விற்பனையானாலும் மிக அதிக அளவில் விற்பனையாகும் நூல்கள் மருத்துவம், கம்ப்யூட்டர், நிர்வாகம், குழந்தைகளுக்கான நூல்களாகும்.

ஒரு குறிப்பிட்ட துறையை எடுத்துக் கொண்டால் அதில் நூற்றுக்கணக்கான வகைகள் இருக்கும். உதாரணமாக நாவல் என்றால் அதில் 70 - 80 ஆசிரியர்கள் எழுதிய பல நாவல்கள். அனைத்தும் இங்கு கிடைக்கின்றன.

இதுபோலவே மற்ற எல்லாத் துறைகளிலும் உள்ள நூல்கள் இங்குள்ளன. இதனால் வாசகர்கள் தங்களுக்குத் தேவைப்பட்ட பலதரப்பட்ட புத்தகங்களைத் தேர்ந்தெடுக்கும் வசதியைப் பெறுகிறார்கள். இது வேறு எங்கும் கிடைக்காத வரப் பிரசாதம்!

காலத்தின் தேவைகளுக்கேற்ப ஹிக்கின்பாதம்ஸ் உருவாக்கியிருக்கும் ஒரு புதிய வடிவம்தான் (Books on wheels) நடமாடும் புத்தகக் கடை. 10 - 15 பேர் ஒரே சமயத்தில் உள்ளே சென்று பார்க்கக் கூடிய அளவில் அமைக்கப்பட்டிருக்கும் இந்த நடமாடும் புத்தக நிலையத்திற்கு 250 சதுர அடி நிலப் பரப்பு கொண்ட இடம் போதும்.

சென்னை அண்ணாசாலையில் வெள்ளை நிற முகப்புத் தோற்றம் கொண்ட இந்தக் கட்டடம் 150 ஆண்டுகளாக தொடர்ந்து சேவை செய்து என்றும் மக்களின் அறிவுப் பசியைத் தீர்க்கும் ஆலயமாகத் திகழ்கிறது. மக்கள் மத்தியில் ஒரு முதன்மை நிறுவனமாக விளங்குகிறது என்றால் அது மிகையில்லை.

— நந்து

வரும் ஆண்டு நூற்றாண்டு

விடுதலைப் போராட்டக் காலத்தில் பத்திரிகைத் தொழிலையோ, பதிப்பகத் தொழிலையோ தொடங்குவதென்றால் அவ்வளவு எளிதான காரியமன்று.

பெரும்பாலானவர்கள் பாட சம்பந்தமான நூல்களையும், மத சம்பந்தமான நூல்களையுமே பெரும்பாலும் வியாபார நோக்குடன் பதிப்பித்தார்கள்.

மிகக் குறைந்த அளவிலேயே கதைகளையும் கட்டுரைகளையும் இலக்கியங்களையும் பதிப்பிக்கும் பதிப்பாளர்கள் இருந்தனர்.

ஒரு புத்தகத்தைப் பதிப்பிக்க வேண்டுமென்றால் காகிதப் பஞ்சம், பணப் பஞ்சம், எல்லாவற்றிற்கும் மேலாக இந்தப் பிரச்னைகளையெல்லாம் கடந்து விட்டால், 1000 பிரதிகள் பதிப்பித்தால் யாரும் வாங்க மாட்டார்கள்.

பொதுவாக ஓர் ஆசிரியர் ஒரு நூலை எழுதத் தொடங்கினால் அது முற்றுப் பெற பல மாதங்கள் ஆகும். அப்படி ஓர் ஆதார பூர்வமான ஆராய்ச்சி செய்து நூலை எழுதிப் பெரும்பாலும் தாங்களாகவே பதிப்பிப்பார்கள். அதற்குச் சிறந்த எடுத்துக்காட்டு:

உ.வே.சுவாமிநாத ஐயர், வை.மு.கோபால கிருஷ்ணமாச்சாரியார்.

இந்தச் சூழ்நிலையில்தான் தஞ்சாவூர் மாவட்டத்திலுள்ள கோமல் என்ற இடத்தில் பிறந்த குப்புஸ்வாமி ஐயர் 1896ஆம் ஆண்டு தனது சகோதரர்களுடன் 'அல்லயன்ஸ் கம்பெனி' என்ற பெயரில் ஒரு பதிப்பகத்தைத் தொடங்கினார். தான் உருவாக்கிய 'அல்லயன்ஸ் கம்பெனி'யின் மூலம் பல இளம் எழுத்தாளர்களின் எழுத்துகளைப் புத்தக வடிவில் கொண்டு வந்து, ஏதோ கிடைத்த கொஞ்ச நஞ்சத்தில், தானும் சிறிது எடுத்துக் கொண்டு, எழுத்தாளர்களுக்கும் சிறிது கொடுத்துத் தன்னால் முடிந்த வரை உதவி வந்தார்.

சமயம், இலக்கியம், குழந்தை இலக்கியம், விஞ்ஞானம், நவீனம் போன்ற அனைத்துத் துறைகளிலும் நூல்களை அந்தக் காலம் முதலே பதிப்பித்து வெற்றி கண்டுள்ளது அல்லயன்ஸ் கம்பெனி.

"16வயதில் நாலு முழம் துண்டுடன் நான் சென்னைக்கு வந்தேன். அதே



நாலு முழத் துண்டுடன் நான் போக வேண்டும்" என்று அடிக்கடி கூறி வந்த அல்லயன்ஸ் ஐயர் 1949-இல் காலமானார்.

பதிப்புலகில் ஒரு பொற்காலத்தைக் கொண்டு வந்து, உழைத்த அம்மகானைத் தனி மனிதர் என்றே கூற முடியாது. புருப் பார்ப்பவர், அச்சக உரிமையாளர், பதிப்புத்துறையில் முன்னோடி, உயர்ந்த பண்பாளர் என்ற பலவற்றைத் தம்முள் அடக்கிய ஒரு மாபெரும் மனிதர். அடக்கத்திற்கு ஓர் எடுத்துக்காட்டு. வி.குப்புஸ்வாமி ஐயர் அமைத்துத் தந்த அசையாத அடித்தளமான 'அல்லயன்ஸ் கம்பெனி' அடுத்த ஆண்டில் (1996) தனது நூற்றாண்டைக் காணவுள்ளது.

சமய நூல்களைப் பதிப்பிக்கும் போது, எல்லாரும் பதிப்பிப்பது போலக் கதை ரூபமாக மட்டும் கொடுக்காமல், இராமாயணத்தை 'ராமாயண வினா-விடை', பாரதத்தை 'பாரத வினா- விடை, பாகவத்தை பாகவத வினா- விடை' என்று புதிய முறையில் தந்தார்.

இவர் வெளியிட்ட 'ஆரிய மத உபாக்கியானம்' என்ற நூல் குடும்பத்தில் சிறியவர் முதல் பெரியவர் வரை செய்ய வேண்டிய கடமைகளைப் பற்றிக் கூறியது. இன்றும் இந்த நூல் 'இந்துமத உபாக்கியானம்' என்ற பெயரில் வெளிவந்து கொண்டேயிருக்கிறது.

நவீனங்களைப் பதிப்பித்தது போன்று பிற மொழி நூல்களையும் தமிழில் கொண்டு வந்தார். அதில் குறிப்பிடத் தக்கது, பங்கிம் சந்திரரின் நூல்களைப் பெருமளவில் கொண்டு வந்தார். தமிழ் நாடகங்கள் பலவற்றையும் வெளிக்கொண்டு வரத் தொடங்கினார்.

1908ஆம் ஆண்டு ஜூலை மாதம் 'விவேக போதினி' என்ற மாதப் பத்திரிகையைத் தொடங்கினார். பாபநாசம் சிவன், பி.ஸ்ரீ.ஆசார்யா, உ.வே.சா, கதிரேச செட்டியார், குமாரசர்மா, வே.சுவாமி நாத ஐயர் போன்ற மிகச் சிறந்த அறிஞர்கள் தம் பங்காக இதில் அவ்வப்போது எழுதி வந்தனர்.

க.நா.சு., பி.ஸ்ரீ., கா.ஸ்ரீ.ஸ்ரீ., கி.வா.ஜ., த.நா.சேனாபதி த.நா.குமாசாமி, எஸ்.வி.வி., லக்ஷ்மி போன்றவர்களின் எழுத்துகளைப் பதிப்பித்து எழுத்தாளர்களுடன் மிக நெருக்கமாகப் பழகினார்.

1930-40 ஆண்டு வாக்கில் சிறு கதைகள் எழுதுவதற்கு ஏராளமான தரமான ஆசிரியர்கள் இருந்தும், சிறுகதைகளே விற்பனையாகாத நேரம். 1934இல் அல்லயன்ஸ் ஐயர், தமிழில் முதல் முதலாகத் தோன்றிய, வ.வே.சு.ஐயர் எழுதிய 'மங்கையர்க் கரசியின் காதல்' என்ற சிறுகதைத் தொகுதியை வெளியிட்டார். அதே வரிசையில் 'தமிழ் நாட்டுச் சிறுகதைகள்' என்ற வரிசையை ஏற்படுத்தி, ஒவ்வோர் ஆசிரியரின் கதைகளையும் வாங்கி நூலாக வெளியிட்டார்.

தமிழ்ச் சிறுகதைக்ள் என்று நின்று விடாமல் மேலும் வங்காளச் சிறுகதைகள், இந்தியக் கதைத் திரட்டு, ஹிந்தியிலிருந்து பிரேம்சந்தின் சிறந்த சிறுகதைகள், மராட்டியத்திலிருந்து காண்டேகரின் சிறுகதைகள், தாகூரின் சிறுகதைகள் போன்ற பிற மொழிகளிலிருந்து சிறந்த இலக்கியங்களை வாசகர்களுக்குத் தமிழில், தந்த பெருமை ஐயரைச் சாரும். பிரேம் சந்த், சரத் சந்திரர் சிறுகதைகள் தமிழில் நூலாக வெளிவர 'அல்லயன்ஸ் கம்பெனி'யே காரணம்.

மிகவும் சிரமமான ஜீவனமாக இருந்தாலும் புத்தக வெளியீட்டுத் துறையை லாபமுள்ள ஒரு சிறந்த தொழிலாக்கி, மக்களுக்கு நல்ல நூல்களை வழங்கி, அவர்களிடையே ஒரு விழிப்புணர்வை உண்டாக்கி, இதன் மூலமாக பல குடும்பங்களை வாழ வைக்க வேண்டும் என்ற உயரிய கொள்கையுடன் அயராது உழைத்து, கடைசியில் மாபெரும் வெற்றியைக் கண்டதோடு அல்லாமல் அவர் நினைத்தது போலவே இன்று இந்தத் தொழிலினால் ஆயிரக்கணக்கான குடும்பங்கள் பிழைக்கின்றன.

தற்போது இந்த நிறுவனத்தை, குப்புசாமி அய்யரின் பேரன் திரு.சீனிவாசன் திறம்பட நிர்வகித்து வருகிறார்.

– நரேந்திரன்

❒ புத்தகமில்லாத அறை, ஆத்மா இல்லாத உடல் போலத் தான்!

– சிசரோ

❒ ஒருவேளை உணவில்லாமல் இருக்கலாம்; ஆனால் புத்தகமில்லாமலிருப்பது கடினம்.

– ஹோல்புருக்

பவள விழாக் காணும் நூற்பதிப்புக் கழகம்

இரா. முத்துக்குமாரசாமி

தமிழ் இலக்கியம் என்றாலே பைந்தமிழ் ஆர்வலர்களுக்குச் சங்க இலக்கியமும் ஐம்பெருங் காப்பியங் களும் தொல்காப்பியமுமே நினைவுக்கு வரும். மூவாயிரம் ஆண்டுகட்கு மேலாக இடையறாது, தொய்வின்றிப் பல்வேறு கால கட்டங்களில் பல்வகையான இலக்கி யங்களைப் படைத்துள்ளது தமிழ் மொழி. அகத்தியமும், தொல்காப் பியமும் முன்னிற்க எட்டுத் தொகை, பத்துப்பாட்டு, பதினெண் கீழ்க் கணக்கு, ஐம்பெருங்காப்பியம், ஐஞ்சிறுகாப்பியம், பன்னிரு திருமுறைகள், நாலாயிர திவ்ய பிர பந்தம், கம்பராமாயணம், வில்லி பாரதம், பின் தொடர பல்சுவை இலக்கியங்கள் தோன்றிக் கொண்டே யிருந்தன.

பிற்கால இலக்கணங்களாக நன்னூல், இலக்கண விளக்கம் முதலாகப் பல்வேறு தலபுராணங்கள் 96 வகை சிறு பிரபந்தங்களெனப் பத்தாம் நூற்றாண்டிலிருந்து 19ஆம் நூற்றாண்டு வரை பல்லாயிரக் கணக் கான சிறுநூல்கள் வெளிவந்து அவ்வப்போது வாழ்ந்த மக்களின் இலக்கிய ஆர்வத்தைத் தணித்துக் கொண்டிருந்தன.

20ஆம் நூற்றாண்டு பிற உலக மொழிகளுக்கு ஒப்பாகப் புதுவகைக் கவிதைகள், கதைகள், கட்டுரைகள் என்ற நவீன இலக்கிய வகைகளைத் தமிழில் கண்டு இன்றைய எழுத்தாளர்களின் கற்பனையாற்ற லையும் சிந்தனை வளத்தையும் புலப்படுத்திக் கொண்டிருக்கின்றன.

இத்தனை வகை இலக்கண இலக்கிய நூல்கள் ஏடுகளில் மட்டும் இருந்து பயனில்லை, நூல் வடிவில் வர வேண்டுமென்று 1920 முதல் தமிழ் நூல் பதிப்புப் பணியில் ஈடுபட்டிருப்பது திருநெல்வேலித் தென்னிந்திய சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம், பவளவிழா ஆண்டில் காலடி எடுத்து வைத்துள்ள கழகத்தைக் கட்டிக் காத்து



வளர்த்தது மறைத்திரு மறைமலை யடிகளாருடைய மருகரான திருவரங் கம்பிள்ளையும் அவர்தம் தம்பியார் பத்மஸ்ரீ வ. சுப்பையா பிள்ளையும் தான், கழகம் ஒரு கூட்டுப் பங்கு நிறுவனம். தமிழ்ப் புத்தகங்கள் வெளியிட இத்தனையாண்டுகளில் தோன்றி வளர்ந்து நிலைத்துள்ள ஒரே கூட்டுப்பங்கு நிறவனம் கழகம் தான். இலக்கியங்களைத் தேர்ந் தெடுத்து, தக்க அறிஞர்களையும் புலவர்களையும் கொண்டு உரை எழுதுவித்து வெளியிட்டுள்ளது கழகம். உரையாசிரியர்கள் இல்லை யேல் பழந்தமிழ் இலக்கியங்களே கிடையாது. மூலநூல்களை மட்டுமே படித்துப் புரிந்து கொள்ளும் ஆற்றல் ஆயிரத்தில் ஒருவருக்கு இருந்தாலே வியப்பு. எனவே பழைய நூல் களுக்கும் இடைக்கால, பிற்கால நூல்களுக்கும் இந்த நூற்றாண்டில் வாழ்ந்த பெரும் உரையாசிரியர்கள் ந.மு.வேங்கடசாமி நாட்டார். உரை வேந்தர் ஔவை சு.துரைசாமிப் பிள்ளை, பெரு மழைப் புலவர் பொ.வே.சோமசுந்தரனார், இளவழ கனார், சு.அ.இராமசாமிப் பிள்ளை, செ.இராமசாமிப்பிள்ளை, ந.சேது ரகுநாதன், பண்டித சங்குப் புலவர், புலவர் இரா. இளங்குமரனார் போன்ற பேருரையாசிரியர்களைத் தேடிக் கண்டுபிடித்து அவர்களைக் கொண்டு உரையெழுதுவித்து பண்டைத் தமிழ் நூல்களைப் பாமரரும் புரிந்து படிக்குமளவிற்கு எளிமைப்படுத்தியுள்ளது கழகம்.

பழந்தமிழ் நூல்களைப் பதிப்பிப் பதுடன் கழகம் நின்றுவிடவில்லை. வளர்கின்ற தலைமுறையினரைக் கருத்தில் கொண்டு அவர்களுக்கு நல்ல தமிழ் பேச, எழுதப் பயிற்சியளிக்கும் வகையில் கடந்த 75 ஆண்டுகளில் டாக்டர். மு.வரதரா சனார், காழி.சிவ. கண்ணுசாமிப் பிள்ளை, கா.அப்பாத்துரையார், என்.கே.வேலன் போன்ற பேரறிஞர் களையும் எழுத்தாளர்களையும் கொண்டு சிறுவர்க்கான கதை, கவிதை நூல்களை 500க்கு மேல் கழகம் வெளியிட்டுள்ளது.

மெத்த வளரும் மேன்மைக்கலை களைத் தமிழில் கொண்டுவரும் பணியிலும் கழகம் தன் பங்கைச் செலுத்தியுள்ளது. அறிவியல் நூல்களை எளியமுறையில் மாணவர் களுக்குப் புரியும் வகையில் கழகம் தயாரித்துள்ளது. நரம்பு மருத்துவம், கண் மருத்துவம், பல் மருத்துவம், எலும்பு மருத்துவம், தோல் மருத்துவம் என, மருத்துவத் துறையில் இன்று புகழும் திறமையும் பெற்று விளங்கும் மருத்துவர்களைக் கொண்டு தமிழில் இத்துறைகளில் முதன் முதலாக நூல்களை வெயிடு வதில் கழகம் முன்னணியில் இருக்கிறது.

வளர்ந்து வரும் கணிப்பொறி அறிவியல் பற்றியும் சில அறிமுக நூல்களை வெளியிட்டிருப்பதுடன் கணிப்பொறி அகராதி (ஆங்கிலம் - ஆங்கிலம்- தமிழ்) ஒன்றையும் முதன்முதலாகத் தமிழில் வெளி யிட்டுள்ளது.

வரலாற்றுத் துறையில் சேர, சோழ, பாண்டியர், பல்லவர் வரலாற்று நூல்களை வெளியிட்டுள்ள துடன் சங்ககால அரசர் வரிசை, புலவர் வரிசை, தமிழ்ப்புலவர் வரிசை என வரிசை வரிசையாக நூற்றுக்கு மேற்பட்ட வாழ்க்கை வரலாற்று நூல்களையும் கழகம் உருவாக்கி யுள்ளது.

மக்கள் வாழ்க்கைக்குப் பயன்படும் சட்டவியல், தீங்கியல் சட்டம், குற்ற வியல் சட்டம், சட்டமன்ற நடை முறைகள் போன்ற பல சட்டத்துறை நூல்கள் கழகத்தால் வெளியிடப் பெற்றுள்ளன.

தமிழையும் சைவத்தையும் தன்னிரு கண்ணெனப் போற்றிக் கொண்டிருக்கும் கழகம் சைவ சமயத்தைப் பரப்பப் பல்வேறு வகையான நூல்களை வெளியிட் டுள்ளது. பன்னிரு திருமுறைகள், பதினான்கு சாத்தி ரங்கள், பல்வகை வழிபாட்டு நூல்கள் போன்றவை கழகவழி வெளிவந்துள்ளன.

காலமறிந்து, காலத்தின் தேவை யறிந்து பயனுள்ள நூல்களைக் கழகம் வெளியிட்டு வருகிறது. திருக்குறளைப் பரப்புவதைத் தன் பெருங்கடமை யாகக் கொண்ட கழகம் டாக்டர்

மு.வரதராசனார் அவர்களைக் கொண்டு 'திருக்குறள் தெளிவுரை' நூலை வெளியிட்டுத் தமிழ்ப் பதிப்புத் துறையில் பெரும் புரட்சியை விளைவித்துள்ளது. எந்தத் தமிழ் நூலும் இதுவரை 120 பதிப்புகள் வெளிவந்ததில்லை. பதினைந்து லட்சம் பிரதிகள் விற்பனையானதில்லை.

கழகம் நூல் வெளியிடுவதுடன் நின்று விடவில்லை. தமிழ்ப் புத்தகங்கள் அனைத்தும், அவை கழக வெளியீடுகளாயிருந்தாலும் வெளியார் வெளியீடுகளாயிருந்தாலும் சரி, தமிழ்நாட்டில் உள்ள பல்வேறு பகுதி மக்களுக்கு எளிதில் கிடைக்கச் செய்யும் வகையில் சென்னையிலிருந்து திருநெல்வேலி வரை பல ஊர்களில் விற்பனைக்கு கிளைகள் திறந்துள்ளது.

நூல் பதிப்பிப்பதும் விற்பதும் மட்டும் கழகத்தின் நோக்கமில்லை. பல்வேறு அறநிலையங்களைக் கட்டிக்காப்பதும் அதன் பணியாகும். 20 ஆம் நூற்றாண்டுத் தலைசிறந்த தமிழறிஞர்களுள் ஒருவரான மறைத்திரு. மறைமலையடிகளார் தாம் வாழ்வதற்காகத் தாமே சென்னையையடுத்த பல்லாவரத்தில் அமைத்த மாளிகையை மறைமலையடிகள் கலைமன்றமாகக் கழகம் காத்துவருகின்றது. தமிழ் ஆராய்ச்சியாளர்கட்குப் பயன்படும் வகையில் சென்னையில் மறைமலையடிகள் நூல் நிலையத்தையும் திருநெல்வேலியில் சிவஞான முனிவர் நூல் நிலையத்தையும் கழகம் இயக்கி வருகின்றது. தமிழ் மொழிக்கு ஆக்கம் தேடும் வகையில் பல்வகையான ஆராய்ச்சிக் கட்டுரைகளைத் தாங்கி வரும் 'செந்தமிழ்ச் செல்வி, எனும் மாத இதழைக் கடந்த 67 ஆண்டுகளாகக் கழகம் இடையீடின்றி நடத்திவருகிறது. தமிழகத்திலுள்ள எல்லாத் தமிழறிஞர்களும் இதில் கட்டுரைகள் எழுதிவருகின்றனர். மறைமலையடிகள், நாட்டார், கா.சு.பிள்ளை, முதல் இன்றுள்ள பி.எல்.சாமி, டாக்டர். கலைக்கோவன் வரை நூற்றுக் கணக்கான அறிஞர்களின் இலக்கியம், இலக்கணம், சமயம், வரலாறு, அறிவியல் கல்வெட்டு, கோயிற் கலை, இசை, நடனம் போன்ற பல துறைகள் பற்றிய ஆய்வுக்கட்டுரைகள் இதன் வழி வெளிவந்துள்ளன. தமிழ் இலக்கியத்தில் பொதிந்துள்ள அறிவியல் செய்திகளை, அகழ்ந்தெடுத்துக் கடந்த ஐம்பது ஆண்டுகளாகத் தொடர்ந்து ஒவ்வொரு மாதமும் கட்டுரை எழுதிப் பெரும் சாதனை படைத்தவர் புதுவைப் பேரறிஞர், அரசுப் பணியிலிருந்து ஓய்வு பெற்ற இ.அ.ப.அதிகாரி, திரு.பி.எல்.சாமி, ஐ.ஏ.எஸ். ஆவார். கல்லூரி நாள்களிலிருந்து கட்டிலில் படுத்து ஓய்வுபெறும் நாள்வரை தொடர்ந்து ஆய்வுக் கட்டுரைகள் படைத்துவரும் இவருக்கு, இருபதுக்கு மேற்பட்ட அரிய ஆய்வு நூல்களைப் படைத்துள்ள இவருக்குத் தமிழ் நாட்டிலுள்ள எந்தப் பல்கலைக்கழகமும் 'டி.லிட்' பட்டம் வழங்காதது வருத்தத்துக்குரியது.

பவள விழாக் காணும் கழகம் தன்னாலியன்ற அளவு தமிழ்ப்பணி ஆற்றி வருகிறது. புதுவகை இலக்கியங்களைப் பதிப்பிக்கப் பல பதிப்பகங்கள் இருக்கப் பழைமையைக் காக்கப் போராடிக் கொண்டிருக்கிறது கழகம். உயர்ந்து வரும் தாள்விலை, அச்சிடும் செலவு ஆகியவற்றைப் பார்க்கும் போது, வெளியிட்டால் மெல்ல மெல்லப் பத்தாண்டுகள் வரை விற்பனையாகும் பழந்தமிழ் நூல்களை எதிர்காலத்தில் எப்படி வெளியிடுவது என்பது பெரும் புதிராக உள்ளது. அரசும் பெருநிதி நிறுவனங்களும் பழந்தமிழ் இலக்கியங்களைத் தத்தெடுத்துக் கொண்டால் தவிர, இனி எதிர் காலத்தில் பழந்தமிழ் நூல்களை எவராலும் வெளியிட முடியாது. தமிழன்னை தன் பழம் பெரும் செல்வங்களைப் பாதுகாத்துக் கொள்ள ஆவனசெய்ய வேண்டும்.

பக்திப் பாதையில் லிப்கோ!

மனிதத் தலைகள் மிதக்கும் தி.நகர் ரங்கநாதன் தெரு. பாதி தூரம் நடந்ததும் குறுக்கிடு கிறது, லிப்கோ, கீழ்த்தளத்தில் ஷோ-ரூம். பின்பக்கப் பாதையில் சென்றால் நேர் எதிரே மாடிக்குச் செல்லும் படிக்கட்டுகள். "வாங்க ஸார்! என்ன விஷயம்?'' விசாரிப்புகள்.

சந்திப்பு நோக்கத்தைச் சொல்கிறோம். சிறிது நேரத்தில் தி லிட்டில் ப்ளவர் கம்பெனியின் அதிபர் திரு. டி.என்.சி. வரதன் நம்மை வரவேற்கிறார்.

அமர்ந்திருந்தவரின் தலைக்கு மேல், ஸ்தாபகர் அமரர் வி. கிருஷ்ணசாமி சர்மா, ஸ்ரீ லக்ஷ்மி ஹயக்ரீவர், கடலூர் செயின்ட் ஜோசப் பள்ளி பிரின்சிபால் ஃபாதர் வெர்ஜர் என்ற பிரெஞ்சுப் பாதிரியாரின் மிகப் பெரிய படங்கள்.

திரு டி.என்.சி. வரதன் அவர்களிடம் கேட்கிறோம்: "தந்தை-கடவுள் படங்கள் சரி. எதற்கு இந்தப் பாதிரியாரின் படம்?".

லிப்கோ அதிபர் பேசத் தொடங்கினார். ''1929 ஆம் ஆண்டு வாக்கில் எனது தந்தையார் புத்தக வெளியீடு கம்பெனியைத் தொடங்க நினைத்தபோது தமது பள்ளிக் கூட ஆசிரியர் ஃபாதர் வெர்ஜரிடம் சென்றார். ஃபாதர் ஆசிகளையும் அறிவுரை களையும் வழங்கி, தந்த பெயர் தான் லிட்டில் ப்ளவர். அவரை இன்றளவும் நாங்கள் போற்று கிறோம். பூஜிக்கிறோம்.

1929-ல் தொடங்கப்பட்ட லிப்கோ, ஆரம்பத்தில் பாடப் புத்தகங்களுக்கு 'நோட்ஸ்' போடும் கம்பெனியாகத்தான் திகழ்ந்தது. தெலுங்கு, தமிழ், மலையாளம், கன்னடம் ஆகிய மொழிகளில் பல பாடப் புத்தகங்களுக்கு நோட்ஸ் போட்டோம்.

சென்னை மாநிலம், ஆந்திரம், கேரளம் என்று பிரிந்த பிறகு நோட்ஸ் போடுவதில் ஏராளமான சிரமங்கள் ஏற்பட்டன. இந்தச் சமயம் 'மகா பக்த விஜயம்' என்ற பக்திப் புத்தகத்தை வெளியிட்டோம். நல்ல வரவேற்பு கிடைக்கவே பக்திப் புத்தகங்களின் மேல் கவனம் செலுத்தி வரத் தொடங்கினோம்'' என்றார் கல்லூரிப் படிப்பை பி.ஏ.வுடன் நிறுத்திக் கொண்டு பதிப்பகத் துறையில் தந்தையின் வழியைப் பின்பற்றும் டி.என்.சி. வரதன்.

பக்தி நூல்களின் மூலம் தனது வளர்ச்சிப் பாதையை அமைத்துக் கொண்ட லிப்கோ, அகராதிகளின் மூலம் மக்கள் மனத்தில் ஆழ வேரூன்றி விட்டது என்றும் கூறலாம்.

பள்ளியில் படிக்கிற மாணவர் பருவம் தொட்டு லிப்கோவின் அகராதி ஒவ்வொரு தனி நபரின் மனத்திலும் பதிந்து விடுகிறது.

''மக்களின் ஆதரவுதான் இவ்வளவு பெரிய வெற்றிக்கும் காரணம். நல்ல விஷயங்களைப் பிழைகள் இல்லாமல் போட வேண்டும். எங்களது பக்தி நூல்கள் அனைத்தும் பழைய; அடிச்சுவட்டில் அப்படியே பதிப்பிக்கிறோம். ஆயிரம் இரண்டாயிரம் பிரதிகளாகப் பிரசுரிப்பதில்லை; எல்லாம் ஐந்தாயிரம் பத்தாயிரம் கணக்கில்தான். அரசாங்க நூலகத்தை நம்புவதில்லை. மக்கள் ஆதரவு எங்களுக்குப் பெரும் அளவில் இருக்கிறது. எளிய விலையில் நூல்களைத் தந்தாலும் பிழைகள் இரா. நானே ப்ரூப் பார்ப்பேன். நாங்கள் வெளியிடும் நூல்களைப் படிப்பதால் வேலை கிடைக்கும்; திருமணம் நடக்கும்; செல்வ வளத்துடன் வாழ்வோம் என்று அவற்றைப் படிக்கும் மக்கள் நினைக்கிறார்கள். லிப்கோவின் பக்தி நூல்கள் வரிசையில் ஏராளமான நூல்கள் வெளியாகி யுள்ளன. ரூ.1.00-க்குக் கூட



நூல்கள் வெளியிடுகிறோம். 'கந்த புராணம்' நூல் மொத்தம் 500 பக்கங்களைக் கொண்டது. ஆனால் விலை ரூ.42 தான்'' என்ற டி.என்.சி. வரதனின் திறமையால் இந்த வருட லிப்கோவின் விற்பனை ரூ95 இலட்சத்தைத் தாண்டவுள்ளது.

66-ஆவது ஆண்டில் வெற்றி நடைபோடும் லிப்கோ, ஒவ்வொரு வாசகருக்கும், அவர்கள் எழுதும் ஒவ்வொரு கடித வரிகளுக்கும் மதிப்பளிக் கிறது. உடனுக்குடன் பதில் எழுதுகிறது. நூலில் ஏதாவது சேதம் ஏற்பட்டால் உடனே மாற்றி அனுப்பி வைக்கிறது. லிப்கோவிற்கு திருச்சியில் மட்டும் ஒரு நூலகக் கிடங்கு (டெப்போ), உள்ளது. வேறு எங்கும் கிளைகள் இல்லை.


பதிப்பகத் துறையில் தனிப் பாதையை அமைத்துக் கொண்டு வெற்றிக் கொடியையும் பறக்க விட்டுக் கொண்டு இருக்கும் லிப்கோ எதிர் காலத்தில் என்ன செய்யப் போகிறது? என்று கேட்கிறோம்.

''எங்கள் பக்திப் பணி தொடரும். அகராதிகளின் பதிப்புகள் கூடும். தந்தையார் பல இடையூறுகளுக்குப் பிறகு எமக்கு அமைத்துத் தந்த பாதை வலுவானது. எனக்குப் பிறகு என் சகோதரர்கள் லிப்கோவை மேலும் வலுப்படுத்துவார்கள். என் மகனுக்கும் பதிப்பகத் துறையின் மேல் விருப்பம் உண்டு'' என்றார் தி லிட்டில் பிளவர் கம்பெனியின் அதிபர் டி.என்.சி. வரதன்!

— நரேந்திரன்

ராஜாஜி - கல்கி சூட்டிய பெயர்

ஹிந்தியில் புத்தகங்களை வெளியிடுவதில் தமிழகத்தில் முன்னணியில் நிற்கிறது திருச்சியில் உள்ள அகஸ்தியர் புத்தக நிலையம். மாணவர்களுக்கான துணை நூல்களுடன், பயனுள்ள புத்தகங்களையும் கடந்த 53 ஆண்டுகளுக்கும் மேலாக வெளியிட்டு சாதனை புரிந்து வரும் அகஸ்தியர் புத்தக நிலையம், பல இடங்களில் புத்தகக் காட்சிகள் நடத்தி அந்தந்தப் பகுதி புத்தகப் பிரியர்களின் தேவையையும் பூர்த்தி செய்து வருகிறது.




வி. சுப்பிரமணியம் அவர்களது திருக்கரத்தால் தொடங்கப் பெற்ற புத்தக நிலையத்திற்கு ராஜாஜியும், கல்கியும் இணைந்து சூட்டிய பெயரே 'அகஸ்தியர்!' தந்தை வி. சுப்பிரமணியம் அவர்களைத் தொடர்ந்து மகன் கோபால கிருஷ்ணன் அகஸ்தியர் புத்தக நிலையத்தைத் திறம்பட நிர்வகித்து வருகிறார்.

வாடிக்கையாளர்களை எஜமானர்களாகக் கருதும் கோபால கிருஷ்ணன் பி.காம். பட்டதாரி.

பதிப்பகத் துறையில் சிறந்த சேவை புரிந்ததற்காகப் பல விருதுகளையும், மக்களின் பாராட்டுதல்களையும் பெற்றுள்ள அகஸ்தியர் புத்தக நிலையம், கோபால கிருஷ்ணனின் அயராத உழைப்பில் மேலும் வளர்ச்சியடைந்து சாதனைகள் பல புரிந்து சிறந்தோங்க வாழ்த்துகிறோம்.

— நாகு

உழைப்புக்கு மரியாதை



1955 ஆம் ஆண்டு கவியரசர் கண்ணதாசனுடன் சென்னைக்கு வந்த இராமநாதன், 'தென்றல்' பத்திரிகையில் பணியாற்றுகிறார்.

'கலைமன்றம்', 'சுதேச மித்திரன்' பத்திரிகைகளில் இவரது எழுத்து பிரசுரமாகிறது.

கொஞ்ச நாள்களில் மாருதி அச்சகத்தின் நிர்வாகியாகிறார். தைரியம் பிறக்கிறது. 1962 ஆம் ஆண்டு விஸ்வநாத் பப்ளிகேஷன்ஸ் உதயமாகிறது.

1965 வரை திக்குமுக்காடி பப்ளிகேஷன்ஸை நடத்தி வந்தவருக்கு சலிப்பு ஏற்படுகிறது. கடையை மூடிவிட்டு மதுரை ஒத்தக்கடைக்குத் திரும்புகிறார். வட்டிக்கடையைத் தொடங்குகிறார். 1976 ஆம் ஆண்டு வரை நடந்த வியாபாரம் அரசாங்கத்தின் கடுமையான சட்டங்கள் மூலம் நலிவடைகிறது. 1977 ஆம் ஆண்டு வட்டி வியாபாரத்திற்கும் ஒரு பெரிய கும்பிடு போட்டாகி விட்டது.

இனி, தெரிந்த ஒரே தொழில் பத்திரிகை - பப்ளிகேஷன்.

அன்று - மனைவி இந்திராவின் பெயரில் தொடங்கிய 'ஸ்ரீ இந்து பப்ளிகேஷன்ஸ்' பல சாதனைகளைச் சந்தடியில்லாமல் செய்து கொண்டிருக்கிறது, விகரு. இராமநாதனின் கடுமையான உழைப்பால்.

ஸ்ரீ இந்து பப்ளிகேஷனின் சமீபத்திய சாதனை, 'இயற்கை உணவே நோய் தீர்க்கும் மருந்து' என்ற நூல்.

மனையடி சாஸ்திரம் நூலும், கைரேகை ஜோதிட நூலும் குறுகிய காலத்தில் 19 பதிப்புகளைப் பார்த்துவிட்டது. 'வாஸ்து சாஸ்திரம்' நூலும் அமோகமாக விற்பனையாகிறது.

"எந்தத் தொழிலிலும் உழைப்புக்குத் தனி மரியாதையும் மதிப்பும் உள்ளது" என்ற விகரு. இராமநாதனின் சொந்த ஊர் சிறுகூடற்பட்டி.

விகரு இராமநாதனின் மகன்கள் சீனிவாசன், சோமசுந்தரம், மாணிக்கம், நாகப்பன் ஆகிய நால்வரும் பதிப்பகத் தொழிலில் முழு மூச்சுடன் இயங்குகிறார்கள் - இந்து பப்ளிகேஷனின் உயர்வுக்கு உழைக்கிறார்கள்.

அரிய, இனிய, எளிய நூல்களின் மூலம் விற்பனைச் சாதனை புரியும் ஸ்ரீ இந்து பப்ளிகேஷனின் வெற்றிகள் தொடர வாழ்த்துவோம்.

மாலதி நாகராஜ்

அனுபவம்

● ஓர் எழுத்தாளர் ஓர் ஆசிரியரிடம் ஒரு கையெழுத்துப் பிரதியைக் கொடுத்து, "சென்ற வருடம் கொடுத்த நாவலையே உங்களிடம் மீண்டும் படிக்கத் தந்திருக்கிறேன்" என்றார்.

"சென்ற வருடம் நான் நிராகரித்த நாவலை எப்படி மீண்டும் தரலாம்?"

"ஒரு வருஷத்தில் உங்களுக்கு அனுபவம் அதிகரித்திருக்குமே!"

● இரண்டு இலக்கிய விமர்சகர்கள் ஒரு புத்தகத்தைப் பற்றி காரசாரமாக விவாதித்தார்கள்.

"இப்படி அபத்தமாகப் பேசாதீர்கள். நான் என்ன பேசுகிறேனென்று எனக்குத் தெரியும். அந்தப் புத்தகத்தை விமர்சனம் செய்தவன் நான்".

"உண்மை! நீ விமர்சனம் செய்திருக்கலாம். ஆனால் அந்தப் புத்தகம் முழுவதையுமே நான் வாசித்திருக்கிறேனே!"

புதுயுகப் புத்தகப் பண்ணை

1951 ஆம் ஆண்டு ஜூன் மாதம் முதல் நாள். முற்போக்குச் சிந்தனையும் தியாக உணர்வும் கொண்ட தோழர்கள் சீனிவாச ராவ், ப. ஜீவானந்தம், எம்.ஆர். வெங்கட்ராமன், வி.பி. சிந்தன் போன்ற அறிஞர்களைக் கொண்ட குழுவினால் தொடங்கப்பட்டதே நியூ நெஞ்சுரி புக் ஹவுஸ். (புதுயுகப் புத்தகப் பண்ணை).

கடந்த 44 ஆண்டுகளாக சிறந்த தமிழ் நூல்களையும், முற்போக்கு இலக்கியங்களையும், முற்போக்குச் சிந்தனையை வளர்க்கும் தமிழ், ஆங்கில நூல்களையும் வெளியிட்டு - முற்போக்கு சிந்தனையை மக்களிடம் பரப்புவதை நோக்கமாகக் கொண்டு செயல்பட்டு வரும் நியூ செஞ்சுரி புக் ஹவுஸின் நிர்வாக இயக்குநர் ஆர்.இராதாகிருஷ்ண மூர்த்தி அவர்களைச் சந்திக்கிறோம்.

"நூற்றுக்கு மேற்பட்ட இளம் எழுத்தாளர்களும், கல்வியாளர்களும், அறிவியலாளர்களும் எழுதிய நூல்கள் நியூ செஞ்சுரி புக் ஹவுசால் வெளியிடப் பட்டுள்ளன.

பல்துறை அறிஞர்களும், மத்திய - மாநில அரசின் கல்வி நிலையங்களில் செல்வாக்குப் பெற்ற வல்லுநர்களும் இப்பட்டியலில் அடங்குவர். இப்பதிப்பகம் வெளியிட்ட மருத்துவ - அறிவியல் - தொழில் நுட்ப, இலக்கிய நூல்கள், பல முறை தகுதி நோக்கித் தமிழ்நாடு பல்கலைக் கழகங்களில் பாட நூல்களாகவும், துணைப் பாட நூல்களாகவும் வைக்கப் பட்டுள்ளன. வெளியிடப்பட்டுள்ள நூல்கள் பல தமிழ்நாடு, இந்திய அரசுகளின் பரிசுகளையும், சர்வதேச அளவில் சர்வதேசக் கல்வி அறிவியல் பண்பாட்டு அவையின் பரிசுகளையும் (கிட்டத்தட்ட 80 பரிசுகள்) பெற்றுள்ளன. ஆனால் என்.சி. பி.எச். வெளியிடும் நூல்கள் என்றால் - கம்யூனிசத்தைப் பரப்புகிற நூல்கள் என்ற பிரமையை மக்களிடம் ஏற்படுத்தியுள்ளதைப் பற்றி வினவினோம்.



"1951 முதல் 1963 வரை மிகச் சிறிய கிளையாக இயங்கி, முன்னாள் சோவியத் நாட்டிலிருந்தும் பிற நாடுகளிலிருந்தும் மார்க்சிய - பொதுவுடைமை முற்போக்குக் கருத்துகளை உடைய நூல்களைத் தருவித்து விற்பனை செய்தது உண்மைதான். அந்தக் காலகட்டத்தில் பதிப்பகம் வெளியிட்ட நூல்களை விற்பனை செய்வதற்குக் கடைப்பிடிக்கப்பட்ட முறைகள், இதுபோன்ற பிரமைகளுக்கு ஒரு காரணமாக அமைந்துவிட்டது.

ஏறத்தாழ தமிழக மாவட்டங்களில் எல்லாத் தலைநகரங்களிலும் விற்பனை நிலையம் அமைத்து - நூல்களை விற்பனை செய்தல், நகர்ப்புறங்களிலும் ஊர்ப்புறங்களிலும் உள்ள கல்லூரிகளிலும், பள்ளிகளிலும் புத்தகக் காட்சி நடத்துதல், நகரங்களில் முக்கியமான இடங்களில் கடைகள் அமைத்தல், விற்பனை செய்தல், தரமான முகவர்களை அமர்த்திப் பல்வேறு இடங்களில் கடை வைத்து விற்பனை செய்தல், 'பாரதி' இயங்கும் விற்பனை நிலையம், 'பாவேந்தர்' இயங்கும் விற்பனை என்னும் இரண்டு ஊர்திகள் பட்டி தொட்டிகளுக்கெல்லாம் சென்று நூல்களைப் பரவலாக விற்பனை செய்ததுடன், பல்வேறு துறை நூல்களைப் பல்வேறு வழிகளில் அறிமுகப்படுத்தி நூல் வாங்க வைத்ததும், படிப்பில் நாட்டம் கொள்ளச் செய்ததும் கம்யூனிச முத்திரையைப் பதித்திருக்கலாம்.

இந்த நேரத்தில் எங்களது தாய் நிறுவனத்தைப் பற்றிச் சொல்ல வேண்டும். இரண்டாம் உலகப் போருக்கு முன் அந்நிய ஆதிக்கத்தின் கீழ் இந்திய மக்கள் ஏழைமையில் உழன்று, பரிதவித்து வாழ்ந்த காலத்தில், புதிய கருத்துகள் உலகை ஆட்கொண்டு வந்த காலத்தில் பம்பாய் நகரில மக்கள் நூல் வெளியீட்டகம் (People's Publishing House) தோன்றிற்று.

புதிய கருத்துகளை மக்களிடையே கொண்டு சென்று அவர்களைப் பக்குவப்படுத்தி இயக்கத்திற்குத் திரட்டுவது, நாட்டு விடுதலைக்காகப் போராடுவது, முற்போக்குக் கருத்துகளை வளர்த்துச் சமுதாய மாற்றத்திற்கு அடிகோலுவது, இந்திய மக்களை அறிவியலின்பால் நாட்டங் கொள்ளச் செய்வது என்னும் பல்வேறு இலக்குகளை நோக்கமாகக் கொண்டு எழுந்தது 'மக்கள் நூல் வெளியீட்டகம்'.

தொடக்க நாள்களில் மற்ற நாடுகளில் இருந்த நல்ல இலக்கியங்களைத் தமிழில்

மொழி பெயர்ப்பு செய்ய நிறை யவே தடைகள் இருந்தன. மற்ற நாடுகளைவிட ரஷ்யா - சீனா வில் முற்போக்கு சிந்தனைகள் கொண்ட கருத்துகள் நிறைய இருந்தன. வெளியிடும் உரிமை யும் சுலபமாக இருந்ததால் மார்க்சிய மொழி பெயர்ப்பு நூல்களை வெளியிட்டோம்.

சில மட்டுமே மொழி பெயர்ப்பு நூல்கள். என்.சி. பி.எச்.சின் தலையாய குறிக் கோள், எல்லாப் பாடங் களும் தாய்மொழியான தமி ழில் கற்றுத்தரப்பட வேண்டும் என்பதே.

பிற மொழிகளிலிருந்து - குறிப்பாக சோவியத் அர சியல், பொருளாதாரம், மருத் துவம், மெய்யியல், அறிவியல், தொழில் நுட்ப நூல்கள் தமிழில் மொழி பெயர்க்கப்பட்டு அச் சேறின. இவை புதிய சிந்தனை யையும் புதிய உணர்வையும் தமிழ் மக்களிடையே உரு வாக்கின. அவற்றால் நிறையப் பேர் பயனடைந்துள்ளனர்.

கம்யூனிசத் தத்துவமே தவ றானது என்று சொல்லக் கூடாது. அது தவறான கருத்து -பார்வை.

லெனினுடைய முதல் முழக் கமே, 'படி, படி, படி' என்பது தான். குழந்தைப் பருவத்தி லேயே படிக்க வேண்டும் என்று அவர் வற்புறுத்தினார். இது ஓர் உயர்வான கருத்து. அதையே நாங்கள் கடைப்பிடிக்கிறோம்.

இதற்காக வங்கியில் கடன் பெற்றுத்தான் தொழிலை விருத்தி செய்கிறோமே தவிர, வேறு வழிகளில் அல்ல.

இதுவரை 2000த்திற்கும் மேற்பட்ட நூல்களைப் பதிப்பித் துள்ளோம். 200 பேர் அயராமல் உழைக்கிறார்கள். எங்களிடம் பணம் - பெரிய முதலீடுகள் இல்லை. உழைப்பு, உழைப்பு தான் எங்கள் மூலதனம்.

பதிப்பகத் துறையில் - புத் தகத் தொழிலில் எவ்வளவு நெருக்கடிகள் வந்தாலும் என்.சி.பி.எச். (பி) லிமிடெட் டுக்கு தொழிலாளர்களின் உழைப்பு அழிவைத் தராது.

வளரும் சமுதாயத்தில் கல்வி நிலை மாற்றத்திற்கு ஏற்ப நூல் வெளியீடும் மாற்ற மடைதல் வேண்டும். இதனை நோக்கமாகக் கொண்டு இயங்குகிறோம். பிற வெளியீட் டாளர்கள் தமிழில் அறிவியல் நூல்களை வெளியிடத் தயங் கிய காலத்தில் நியூ செஞ்சுரி தமிழில் அறிவியல் நூல்களை முதன் முதலில் வெளியிட்ட பெருமை படைத்தது.

குழந்தைகள் கல்வியில் தனிக் கவனம் செலுத்தி பல சிறந்த நூல்கள் வெளியிட்டுள்ள சாதனை படைத்ததுடன், திருக் குறள், பாரதியின் கட்டுரைகள் - 'பாரதி தரிசனம்' என்ற பெய ரில் இரு தொகுதிகளாகவும், பாரதிதாசனின் 'குயில்' இத ழின் தலையங்கக் கட்டுரைகள் தொகுக்கப்பட்டு, 'உலகுக்கோர் ஐந்தொழுக்கம்' என்ற பெயரி லும் வெளிவந்துள்ளன.

நூல்கள் ஏழை எளியவர் களையும் நடுத்தர மக்களையும் சென்றடைய வேண்டும் என்ற நல்ல நோக்கத்தில் குறைந்த விலையில் அச்சிடும் பழக்கத் தினை சக்தி காரியாலயம் வை.கோவிந்தன் தொடங்கி வைத்தார். அவரைப் பின் பற்றி குறைந்த விலைக்குச் சிறந்த நூல்களை வெளியிடு கிறோம்.

மக்களுக்குள் இருக்கும் இன, மொழி, வேறுபாடுகளும் மத மாச்சர்யங்களும் களைந் தெறியப்பட வேண்டும் என்ற இலக்கினை நோக்கிப் பயணப் படும் என்.சி.பி.எச். இந்தி, பிராகிருதம், பாலி, சம்ஸ் கிருதம் ஆகிய மொழிகளில் வல்லுநரான ராகுல சாங் கிருத்தியாயனின் இந்தி நூல் களைத் தமிழாக்கம் செய்து வெளியிட்டுள்ளது. அதைப் போலவே தமிழில் வெளியிடப் பட்ட அறிவியல், மற்றும் தமிழ் இலக்கியம் சார்ந்த இருபத் திரண்டு நூல்கள் இந்தியில் மொழி பெயர்க்கப்பட்டுள்ளன. அவற்றுள் ஆறு நூல்களாக வெளியிடப்பட்டு விற்பனை யாகிவிட்டன. எஞ்சியவை விரைவில் வெளிவர உள்ளன.

இவ்வாண்டு (1994-95) முதல், நாளும் ஒரு புதிய நூல் வெளி யிடும் நோக்கத்தில் ஆண்டுக்கு குறைந்தது 300 தலைப்புகளில் நூல் வெளியிடும் முயற்சியில் இதுவரை 200 நூல்களை வெளி யிட்டுள்ளோம்.

பொன் விழா ஆண்டிற்குள் சில தரமான ஆங்கில நூல் களை மொழிபெயர்ப்பு செய்து வெளியிடப் போகிறோம். NBT தஞ்சைத் தமிழ்ப் பல்கலைக் கழகத்துடன் இணைந்து பாட நூல்கள் பிரசுரிக்க உள்ளோம்!" என்றார் நியூ செஞ்சுரி புக் ஹவுஸில் தன்னை முழுமை யாக ஈடுபடுத்திக் கொண்டு, அயராமல் உழைக்கும் நிர் வாக இயக்குநர் ஆர்.இராதா கிருஷ்ணமூர்த்தி.

சென்னை அம்பத்தூரில் இயங்கும் பிரதான நிறுவன மான என்.சி.பி.எச்.சிற்கு தமிழ கத்தில் திருச்சி, வேலூர், சேலம், தஞ்சை, மதுரை, நெல்லை, கோவை, புதுவை, செங்கை ஆகிய 9 இடங்களில் கிளைகளும், பல்வேறு இடங் களில் விற்பனை நிலையங் களும் உள்ளன.

பொன்விழாவை நோக்கி நடைபோடும் இந் நிறுவனம், புதிய சிறந்த எழுத்தாளர் களுக்கு வாய்ப்பளித்து உற் சாகப்படுத்துவதில் முன்னணி யில் நிற்பதை வரவேற் கிறோம்!

– நாகராஜ குமார்

குரு - ஆதர்ச புருஷர் - வழிகாட்டி



ஆன்மிகம், அறிவியல், இலக்கியம், கட்டுரை, கவிதை, சிறுகதை, சிறுவர் நூல், குடும்ப நலம், புதினம், நாடகம், வரலாறு, வாழ்க்கை வரலாறு போன்ற பல்வேறு தலைப்புகளில் 4000த்திற்கும் மேற்பட்ட நூல்களைப் பதிப்பித்துள்ள 'வானதி பதிப்பகம்' தொடங்கப்பட்ட நாள் 18.5.1955.

தேவகோட்டையில் 12.8.1927 ஆம் நாள் பிறந்த 'வானதி' திருநாவுக்கரசு இன்று பதிப்பகத் துறையில் தனக்கென்று ஒரு தனிப்பாதையை வகுத்துக் கொண்டவர்.

தமிழ்ப் பண்ணையில் எழுத்தராக, தியாகி இதழ் அச்சகத்தில் அச்சக ஊழியராக, மீண்டும் - நவயுகப் பிரசுராலயத்தில் எழுத்தராகப் பணிபுரிந்த திருநாவுக்கரசு பதிப்பாளரானது 'ஜில்ஜில்' பதிப்பகத்தின் மூலம்.

தொடக்க நாள்களில் 'ஹோட்டல் செட்டிநாடு' உரிமையாளராகவும் இருந்தவர், 'ராஜாஜி லெண்டிங் லைப்ரரி'யும் திறம்பட நடத்தியுள்ளார்.

ஜில்ஜில், கோமாளி, மிட்டாய், வெண்ணிலா - இதழ்களை நடத்திய வானதி திருநாவுக்கரசு, தனது தொடக்கக் கால நினைவுகளை நம்முடன் பகிர்ந்து கொண்டார்.

"1945 ஆம் ஆண்டில் சென்னைக்கு வந்தேன். 'தமிழ்ப் பண்ணை'யில் வேலைக்குச் சேர்ந்தேன். ராஜாஜி, கல்கி, நாமக்கல் கவிஞர், ம.பொ.சி. போன்ற அறிஞர் பெருமக்கள் அங்கு வருவார்கள். 'தமிழ்ப் பண்ணை' மிகச் சிறந்த புத்தக நிறுவனமாக இருந்தது. அந்தச் சமயத்தில் விடுதலைப் போராட்டம் மிகவும் தீவிரமாக இருந்தது. மக்கள் ஜவுளிக் கடைக்கு வருகிற மாதிரி தமிழ்ப் பண்ணை புத்தகக் கடைக்கு வருவார்கள். சின்ன அண்ணாமலை தமிழ்ப் பண்ணையை நிர்வகித்தார். அவர் விடுதலைப் போராட்ட வீரர். சின்ன அண்ணாமலையை என்னுடைய குரு என்று சொல்லலாம்.


நாமக்கல் கவிஞர் தேசியப் பாடல்கள் இயற்றுவார். சின்ன அண்ணாமலை நல்ல நகைச் சுவைப் பேச்சாளர். நாமக்கல் கவிஞருடைய பாடல்களை ரொம்ப அருமையாகப் பாடி, தேசிய உணர்வைத் தட்டி எழுப்புவார். இதனால் நாமக்கல் கவிஞருக்கும், தமிழ்ப் பண்ணைக்கும் நல்ல புகழ் கிடைத்தது.



சின்ன அண்ணாமலை



வை. கோவிந்தன்



ஏ.கே.செட்டியார்

சின்ன அண்ணாமலை புத்தகத் தொழிலுக்கு நிறையப் பாடுபட்டிருக்கிறார். ராஜாஜி - கல்கி நூல்களைப் பிரசுரித்தார்.

எஸ்.ஏ. ரகீமின் 'விடுதலை முழக்கம்' என்ற நூல் வெளியிடப்பட்டது. அந்த நூலைப் பறிமுதல் செய்தார்கள். மக்களின் தேசிய உணர்ச்சிகளைத் தூண்டும் அளவிற்கு நூல்களைப் பிரசுரித்தார்.

மாலை வேளைகளில் ராஜாஜி, கல்கி வருவார்கள், பேசுவார்கள். நானும், உங்கள் ஆசிரியர் விக்கிரமனும் பக்கத்துப் பக்கத்து மேஜைகளில் வேலை பார்ப்போம். பெரியவர்களுடன் பேசவும், அவர்களைச் சந்திக்க வேண்டும் என்ற ஆர்வம் எழுந்தது. அந்த எழுச்சி இன்றைக்குப் பெரிதும் உதவுகின்றது. அதன் பிறகு ராஜாஜி, கல்கி புத்தகங்களை நானே பதிப்பிக்கின்ற பாக்கியம் கிடைத்தது.

சின்ன அண்ணாமலை ரொம்பக் கவர்ச்சியான - அழகான வடிவமைப்பில் நூல்களை வெளியிடுவார். அந்த வடிவமைப்பை ஒரு சின்னக் கார்டில் அச்சடித்து நூலின் சாராம்சத்தை அச்சடித்து எல்லாருக்கும் அனுப்புவார். அந்த நாளில் நூலகமெல்லாம் இல்லை. தனிப்பட்ட வாசகர்கள்தாம் நிறைய வாங்குவார்கள். தமிழ்ப் பண்ணையில் வேலை செய்வதற்குத் தனி மதிப்பு இருக்கும்.

ராஜாஜியோட 'வியாசர் விருந்து' நூல் இன்றைக்கு ஐம்பது ரூபாய் விலையில் விற்கப்படுகிறது. அந்த நூலை ரொம்ப மலிவான விலைக்கு அழகாகப் பதிப்பித்து விற்கப்பட்டது. புத்தகம் வாங்குகிற ஆர்வத்தை உண்டாக்கினார்கள். இன்றைக்கு புத்தகத் தொழில் வளமாக இருக்கிறது என்றால், அதற்குச் சின்ன அண்ணாமலை மூலக்காரணம் என்றும் சொல்லலாம்.

> ❐ புத்தகங்கள் இளமையில் வழிகாட்டி; பருவத்தில் பொழுது போக்குபவை. நாம் தனிமையில் இருக்கும்போது நமக்குப் பெருந்துணையாக இருப்பதுடன் நாமே நமக்குப் பெருஞ்சுமையாகத் தோன்றாதவாறு செய்கின்றன.
>
> – கோலியா
>
> ❐ புத்தகமும் நண்பர்களும் குறைவாகவும் நல்லதாகவும் இருக்க வேண்டும்.
>
> – ஸ்பெய்ன்

அடுத்தவர் - வை. கோவிந்தன்.

வை. கோவிந்தன், சின்ன அண்ணாமலைக்கும் முன்னோடி. இப்போது மியூசிக் அகாடமி இருந்த இடத்தில் சக்தி காரியாலயம் இருந்தது.

அங்கு 'சக்தி' பத்திரிகை - ரீடர்ஸ் டைஜஸ்ட் மாதிரி இருக்கும். பெண்களுக்காக 'மங்கை', 'கதைக் கடல்', 'அணில்' என்றும் குழந்தைகளுக்கு - 'பாப்பா' என்றும் நிறைய பத்திரிகை ஒரே சமயத்தில் சக்தி காரியாலயத்திலிருந்து வெளிவரும். ஒரு பெரிய தொழிற்சாலையில் இருந்து வருகிற மாதிரி வரும்.

அங்கே பெரிய பெரிய எழுத்தாளர்களைச் சந்தித்து இருக்கிறேன். புதுமைப்பித்தன், தி.ஜ.ர., கண்ணதாசன் போன்றவர்களெல்லாம் அங்கு வேலை செய்திருக்கிறார்கள். மாலை வேளையில் ஸ்தாபனத்திற்குள்ளிருந்து தொழிற்சாலையில் இருந்து வருகிற மாதிரி தொழிலாளர்கள் வெளியே வருவார்கள்.

'அணில்' பத்திரிகையில் தமிழ்வாணன் ஆசிரியராகவும், நான் உதவி ஆசிரியராகவும் வேலை பார்த்தோம்.

இப்போது வருகிற 'பெங்குவின்' வரிசை மாதிரி வை. கோவிந்தன் புத்தகங்களைப் பதிப்பித்தார். ரஷ்ய இலக்கியங்கள், பிரெஞ்சு இலக்கியங்கள், ஆங்கில இலக்கியங்களை மொழி பெயர்த்துப் பிரசுரிப்பார். வரவேற்பு அமோகமாக இருக்கும்.

பாரதியார் நூல்களை 150 பக்கங்களுக்கு மேல் பிரசுரித்து ஒன்றரை ரூபாய்க்கு விற்பார். மலிவுப் பதிப்பைத் தொடங்கி வைத்தவர் கோவிந்தன்தான். திருக்குறள், கம்ப இராமாயணம், மகா பாரதம் இப்படி நிறைய நூல்கள் மலிவு விலைக்குக் கிடைக்கும்.

இவ்வளவு பெரிய ஸ்தாபனம் ஏன் அழிந்து போனது என்றால் - நூல்கள் மக்களுக்கு மலிவான விலையில் கிடைக்க வேண்டும் என்று வரவு - செலவு கணக்கையே பார்க்காததால்தான். குழந்தை நூல்கள் நிறையப் பிரசுரித்திருக்கிறார் வை. கோவிந்தன். வை. கோவிந்தன் நல்ல எழுத்தாளரும்கூட!

ஏ.கே. செட்டியாரைப் பற்றி இங்கே குறிப்பிட வேண்டும்.

இவர் ரொம்ப ஆழமான மனிதர். 'மகாத்மா காந்தி'யைப் பற்றித் திரைப்படமெடுத்தவர். நல்ல மொழி பெயர்ப்பாளர். உலகம் முழுதும் சுற்றி நல்ல இலக்கியங்களைத் தமிழுக்குக் கொண்டு வந்தவர்.

ராஜாஜியின் பரம பக்தர். 'குமரி மலர்' என்ற பத்திரிகையை நடத்தினார். 'குமரி மலர்' பத்திரிகையை இலட்சியத்திற்காக நடத்தினார்.

'குமரி மலர்' பத்திரிகைக்குத் தனி மதிப்பு இருந்தது. இன்றைக்கு நான் நல்ல நூல்களை வெளியிடுகிறேன் என்றால் அதற்குக் காரணம் ஏ.கே. செட்டியார்தான்! எல்லா விஷ

யத்திற்கும் ஆதாரம் சொல்வார். உலகம் சுற்றிய தமிழன் என்ற புகழ், பெயர் பெற்றவர் . பயண இலக்கியத்திற்கு அவர் வழிகாட்டி.

பதிப்புத் துறையில் எனக்கு சின்ன அண்ணா மலை – குரு; வை. கோவிந்தன் – ஆதர்ச புருஷர்; ஏ.கே. செட்டியார் – வழிகாட்டி!

இவர்களையெல்லாம் மறக்கவே முடியாது.

இப்போது பேப்பர் விலை அதிகமாகி விட்டது இந்த வருஷம் ஐந்து முறை பேப்பர் விலை ஏறிவிட்டது. மலிவாக நூல்களைப் பதிப்பிக்கவே முடிவதில்லை.

எதிர்காலத்தில் – சாதாரண நூல்களை விற்பனை செய்வது மிகக் கடினமாக இருக்கும். நம் நாட்டில் நாவல் – கதை நூல்களைவிட மக்களுடைய பிரச்னைகளைச் சுலபமாகத் தீர்க்கிற நூல்களை வாசகர்கள் வாங்குகிறார்கள்.

மன நிம்மதி, உடல் ஆரோக்கியம், மருத்துவ நூல்களுக்கு முக்கியத்துவம் தருகிறார்கள். இங்கே ஒவ்வொரு நிமிஷமும் பிரச்னையாக இருக்கிறது. அந்த பிரச்னைகளைத் தீர்க்கக் கூடிய நூல்கள் தேவையாக இருக்கின்றன. அப்படி இருந்தால் நூலின் விலையைப் பற்றி கவலைப்படுவதில்லை.

புத்தகத் தொழில் ஒரு புனித மான தொழில். சுலபமாகப் பணம் சம்பாதிக்கிற தொழில் இல்லை.

எனக்கு இந்தத் தொழிலில் ஆத்ம திருப்தி கிடைக்கிறது. அதற்கு நீண்ட நாள் பொறுமை வேண்டும். பொறுமையாக இருந்தால் சம்பாதிக்கலாம். முழு கவனமும் இதிலேயே இருக்க வேண்டும்" என்கிறார் வானதி திருநாவுக்கரசு.

— குமார்

புத்தகம் பிறக்கிறது!

புத்தகத்தை ஐயாயிரம் ஆண்டுகளுக்கு முன்பு, மரச் சட்டங்களில் களிமண் பட்டைகளில் எழுதிப் பார்த்து வடிவம் கொடுத்திருக்கிறார்கள். ஐரோப்பாவில் 1400 ஆம் ஆண்டுதான் முதலில் அச்சிடக் பட்ட புத்தகம் தயாரானது. எகிப்தில் கி.மு. 2700 ஆம் ஆண்டிலேயே புத்தகங்கள் எழுதப்பட்டதாகச் சான்றுகள் கிடைக்கின்றன. எகிப்தில் மக்கள் பேபைரஸ் (Papyrus) என்ற செடியிலிருந்து தயாரித்த பொருளில் எழுதி வந்தனர். நைல் நதிக்கரையில் இவ்வகைச் செடிகள் நிறையப் பயிராக்கப்பட்டிருந்தன. பாபிலோனியாவில் மக்கள் களிமண் கட்டியில் சில குறியீடுகளை அழுத்தி வணிக, அரசு ஆவணங்களாக, சரித்திரச் செப்பேடுகளாகப் பேணிக் காத்தனர். கிரேக்கர்கள் அந்தக் காலத்தில் மெழுகு தடவப்பட்ட மரச் சட்டங்களை நோட்புத்தகங்களாகப் பயன்படுத்தியிருக்கிறார்கள்.

கி.பி. 400 ஆம் ஆண்டிலிருந்து 1500 வரை கிறிஸ்துவப் பாதிரியார்கள், எழுதும் துறையிலும் புத்தகத் தயாரிப்பிலும் மூழ்கியிருந்திருக்கிறார்கள். பைபிள், நூல் வடிவமாக அந்தக் காலத்தில் உருவாகியிருக்கிறது.

மத்திய காலங்களில் பல புத்தகங்கள் வண்ணக் களஞ்சியமாக்கப்பட்டு, கையெழுத்துப் பிரதிகளில் ஒவ்வொரு பக்கத்திலும் வண்ணச் சித்திரங்கள் தீட்டப்பட்டிருந்தன. தோல் பைண்டிங், தங்கம், வெள்ளி, விலையுயர்ந்த கற்களால் அலங்கரிக்கப்பட்டனவாம். கெல்ஸ் புத்தகம் அயர்லாந்தில் இப்படி விலையுயர்ந்த வண்ணங்களில் தயாரிக்கப்பட்டிருந்தது.

கி.பி. 1200 ஆம் ஆண்டில் பருத்தியிலிருந்து எழுதும் பொருள் உருவாக்கப்பட்டது. பேப்பர் தயாரிக்கும் முறை சீனாவிலிருந்து தான் உதயமாயிற்று. கி.பி. 868 இல் சீனர்கள் முதன் முதலில் 'வைரசூத்ரா' (Diamond Sutra) என்ற அச்சிடப்பட்ட நூலைத் தயாரித்தனர். மர அச்சில் தயாரித்து, அந்த மேடான பகுதிகளில் அச்சு மையைப் பரப்பி, காகிதத்தில் அச்சிட்டிருக்கின்றனர். இவ்வகை அச்சுக்கு 'பிளாக் பிரிண்டிங்' என்று அழைக்கப்பட்டு 1300 ஆம் ஆண்டின் பிற்பகுதியில் ஐரோப்பாவில் பிரசித்தமாயிற்று.

பிறகு ஒவ்வோர் எழுத்தும் உலோகத்தில் தயாரிக்கப்பட்டு, அச்சு கோக்கப்பட்டு, பிறகு அச்சிடும் தொழில் உருவானது. முதன் முதலில் லத்தீன் மொழியில் பைபிள்தான் அச்சானதாகத் தெரிய வருகிறது. அந்தக் காலத்தில் இருநூறு பைபிள் புத்தகங்களை பஸ்ட், பீட்டர் ஸ்கூபர் அச்சிட்டு வழங்கியிருக்கிறார்கள். கி.பி. 1500 ஆம் ஆண்டில் ஒவ்வோர் ஐரோப்பிய தேசத்திலும் அச்சகம் உருவாகிவிட்டது. 1465 ஆம் ஆண்டில் இரு ஜெர்மானியர்கள், இத்தாலியில் முதலில் ஓர் அச்சகத்தைத் தொடங்கினார்கள். பிரெஞ்சு அச்சுத் தொழில் மேதை நிக்கோலஸ் ஜென்சன் 1470 ஆம் ஆண்டு ஓர் அச்சகத்தைத் தொடங்கினார். 1474 ஆம் ஆண்டு தான் வில்லியம் காக்ஸ்டன் முதன் முதலில் ஆங்கிலத்தில் அச்சிடப்பட்ட நூலைக் கொண்டு வந்தார். ஜியாப்ரே சாஸரின் 'கான்டர்பரி கதைகள்' தான் முதன் முதலில் தோன்றிய அச்சிடப்பட்ட ஆங்கில இலக்கியமாகும்.

இங்கிலாந்தில் தோன்றிய பெங்குவின் புத்தகங்கள் 'பேப்பர் பேக்' பிரசுரத்தில் முன்னணியில் இருந்தன.

— சுண்டுமணி

❒ ஒவ்வொரு நூலாசிரியரும் பதிப்பாளரோடு ஒப்பந்தம் செய்து கொள்ளும்போது அந்த ஒப்பந்தத்திலுள்ள வாசகங்களை நன்கு புரிந்து கொண்ட பிறகே கையெழுத்திட வேண்டும். அந்த ஒப்பந்தம் வழக்கமானது தானே என்று அசிரத்தையாக இருந்து விடக்கூடாது. ஒவ்வொரு பதிப்பாளரின் ஒப்பந்தமும் வெவ்வேறு மாதிரி அமைந்திருக்கலாம். வழக்கமான ஒப்பந்தம் என்று முட்டாள் பட்டம் கட்டிக் கொண்டு விடக்கூடாது.

– மைக்கேல் லிகட்

மலிவு விலையில் நூல்கள்



சந்தடி மிகுந்த பாண்டிபஜார் முத்துகிருஷ்ணன் தெருவில் உள்ளது கவிதா பப்ளிகேஷன். பதிப்பகத்தின் உரிமையாளர் சேது. சொக்கலிங்கம். மலிவு விலைப் பதிப்புகளை மக்களுக்குத் தருவதில் முனைந்து நிற்கிறார். பாரதியாரின் மீது தீராத பற்றுக் கொண்ட இவர், பதிப்பகம் தொடங்கியதே தனிக் கதை.

"தேவகோட்டையில் பாரதி தமிழ்ச் சங்கம் என்று ஓர் அமைப்பு. பிரபலமானவர்கள் எல்லாரும் அங்கே வந்திருக்கிறார்கள். என் தந்தை ஸ்தாபகச் செயலாளர். என் சிறுவயதில் 'பாரதி கவிதா ஊர்வலம்' நடத்துவோம். ஒருத்தர் பாரதியார் போல வேடமிட்டு – கோயிலில் இருந்து முரசு வாங்கி வந்து – அட்டையில் பாரதியின் கவிதை வரிகளை எழுதி ஊர்வலம் போவோம். இது எப்போது வரும் என்று எல்லா இயக்கத்தைச் சேர்ந்தவர்களும் எதிர்பார்ப்பார்கள். இதுதான் அடித்தளம்.

முதல் முதலாக பதிப்பகம் தொடங்கும் போது பாரதியாரின் கவிதைகளைப் பிரசுரிக்க விரும்பினேன். அதே போல முதல் நூல் 'தேசியக் கவியின் விடுதலை முழக்கம்'. இதற்கு மக்களிடம் நல்ல வரவேற்பு கிடைத்தது. தொடர்ந்து பாரதி கவிதைகளைப் பதிப்பித்தேன். எதிர்காலத்தில் அவ்வையாரின் நீதிநூல்கள், நாலடியார், பாரதிதாசன் கவிதைகள் இன்னும் முக்கியமான நூல்களை மலிவு விலையில் பிழைகள் இல்லாமல் சிறந்த தயாரிப்புடன் பிரசுரிக்கப் போகிறேன். அடுத்த ஆண்டில் இந்தப் பணியைத் தொடங்கி விடுவேன். இதனால் லாபம் குறைவு என்றாலும் ஆத்மதிருப்தி கிடைக்கிறது. அதுபோதும்".

அட்டைப் படத்திற்கு தனிக் கவனம் செலுத்தும் சேது. சொக்கலிங்கம், எல்லாருடைய வீட்டிலும் ஒரு நூலகம் இருக்க வேண்டும் என்று விரும்புகிறார்.

"நூலகம் என்றால் ஆயிரம் நூல்களில்லை. நல்ல நூல்கள் இருப்பது போதும். உதாரணமாக வங்காளத்தில் தாகூருடைய 'கீதாஞ்சலி'யை எல்லாருடைய வீட்டிலும் பார்க்க முடியும். அது போல, பாரதியார் கவிதைகள் எல்லாருடைய வீட்டிலும் இருக்க வேண்டும். 'படிக்கமுடியாது; நேரமில்லை' என்று சொல்வதெல்லாம் பொய். படிப்பது என்பது தேசம் வளர உபயோகமாக இருக்கும்" என்றவரின் பேச்சு நூலகத் துறையின் மீது திரும்பியது.

"பொது நூலகத் துறையில் 'வேண்டும்' என்று சில நூல்களை வைத்துக்கொண்டு 'வேண்டாம்' என்று பலவற்றை ஒதுக்கி விடுகிறார்கள். நூல்களைத் தேர்வு செய்கிறவர்கள் எல்லாரும் பள்ளிக்கூட ஆசிரியர்களாக இருக்கிறார்கள். நூலகத் தேர்வுக் குழுவில் பதிப்பாளர், எழுத்தாளர், வாசகர் ஆகியோரும் இருக்கவேண்டும். இவர்களும் கலந்தாலோசித்தால் பதிப்பகத்துறை மேலும் வெற்றியடையும் என்பது என் கருத்து."

"எழுத்தாளர்கள் எல்லாரும், 'ராயல்டி ஒழுங்காகத் தருவதில்லை' என்று குறை சொல்கிறார்கள். இது பதிப்பாளர்கள் மேல் பற்றி நீங்கள் என்ன சொல்கிறீர்கள்?" என்றோம், பல எழுத்தாளர்களின் நூல்களைப் பதிப்பித்துள்ள சேது. சொக்கலிங்கத்திடம்.

"எல்லாத் துறைகளிலுமே உள்ள குறைகள் போல் இந்தத் துறையிலுள்ள பெரும் குறை இது. பொதுவாக இந்தத் தொழிலில் 24 மணி நேரமும் முழு மூச்சாக ஈடுபட்டுள்ளவர்களான பதிப்பாளர்களுடன் எழுத்தாளர்களுக்கு நல்ல உறவுமுறை இருக்கிறது. எங்கேயோ சில இடங்களில் ஓரிரு குறைகள் இருக்கும். ஆனால் எல்லாரும் அப்படித்தான் என்று சொல்ல முடியாது. நியாயமாக – தர்மமாகத் தொழில் செய்கிறவர்கள் அப்படி இருக்கமாட்டார்கள். இந்தத் தொழில் நம்பிக்கையின் பேரிலே தான் நடக்கிறது. ஆனால் ஏமாற்றும் சந்தர்ப்பமும் இருக்கிறது" என்று யதார்த்த நிலையை விளங்கிய சொக்கலிங்கம் 1967 இல் பள்ளி இறுதி வகுப்பை முடித்துக் கொண்டு பதிப்பகத்துறைக்கு வந்தவர்.

நண்பர் சுவாமிநாதனுடன் 'தமிழ்த்தாய் பதிப்பகம்' தொடங்கியவர். ஓராண்டிற்குள் நண்பர்கள் நல்ல முறையில் பிரிந்து – மகள் கவிதாவின் – பெயரில் 'கவிதா பப்ளிகேஷன்' தொடங்கியவர்.

இன்று கவிதா பப்ளிகேஷன் வெளியிட்டுள்ள ஓஷோவின் நூல்கள் பரபரப்பாக விற்பனையாகின்றன. இது தவிர சுய முன்னேற்ற நூல்களுக்கும் நல்ல வரவேற்பு இருக்கின்றன. இதுவரை 600 தலைப்புகளில் நூல்கள் பதிப்பிக்கப்பட்டுள்ளன.

'இந்த சில ஆண்டுகளில் ஒவ்வொரு வாசகரும் ஒவ்வொரு விருப்பங்களைக் கொண்டுள்ளனர். அதற்குத் தகுந்த மாதிரியும் அரசாங்கத்தின் நெளிவு சுளிவுகளுக்கும் ஏற்ப நூல்களை வெளியிட வேண்டியுள்ளது. ஆனால் பதிப்பகத்துறையின் எதிர்காலம் வளமுடன் இருக்கும்" என்று திடமாக நம்புகிற கவிதா பப்ளிகேஷன்ஸ் சேது. சொக்கலிங்கம் மலிவு விலையில் – மேலும் பல நல்ல நூல்களைப் பதிப்பிக்க வாழ்த்துவோம்!

— குமார்ஸ்

❒ புத்தகங்களைக் கடன் கொடுக்காதே. யாரும் திருப்பித் தருவதில்லை. என் நூலகத்தில் மற்ற நண்பர்கள் கொடுத்த புத்தகங்களே அலங்கரிக்கின்றன.

– அனடோல் பிரான்ஸ்

உழைப்பும் துணிவும் உறுதுணை



'மாஸ்டர் ஆஃப் ஆல் சப்ஜெக்ட்ஸ்' ஆகத் திகழ்ந்த அமரர் தமிழ்வாணன், ஊன்றி வைத்துச் சென்ற செடியை, இன்று அவரது புதல்வர்கள் லேனா, ரவி இருவரும் தங்கள் கடின உழைப்பெனும் நீரைப் பாய்ச்சி அழகிய பூந்தோட்டமாக வளர்த்திருக்கிறார்கள். அதுதான் மணிமேகலைப் பிரசுரம். அதன் நிர்வாகிகளில் ஒருவர் திரு. ரவி தமிழ்வாணன் அவர்களைச் சந்திக்கிறோம். புன்னகை மாறாத இன்முகத்துடன் வரவேற்றுத் தங்கள் வளர்ச்சிப்பாதை பற்றிச் சொல்கிறார்:

"எங்கள் தந்தையார் அமரர் தமிழ்வாணன் அவர்களின் 'துணிவே துணை' என்ற சொற்றொடர் எங்கள் வழிகாட்டி, திட்டமிட்ட பணிகளும் கடுமையான உழைப்பும் எங்கள் வெற்றிக்கு உறுதுணை.

ஒரு தொப்பியையும் கறுப்புக் கண்ணாடியையும் முகவரி எழுதுமிடத்தில் வரைந்து அனுப்பினால் போதும். அந்தக் கடிதம் தமிழகத்தின் எந்த மூலையிலிருந்து அஞ்சல் செய்தாலும் சரியாக எங்களுக்கு வந்து சேர்ந்து விடும். தமிழகம் முழுவதிலும் எங்கள் நிறுவனத்தின் பெயர் நின்று நிலை பெற்றிருக்கிறது என்பதற்கு இது ஒரு சான்று.

முதன் முதலில் முகவரிகள் அடங்கிய தொகுப்பு நூலை வெளியிட வேண்டும் என்ற எண்ணம் வந்ததும் சினிமா நடிக - நடிகையரின் முகவரிகள் கொண்ட நூலை வெளியிடலாம் என்று நினைத்தோம்.

ஆனால் அந்த நேரத்தில் அன்பு சினிமா கைடு, கிளாமர் கிருஷ்ணமூர்த்தி சினிமா கைடு, 'அலை ஓசை' எம்.பி. மணி சினிமா கைடு என்று நிறைய சினிமா கைடுகள் இருந்தன.

அதனால் சினிமா மட்டுமல்லாமல், முக்கிய பிரமுகர்களைச் சேர்க்க முடிவு செய்தோம். டெலிபோன் டைரக்டரி எடுத்து பிரபலங்களையெல்லாம் வரிசைப்படுத்தினோம். அதில் எழுத்தாளர்களுடைய எண்ணிக்கையும், பத்திரிகையாளர்களுடைய எண்ணிக்கையும் அதிகமாக இருந்தன.

அடுத்து தலைமைச் செயலகத்துடனும், இந்திய அரசாங்கத்துடன் தொடர்பு கொண்டு சட்டமன்ற உறுப்பினர்களுடைய, நாடாளுமன்ற உறுப்பினர்களுடைய முகவரிகளைச் சேகரித்தோம்.

இதில் பெரிய தலைவலியான வேலை என்னவென்றால் - முகவரிகள் அடிக்கடி மாறிக் கொண்டு இருப்பது - திரைப்பட உலகத்தைச் சேர்ந்தவர்களின் முகவரிகள்தாம்.

இப்படி மாறுகிற முகவரிகளைச் சரி செய்து கொண்டே இருக்க வேண்டும். பத்திரிகையில் நடிகர் - நடிகையரின் பேட்டி வரும். அதில் 'இந்த இடத்தில் வசிக்கிறேன்' என்று தெரிந்ததும் - உடனே குறித்துக் கொள்வோம்.

முதல் பதிப்பு 1981 பிப்ரவரி மாதம் வெளியானது. அதில் நிறையத் தவறுகள் இருந்தன. அச்சிடப்பட்ட மையின் ஈரம் காய்வதற்குள்ளேயே வீட்டையும், அலுவலகத்தையும் மாற்றி விடுகிறார்கள் சிலர்.

வேறு சிலர் - குறிப்பாக எம்.பி. விஸ்வநாதன், 'பிரபலமானவர்களின் விலாசங்கள்' நூலில் என் பெயர் வேண்டாம்' என்றார். எழுத்தாளர்கள் சிவசங்கரியும், இந்துமதியும், 'என் போன் நம்பரை எடுத்து விடுங்கள்' என்றனர். இந்த மூன்று பேரும் கேட்டுக் கொண்டதை மற்றவர்கள் எல்லாரும் வரவேற்றார்கள்.

இப்போது எல்லாருடைய விலாசங்களையும் கம்ப்யூட்டரில் பதிவு பண்ணி வைத்துள்ளோம் அவ்வப்போது திருத்தங்கள் வரவர சரி செய்து வருகிறோம். அடுத்து 18 ஆவது பதிப்பு தயாராகிக் கொண்டு இருக்கிறது. இந்தப் புத்தகத்திற்கு ராயல்டி இல்லை என்ற குறை இருப்பது, நூலில் உள்ள ஐந்தாயிரம் பேருக்கும் கடிதம் எழுதித் தெரிவிக்கும் செலவிற்குச் சரியாகி விடுகிறது.

அந்த ஐந்தாயிரம் பேருக்கும் தபால் செலவு ஏழாயிரத்து சொச்சம் ரூபாய் ஆகும். இதுவே 'ராயல்டி' செலவாகி விடுகிறது. இதில்லாமல் போன் செய்து 'சரியான நம்பர்தானா?' என்று தெரிந்து கொள்ளும் செலவு வேறு.

தமிழ் நூல் பதிப்பில் இது ஒரு சிறப்பான புத்தகம் எனலாம். இந்த நூலில் விளம்பரம் சேர்த்து பிரசுரிக்கத்

தொடங்கினோம். நல்ல வரவேற்பு கிடைத்துள்ளது.

இன்றைய கால கட்டத்தில் தொழில் சம்பந்தப்பட்ட நூல்கள், மொழி நூல்கள், வாழ்வியல் முன்னேற்ற நூல்கள், அறிவியல் நூல்கள், 'கற்றுக் கொள்வது எப்படி?' என்ற நூல்களுக்கு எங்கள் மணிமேகலைப் பிரசுரத்தைப் பொறுத்தவரையில் நல்ல விற்பனையுள்ளது.

எதிர்காலத்தில் - கம்ப்யூட்டர் அறிவியல், குழந்தைகளுக்கான நூல்களைப் பிரசுரிக்க இருக்கிறோம்.

சமீபத்தில் ஒரு விளம்பரம் கொடுத்தோம். நல்ல நூல் தலைப்புகளை எழுதி அனுப்பினால் 200 ரூபாய் பரிசளிக்கிறோம் என்று அறிவித்தோம். மொத்தப் பரிசுத் தொகை ரூ. 5000/- அருமையான தலைப்புகள் கிடைத்துள்ளன. அந்தத் தலைப்புகளில் நூல்களைப் பிரசுரிக்க உள்ளோம்.

தமிழ்வாணன் தன் எழுத்துகளைப் பதிப்பித்துக் கொள்ள தன் மனைவி பெயரில் தொடங்கியதுதான் 'மணிமேகலைப் பிரசுரம்'. 1956 இல் தொடங்கினார். அவருடைய இலட்சியமே, கறுப்பு கண்ணாடியும், தொப்பியும் உள்ள இலச்சினைதான்.

எழுத்தாளருடைய பெயரை இருட்டடிப்பு செய்ய வேண்டும் என்பது எங்கள் நோக்கமல்ல. 1977 ஆம் ஆண்டிற்குப் பிறகு - தந்தையாருடைய மறைவுக்குப் பிறகு எல்லா எழுத்தாளர்களுடைய நூல்களையும் வெளியிடத் தொடங்கினோம். இதுவரை 3000 தலைப்புகளில் நூல்களைப் பதிப்பித்துள்ளோம். 1600 தலைப்புகள் விற்பனையில் உள்ளன. 1600 தலைப்புகள் உள்ள நூல்கள் ஒரு செட் வாங்கினால் 26,000/- ரூபாய்.

இன்றைக்கு வந்த கடிதங்களின் எண்ணிக்கை மட்டும் 380. நாளைக்குக் காலையில் 380 வி.பி.பி. பார்சல்கள் போகும். போயாக வேண்டும் என்பதில் நாங்கள் கண்டிப்பாக இருப்போம். விற்பனைக்குக் காரணம் விளம்பரங்கள்தாம். நூல் விற்பனைக்கும் விளம்பரம் தேவை. விளம்பரம் இருப்பதுடன் நல்ல 'சப்ஜெக்டும்' தேவை.

வெளிநாடுகளிலும், இலங்கையிலும், அரபு நாடுகள், சிங்கப்பூர், மலேசியா போன்ற நாடுகளில் எங்கள் பதிப்பகத்திற்கு நல்ல வரவேற்பு இருக்கிறது".

மெத்தப் படித்தவர்களுக்கு மட்டுமல்லாமல் எளிய பாமர வாசகருக்கும் புரியும் வகையில், எந்தக் கடினமான வாசகத்தையும் எளிமைப்படுத்தி - சின்னச் சின்ன வாக்கியங்களாக அமைத்து, தெளிவாகச் சொல்வது எங்கள் தனிச் சிறப்பு. இதற்கென்றே லேனா தமிழ்வாணன் அவர்களைப் பதிப்பாசிரியராகக் கொண்ட ஏழு பேர் அடங்கிய புலவர் குழு ஒன்று இயங்கி வருகிறது.

மேலும், 1926 முதல் 1990 வரையுள்ள பஞ்சாங்கங்களும், 2000ஆம் ஆண்டு முடிய உள்ள எதிர்காலப் பஞ்சாங்கமும் எங்களிடம் மட்டுமே கிடைக்கும் என்பது குறிப்பிடத் தக்கது. தக்கவர்களைக் கொண்டு மிகவும் துல்லியமாகத் தொகுத்து இவற்றை நாங்கள் சிறப்புற வெளியிட்டிருக்கிறோம்." என்று கூறி முடித்தவரிடமிருந்து விடை பெறும் போது, 'வெற்றிகரமான புத்தகப் பதிப்பாளராவது எப்படி?' என்று கூட ஒரு புத்தகம் எழுதலாம் போலத் தோன்றுமளவுக்கு அவர்களது வளர்ச்சி இருந்து வருவதை அறிந்து மகிழ்ந்து, வாழ்த்தி விட்டுப் புறப்பட்டோம்.

— கு.சண்முகசுந்தரம் - நாகராஜகுமார்


● "ஓர் ஆளில்லாத் தீவில் தனித்து விடப்பட்டால் என்ன புத்தகம் வேண்டும் என்று விரும்புவீர்கள்?" என்று ஒரு ரசிகர் ஜி.கே. செஸ்டர்டனிடம் கேட்டபோது, அவர் அளித்த பதில் : "கப்பல் கட்டும் பயிற்சி பற்றி தாமஸின் வழிகாட்டும் நூல்" என்றார்.

● நூலக உலகில் டாக்டர் எஸ்.ஆர். ரங்கநாதன் மிகப் பிரசித்தமானவர். நூலக விஞ்ஞானத்துக்குத் தந்தையான அவர் ஒரு நல்ல நூலகத்தை உருவாக்குவதற்கான வழிவகைகளைக் கண்டறிந்தார். இந்தியாவில் நூலக விஞ்ஞானத்துக்கு உயிர் கொடுத்த மேதை எஸ்.ஆர். ரங்கநாதன் என்றால் அது மிகையாகாது. அவர் சீர்காழியில் 1892 ஆம் ஆண்டு ஆகஸ்ட் 12 ஆம் தேதி பிறந்தார். சென்னை சர்வகலாசாலை 1924 ஆம் ஆண்டு அவரை நூலகராக அமர்த்தி நூலக விஞ்ஞானத்தைப் பற்றிக் கண்டறிய வழி வகுத்தது. 1925 ஆம் ஆண்டு எஸ்.ஆர். ரங்கநாதன் லண்டனில் நூலக விஞ்ஞானத்தில் பட்டதாரியாகி, அங்கு டபிள்யூ.சி. பெர்விக் சாயர்ஸ் என்ற நூலக வித்தகரைச் சந்தித்தார். எஸ்.ஆர். ரங்கநாதன் நூலகத் துறையில் 1934 ஆம் ஆண்டு 'Classified Catalogue Code' என்ற புதிய நுணுக்கத்தை வழங்கினார்.

ஆசிய வெளியீட்டு நிறுவனம், 1931இல் எஸ்.ஆர். ரங்கநாதன் அவர்களின், 'நூலக விஞ்ஞானத்தில் ஐந்து சட்டங்கள்' என்ற பிரசித்தமான நூலை வெளியிட்டது. ஒரு நல்ல நூலகத்துக்கான ஐந்து சட்டங்களை உருவாக்கித் தந்தார் நூலக மேதை.

1972 செப்டம்பர் 28ஆம் தேதி அமரவாழ்வு எய்திய டாக்டர் எஸ்.ஆர். ரங்கநாதனின் இழப்பு நூலகத் துறைக்குப் பெரும் இழப்பாகும்.

உலக மொழிகளில் உள்ள சிறந்த இலக்கியங்கள் தமிழில்...



"தென்னிந்தியப் புத்தக விற்பனையாளர்கள்-பதிப்பாளர்கள் சங்கத்தின் முக்கிய நோக்கமே புத்தகக் காட்சியை வெற்றிகரமாக நடத்துவது தான்" என்று பேசத் தொடங்கினார். 18-ஆவது புத்தகக் காட்சியைச் சிறப்பான முறையில் நடத்தி முடித்திருக்கும் அகிலன் கண்ணன்.

தென்னிந்தியப் புத்தக விற்பனையாளர்கள்-பதிப்பாளர்கள் சங்கத்தின் செயலாளராகவும், தமிழ்ப் புத்தகாலயம், தாகம், பூஞ்சோலை பதிப்பகத்தைத் திறம்பட நடத்தி வருபவருமான அகிலன் கண்ணன் மேலும் தொடர்ந்தார்.

"புத்தக விற்பனையாளர் களுக்கும் பதிப்பாளர்களுக்கும் ஏற்படக் கூடிய பிரச்னைகளுக்குத் தீர்வு காண்பது, அரசாங்கத்துடன் நல்ல உறவை வைத்துக் கொள்வது போன்ற தொழில் ரீதியான அமைப்பாகவும் சங்கம் செயல்பட்டு வருகிறது. தென்னிந்தியப் புத்தக விற்பனையாளர்கள்-பதிப்பாளர்கள் சங்கத்தின் மூலம் நடத்தப்படும் புத்தகக் காட்சிக்கு மக்களிடம் நல்ல வரவேற்பு இருக்கிறது. சங்கத்தின் பின்னணி பழைமையானது. முதல் புத்தகக் காட்சியில் 14 உறுப்பினர்கள் பங்கு கொண்டனர். இப்போது 18-ஆவது புத்தகக் காட்சி நடந்த காயிதே மில்லத் கல்லூரி வளாகத்தில் உள் அரங்கத்தில் முதல் புத்தகக் காட்சி ஆரம்பமானது. 18-ஆவது புத்தகக் காட்சியில் 124 பேர் பங்கு கொண்டனர். இன்னும் பலர் இடம் பெறவிருந்தனர். ஆனால் இடம் தர இயலவில்லை. இது தவிர 4 அரங்குகள் கேட்டவர் களுக்கு 2 அரங்குகளை மட்டுமே தர முடிந்தது.

இது ஒரு நல்ல வளர்ச்சி. தெலுங்கு பதிப்பாளர்கள், கன்னடப் பதிப்பாளர்கள், ஆங்கிலப் பதிப்பாளர் களும் பலர் கலந்து கொண்டனர்.

அகில இந்திய அளவில் எடுத்துக் கொண்டால் சென்னை புத்தகக் காட்சி ஒரு குறிப்பிடத் தகுந்த நிலையை அடைந்துள்ளது. முதல் இடம் கல்கத்தா புத்தகக் காட்சி, இரண்டாவது சென்னை புத்தகக் காட்சி."

"சென்னை புத்தகக் காட்சியில் இன்னும் பலர் கலந்து கொள்ள இடம் கேட்டதாகச் சொன்னீர்கள். ஏன் இடம் தர முடியவில்லை?"

"அரசாங்கத்திடம் கேட்கத்தான் எங்களால் முடிந்தது. கொடுக்க வேண்டியது அரசாங்கத்தின் பொறுப்பு. சாதாரணமாக புத்தகக் காட்சியைப் பற்றிப் பேசத் தொடங்கினாலே மழை வந்து விடும் என்று பேசிக் கொள்வார்கள். ஜனவரி மாதத்தில் மழையே பெய்யாது. ஆனால் இந்தப் புத்தகக் காட்சி வைத்ததும், இந்த முறையும் நாலு நாள்கள் நல்ல மழை. இரண்டு வருடங்களுக்கு முன்பு தீ விபத்து. எந்த நிமிஷத்தில் என்ன நடக்குமோ என்ற பயத்துடனே புத்தகக் காட்சியை நடத்த வேண்டிய சூழ்நிலை இருக்கிறது.

வர்த்தக ரீதியாக-பணமும் நல்ல முறையில் வசூலாகும் தோல் பொருட்காட்சிக்கு அரசாங்கம் சிறந்த முறையில் இட வசதியைச் செய்து தருகிறது. நல்ல விஷயம்தான்.

அதே மாதிரி அறிவுப் பசிக்குத் தீனி போடக் கூடியது புத்தகக் காட்சிதான். அதற்காக நமது தமிழக அரசாங்கம் ஒரு நிரந்தரமான நல்ல இட வசதியைச் செய்து தர முன் வர வேண்டும். ஆறு மாதத்திற்கு ஒரு முறை பதினைந்து-பதினைந்து நாள்கள் கொடுத்தால் போதும். இப்போது நடக்கிற புத்தகக் காட்சி பாதுகாப்பு இல்லாத இடத்தில்தான் நடக்கிறது.

காயிதே மில்லத் கல்லூரி வளாகம் பொது மக்கள் ஒன்று கூடுகிற நல்ல இடமே. இது போதும். அத்துடன் புத்தகம் எல்லாம் மழை நீரில் நனையாமல், தீயினால் அழியாமல் இருக்கக் கூடிய கட்டிய இடமாகத்தான் நாங்கள் கேட்கிறோம்."

"இந்த 18 ஆண்டுகளில் புத்தகக் காட்சியின் வளர்ச்சி எப்படி இருக்கிறது?"

"பங்கு கொள்கிறவர்களின் எண்ணிக்கை அதிகமாகியுள்ளது. விற்பனை ரீதியில் வளர்ந்து வந்த புத்தகக் காட்சி கடந்த இரண்டு வருடங்களாக ஒரு தேக்க நிலையை அடைந்துள்ளது. தேக்க மென்றால்-பொது மக்களின் வருகை குறைந்துள்ளது. இதற்குக் காரணம் விஷுவல் மீடியத்தின் வருகையாக இருக்கும் என்பது எனது எண்ணம்!" என்ற அகிலன் கண்ணனின் தமிழ்ப் புத்தகாலயம், தாகம், பூஞ்சோலையின் வெளியீடுகள் பல பரிசுகளை வாங்கிக் குவித்துள்ளன.

→

பதிப்பகத் தொழிலுக்கு வந்த காரணத்தை விவரிக்கத் தொடங்கினார். "தந்தையார் சிறந்த எழுத்தாளராக-ஞானபீடப் பரிசு பெற்ற எழுத்தாளராக இருந்தது மூல காரணம். பள்ளி-கல்லூரி நாள்களிலேயே பத்திரிகைகளின் மேல் ஆர்வம் இருந்தது. 'தேன் மழை' என்ற இண்டர்-காலேஜ் பத்திரிகை



நடத்தினோம். என் இலக்கியத் தாகம் தொடங்கியது அங்கே தான்.

அப்பாவும்-மாமனார் கண. முத்தையாவும் எழுத்தாளர்-பதிப்பாளர் என்ற முறையில் நல்ல உறவில் இருந்தார்கள். அது சம்பந்தி உறவானது.

சி.ஏ. படித்துக் கொண்டிருந்தேன். பதிப்புத் தொழிலில் நிறைய ஈடுபாடு வந்து விட்டேன். மாமனாருடைய தமிழ்ப் புத்தகாலயம். அப்பா இருக்கும்போது நான் தொடங்கியது தாகம்.

நிறைய எழுத்தாளர்கள் தமிழ்ப் புத்தகாலயத்தில் தமது நூல்கள் வெளிவர வேண்டும் என்று விரும்புவார்கள். ஆனால் மாமாவின் பாரம்பரியமான பதிப்பகத்தில் செய்ய முடியவில்லை. அப்படிப்பட்ட நல்ல எழுத்தாளர்கள், நண்பர்கள் நூல்களை தாகமும், பூஞ்சோலையும் வெளியிட்டன

என்னைப் பொறுத்தவரை எனது பதிப்பகத்தில் படைப்பிலக்கியங்களுக்கு நல்ல வரவேற்பு இருக்கிறது. முதலிடம் நாவல், சிறுகதைகளுக்கு - அடுத்து, கவிதை நூல்களைச் சொல்லலாம். நல்ல படைப்பிலக்கியங்களை வெளியிடுகிற பதிப்பகமாகப் பெயர் எடுத்துள்ளது, மகிழ்ச்சியைத் தருகிறது. 1947-இல் தொடங்கிய தமிழ்ப் புத்தகாலயத்தில் 2000 தலைப்புகளிலும், தாகத்தில் 300 தலைப்புகளிலும், பூஞ்சோலையில் 75 தலைப்புகளிலும் நூல்களைப் பதிப்பித்துள்ளோம்." என்ற அகிலன் கண்ணனிடம் எதிர் காலத் திட்டத்தைப் பற்றிக் கேட்டோம்.

"உலகில் உள்ள சிறந்த நூல்களை-இலக்கியங்களை மொழி பெயர்த்து வெளியிட வேண்டும்; பழைய இலக்கியங்களில் பேசப்பட்ட நல்ல இலக்கியங்களைப் புதுப்பித்து வெளியிட வேண்டும் என்பது என் லட்சியமாக இருக்கிறது. நிச்சயம் தெரியும், விற்பனை குறைவாக இருக்கும்; வருமானத்தை எதிர்பார்க்க முடியாது. ஆனாலும் செய்ய வேண்டும்." என்றார்.

சின்னத் திரையில், இவரது பதிப்பகத்தின் மூலம் வெளியான ஒன்பது நாவல்கள் தேர்வு செய்யப்பட்டு ஒளிபரப்பாகவுள்ளன. சிறந்த சிறுகதை எழுத்தாளராகவும் விளங்கும் அகிலன் கண்ணனின் லட்சியங்கள் நிறைவேறும் நாள் வெகு தூரத்தில் இல்லை.

- நாகராஜகுமார்

84, டி.டி.கே. சாலை, சென்னை- 600018- இல் உள்ள 'தமிழ் அரசி' அச்சகத்தில் அச்சிடப்பட்டு, ஸ்ரீராம் டிரஸ்ட்- 600001- சார்பில் வெளியிட்டவர் ஏ.வி.எஸ்.ராஜா. ஆசிரியர்: கலைமாமணி விக்கிரமன். நிர்வாக அலுவலகம்: 145, லிங்கச் செட்டி தெரு, த.பெ.எண்: 5043, சென்னை- 600 001. தொலைபேசி: 5228545, 510535.